सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2020 - 2021

### திரு வே. நாராயணசாமி

மாண்புமிகு முதலமைச்சர்



# வரவு – செலவுத் திட்ட உரை

# 2020-21

–

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை. (குறள்–478)

அரசுக்குப் பொருள் வருவாயின் அளவு குறைவாக இருப்பினும், செலவு கட்டுக்குள் இருப்பின், அதனால் தீங்கொன்றுமில்லை.

*மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !*

*வணக்கம்!*

**நா**ன் 2020-21ஆம் ஆண்டிற்கான எனது அரசின் வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாண்புமிகு அவையில் தற்போது சமர்ப்பிக்க உள்ளேன். பெருமை வாய்ந்த இந்த அவையில் நமது அரசின் சார்பில் என்னால் தொடர்ந்து சமர்ப்பிக்கப்படும், ஐந்தாவது வரவு-செலவுத் திட்ட அறிக்கை இது என்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2021ஆம் ஆண்டில் சட்டப்பேரவைக்குப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இது இந்த அரசின் இறுதி வரவு-செலவுத் திட்டம் என்பதால் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

2. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 2020-21ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்கக் குறிப்பு அறிக்கை ஆகியவற்றின் பிரதிகள் தனியாக வழங்கப்பட உள்ளன.

3. நமது அரசு தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்கள் அளித்துவரும் ஊக்கங்களையும், நல்வாழ்த்துக்களையும் மற்றும் எங்கள் அருமை இளம் தலைவர் திருமிகு ராகுல் காந்தி அவர்களின் அன்பான வழிகாட்டுதல்களையும் இந்தத் தருணத்தில் நான் நன்றியுடன் நினைவு கூர விரும்புகிறேன். மேலும், முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆசிகளோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தளபதி திருமிகு மு.க. ஸ்டாலின் மற்றும் ஏனைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வழங்கிவரும் பேராதரவிற்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

4. பெருமை வாய்ந்த இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக அளித்துவரும் ஒத்துழைப்பு, மதிப்புமிக்க ஆலோசனைகள் மற்றும் உறுதியான ஆதரவு ஆகியவற்றிற்கு நான் இந்தத் தருணத்தில் அரசின் சார்பில் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்

கொள்கிறேன். எனது அரசிற்கும் குறிப்பாக எனக்கும் உறுப்பினர்களின் அன்பும், ஆதரவும் தொடர் வலிமையை அளித்து வந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

**5.** நமது நாட்டின் மற்ற பகுதிகளைப் போல் புதுச்சேரி ஆட்சிப்பரப்பும் கொரோனா வைரஸின் தாக்குதலில் இதுவரை கண்டிராத நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. இருந்தபோதிலும், அரசின் இடைவிடாத முயற்சிகளால், கொரோனா வைரஸ் பரவுதல் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தினசரி அதிகப்படியான விகிதாசாரத்தில் கொரோனா பரிசோதனை செய்யும் மாநிலங்களில் ஒன்றாக நமது புதுச்சேரி தற்போது திகழ்கிறது. இதற்காக இரவு பகல் பாராது உழைக்கும், மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள், மாவட்ட நிருவாகம், காவல் துறையினர், குடிமைப்பொருள் வழங்குதுறை ஊழியர்கள், மின்துறை, உள்ளாட்சித் துறை ஊழியர்கள், பொதுப்பணித் துறை ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், துப்புரவு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தி, இவ்வாட்சிப்பரப்பு மக்களை நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாத்திட எனது அரசு, அனைத்து நடவடிக்கைகளையும் உரிய அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ளும் என இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

6. கொரோனா வைரஸ் நோய்த் தாக்குதல் மற்றும் பரவுதல் காரணமாக இந்தியா முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாக புதுச்சேரி ஆட்சிப் பரப்பின் பொதுமக்கள் அனைவரும் பொது முடக்கத்துக்கு உட்பட்டதால், ஏற்பட்ட அனைத்துக் குடும்பங்களின் சிரமங்களைப் போக்குவதற்காக எனது அரசு அனைத்து குடும்ப உணவு பங்கீட்டு அட்டைதாரர்களுக்கும் வங்கிகள் மூலம் தலா ₹ 2,000 வழங்கியது. இவ்வாறு வழங்கியதில் சுமார் 68.26 கோடி புதுச்சேரி மாநில மக்களுக்காகச் செலவிடப்பட்டது. இந்த ₹ 2,000த்துடன் கூடுதலாக கட்டுமானத் தொழிலாளர்கள் அனைவருக்கும் தலா ₹ 2,000 வழங்கப்பட்டுள்ளது. சுமார் 35,000 கட்டுமானத் தொழிலாளர்கள் இதனால் பலனடைந்துள்ளனர். இதற்காக சுமார் ₹ 8 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதுபோன்று அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு தலா ₹ 1,000 கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 25,000 அமைப்புசாராத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ₹ 2.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து சிவப்பு அட்டைதாரர்களுக்கும் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 5 கிலோ அரிசி வீதம் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரியிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் முதல் காலாண்டுக்கான விவசாய மானியம் தலா ₹ 5,000 வழங்கியது உள்ளிட்ட பல உடனடி

நடவடிக்கைகள் எனது அரசால் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். பொது மக்களின் ஒத்துழைப்போடு, புதுச்சேரி ஆட்சிப்பரப்பை கொரோனா நோய் இல்லாத பிரதேசமாக மாற்றுவதற்கு எனது அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வெற்றியடையும்.

**7.** இவ்வாட்சிப்பரப்பு கொரோனா தொற்றுநோயால் ஏற்பட்ட முழு ஊரடங்கு, தொழில் பணி முடக்கம், வேலை பாதிப்பு உள்ளிட்ட காரணங்களாலான குறைந்த வருவாயுடன் கடுமையான நிதித் தட்டுப்பாட்டைத் தற்பொழுது சந்தித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் நிதித் தட்டுப்பாடு தொடர்பான காரணங்களை ஏற்கனவே நன்கு அறிந்திருந்தாலும், அரசு எதிர்கொண்டு வரும் சில நிதி சம்பந்தப்பட்ட முக்கியப் பிரச்சனைகளை இங்கே நான் கூற விழைகின்றேன்.

(i) இவ்வாட்சிப்பரப்பை மத்திய அரசின் 15ஆவது நிதிக்குழுவின் வரம்புக்குள் கொண்டு வருவதற்கு மத்திய அரசிடம் பலமுறை கோரிக்கைகள் வைத்தபோதிலும், மத்திய அரசு அதனை இதுவரை ஏற்கவில்லை. சென்னையில் உள்ள புகழ்பெற்ற பொருளாதாரக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான “மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ்” மேற்கொண்ட ஆய்வில், இவ்வாட்சிப்பரப்பை

15ஆவது நிதிக்குழுவின் வரம்புக்குள் கொண்டு வந்தால், தற்போது புதுச்சேரி அரசுக்கு மத்திய அரசின் நிதி உதவியாக கிடைக்கும் ₹ 1,700 கோடிக்குப் பதில் சுமார் ₹ 2,800 கோடி வரை அதிகமாகக் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளது. இந்த ஆய்வறிக்கை உள்துறை அமைச்சகம் மற்றும் நிதி அமைச்சகத்தின் பரிசீலனைக்காக எனது அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ii) 1-7-2017 முதல் இவ்வாட்சிப்பரப்பில் சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு புதுச்சேரி அரசுக்கு வரி வருவாயைச் சொந்தமாக நிர்ணயிக்கும் அதிகாரம் இல்லை. பொருட்கள் மற்றும் சேவைகள் தயாரிக்கப்படும் இடத்திற்குப் பதிலாக, அவை நுகரப்படும் இடத்தில் வரி விதிக்கப்படும் முறையான 'சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறைக்கு' மாறியதால் புதுச்சேரி உள்ளிட்ட உற்பத்தி செய்யும் மாநிலங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்கு முந்தைய வரி விதிப்பு முறையில் மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் வர்த்தகத்தில் வசூலிக்கப்பட்ட மத்திய விற்பனை வரி

(Central Sales Tax) பொருட்களை உற்பத்தி செய்யும் மாநிலங்கள் /யூனியன் பிரதேசங்களுக்கு சென்றடையும். இதற்கு மாறாக, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையில் (GST) மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் வர்த்தகத்தில் வசூலிக்கப்படும் மாநிலங்களுக்கு இடையேயான சரக்கு மற்றும் சேவை வரி (IGST), பொருட்களை நுகரும் மாநிலத்திற்கு சென்றுவிடுகிறது. புதுச்சேரி மாநில மொத்த உற்பத்தியில் சேவை சம்பந்தப்பட்ட தொழில்களின் பங்களிப்பு குறைவாக உள்ளதால், இதன் மூலம் கிடைக்கும் வருமானம் மத்திய விற்பனை வரி (CST) இழப்பால் ஏற்பட்ட வருவாயை ஈடு செய்யப் போதுமானதாக இல்லை.

(iii) 2007ஆம் ஆண்டு புதுச்சேரி அரசு தனியாகப் பொதுக்கணக்குத் தொடங்கப்படுவதற்கு முன்பு பெறப்பட்ட கடன் ₹ 2,177 கோடி நமக்கு ஒரு பெரிய கடன் சுமையாகும். இந்த நிலுவைக் கடனைத் தள்ளுபடி செய்ய எனது அரசு பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும் அவற்றை ஏற்க மத்திய அரசு மறுத்து வருகிறது.

(iv) இவ்வாட்சிப்பரப்பிற்கு, தற்போது மத்திய அரசின் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கப்படும் நிதியின் விகிதாசாரமான 60:40 என்பதற்கு பதிலாக மற்ற யூனியன் பிரதேசத்திற்கு வழங்கப்படும் நிதி விகிதாசாரமான 90:10 அதாவது 90 விழுக்காடு மத்திய அரசு பங்கு மற்றும் 10 விழுக்காடு மாநில அரசு பங்கு என்பதைப் போல் புதுச்சேரி ஆட்சிப்பரப்பிற்கும் நிதி வழங்கப்படவேண்டும். இது மாநில அரசின் நிதிச் சுமையைப் பெருமளவில் குறைக்கும். எனது அரசு இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகின்றபோதிலும், மத்திய அரசு இது தொடர்பாக எந்த ஒரு முடிவையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

**8.** இருப்பினும் எனது அரசு மேற்கூறிய நமது நியாயமான கோரிக்கைகளைப் பல கட்டங்களில் மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசு, நமது கோரிக்கைகளை வரும் நாட்களில் சாதகமாகப் பரிசீலிக்கும் என நான் நம்புகிறேன்.

**9.** 2020-21ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட மொத்த வரவு-செலவுத் திட்டமதிப்பீடு ₹ 9,000 கோடி ஆகும்.

இதில், மாநில நிதி ஆதாரங்கள் ₹ 5,267 கோடியாகவும் (59 விழுக்காடு), மத்திய நிதி உதவித் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கும் நிதியையும் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி (Central Assistance) ₹ 2,023 கோடியாகவும் (22 விழுக்காடு) உள்ளன. மீதமுள்ள ₹ 1,710 கோடி (19 விழுக்காடு) வெளிச்சந்தைக் கடன் (Market borrowings) மற்றும் மத்திய நிதி நிறுவனங்களின் மூலம் திரட்டப்படும்.

**10.** அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளிட்ட முக்கிய செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2020-21ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 9,000 கோடியில், ₹ 1,966 கோடி சம்பளங்களுக்கும் (21.84 விழுக்காடு), ₹ 1,177 கோடி ஓய்வூதியங்களுக்கும் (13.07 விழுக்காடு), ₹ 1,625 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (18.06 விழுக்காடு), ₹ 1,525 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (16.94 விழுக்காடு) ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசின் மற்ற முக்கிய செலவினங்களான முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு ₹ 896 கோடியும் (9.96 விழுக்காடு), அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தன்னாட்சி உயர் கல்வி நிறுவனங்கள்,

பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 864 கோடியும் (9.60 விழுக்காடு) ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**11.** புதுச்சேரி அரசு, 2010-11ஆம் நிதி ஆண்டில் வாங்கிய வெளிச்சந்தைக் கடன் தொகை ₹ 600 கோடியை 2020-21 நிதியாண்டில் செலுத்த வேண்டியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். இது நமக்குத் தவிர்க்கமுடியாத ஒரு பெரும் நிதிச் சுமையாகும். இருப்பினும், இவ்வரசு கடந்த வருடங்களில் பெற்ற கடனை முறையாகத் திருப்பிச் செலுத்தியதுபோல் இந்த நிதி ஆண்டிலும் உரிய காலத்தில் முதிர்ச்சியான கடன் தொகையைக் குறித்த காலத்திற்குள் முறையாகத் திருப்பிச் செலுத்தும்.

**12.** கடந்த 2019-20ஆம் நிதியாண்டில் நமது செலவினம் ₹ 7,927 கோடியாகும். இது 2019-20இன் திருத்திய மதிப்பீட்டின்படி 93 விழுக்காடு ஆகும். சரக்குகள் மற்றும் சேவை வரி இழப்பீட்டுத் தொகையான (GST Compensation) ₹ 360 கோடியை மத்திய அரசு உரிய காலத்தில் வழங்காதது, நமது செலவினம் சற்றுக் குறைந்ததற்கு முக்கியக் காரணமாகும்.

**13.** நான் இந்த 2020-21ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது சம்பந்தப்பட்ட அனைத்து விதமான காரணிகள் மற்றும் பல தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட

சீரிய ஆலோசனைகளையும் கவனமுடன் பரிசீலித்துள்ளேன். இவ்வாட்சிப்பரப்பின் வருவாய்ச் செலவினங்கள் பல வருடங்களாகத் தொடர்ந்து கணிசமாக உயர்ந்து கொண்டே வருகிறது. எனவே, கிடைக்கக்கூடிய வருவாய், வளர்ந்து வரும் மூலதனச் செலவிற்கானத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. பொதுச் செலவினங்களை வரைமுறைப்படுத்தும் நிதிநிலைக் குறியீடுகள் அதன் வரையறைக்குள் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நமது அரசின் அத்தியாவசியமான செலவுகள் மற்றும் நமது அரசின் வருவாய் ஆகியவற்றிற்கிடையில் சமநிலையை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உருவாக்க நான் முயற்சித்துள்ளேன்.

**14.** கிராமப்புறத் தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொருளாதார ரீதியாக அவர்களின் வருமானத்தைப் பெருக்கவும் எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க உள்ளது. நானும் எனது சக அமைச்சர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் தேசிய உடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் அதிகாரிகள், முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி அதிகாரிகள் மற்றும் நபார்டு வங்கி அதிகாரிகள் ஆகியோருடன் பல முறை சட்டமன்ற வளாகத்தில் கூட்டங்கள் நடத்தி புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் விவசாயிகள், தொழில் முனைவோர்கள், வியாபாரிகள்,

மாணவர்கள், தொழிலாளர்கள், நலிவடைந்தோர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வங்கிக் கடன் வழங்குவது தொடர்பாகவும் இதனை சுலபமாக்குவதற்கும் நல்ல முடிவுகளை எடுத்துள்ளோம். இதன் மூலம் புதுச்சேரியில் நடப்பு 2020-21ஆம் நிதி ஆண்டில் வங்கிகள் மூலம் நீர்ப் பாசன வசதி, நிலம் மேம்படுத்துதல், விவசாயப் பண்ணைக் கருவிகள் வாங்குதல், தோட்டக் கலை, காடு வளர்ப்பு, பால் பண்ணைத் திட்டம், கோழி வளர்ப்புத் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம், மீன் வளர்ப்புத் திட்டம், தானிய சேமிப்பு கிடங்கு கட்டும் திட்டம், உணவு பதப்படுத்துதல் திட்டம், விவசாயிகளுக்குக் கடன் வழங்குவது உள்ளிட்ட வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளுக்கு ₹ 1703.21 கோடியும், சிறு குறு நடுத்தரத் தொழில்கள் மேம்பட ₹ 836.08 கோடியும், ஏற்றுமதியை ஊக்குவிக்க ₹ 40 கோடியும், கல்விக் கடனுக்காக ₹ 86.75 கோடியும், வீடுகள் கட்டுவதற்காக ₹ 217.48 கோடியும், புதுப்பிக்கவல்ல எரிசக்தியை மேம்படுத்துவதற்கு ₹ 18.34 கோடியும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ₹ 150 கோடியும் மற்ற செலவினங்களுக்காக ₹ 230 கோடியும் ஆக மொத்தம் நடப்பு நிதி ஆண்டில் வங்கிகளின் மூலம் ₹ 3,281.86 கோடி கடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**15.** தொடர்ந்து ஐந்தாவது முறையாக இந்த அவையின் முன் சமர்ப்பிக்கும் இந்த நிதி அறிக்கையானது உலகம் முழுதும் கொரோனா நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராடிக்

கொண்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்படுகிறது என்பது இந்த மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. இதன் பொருட்டு, பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைவரின் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும் பாதுகாக்கவும் தொழில்முனைவோர், விவசாயிகள், மீனவர்கள், வியாபாரிகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், நலிவடைந்தோர் மகளிர் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு இந்த நிதி நிலை அறிக்கையில் 'நம்மாழ்வார் வேளாண் புத்தாக்கத் திட்டம்', 'பண்டித ஜவஹர்லால் நேரு கால்நடை புத்தாக்கத் திட்டம்', டாக்டர் கலைஞர் கருணாநிதி பால் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம், 'மேம்படுத்தப்பட்ட ராஜீவ்காந்தி காலை சிற்றுண்டி மற்றும் ஊட்டச்சத்துத் திட்டம்', 'பெருந்தலைவர் காமராசர் மாணவர் நல நிதித் திட்டம்' அனைவருக்குமான 'அன்னை இந்திரா காந்தி மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்', 'தந்தை பெரியார் கிராமப்புற மகளிர் மறுமலர்ச்சித் திட்டம்', 'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மீனவர் புத்தாக்கத் திட்டம்', 'அண்ணல் டாக்டர் அம்பேத்கர் ஆதிதிராவிடர் பழங்குடியினர் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்' 'தேசப்பிதா மகாத்மா காந்தி கல்வி நகரத் திட்டம்' போன்ற புதிய திட்டங்களையும் மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு குடிநீருக்கான வரி ரத்து செய்யப்பட்டு, விலையில்லா

இலவசக் குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் பிரதி மாதம் 100 யூனிட்டுகளுக்கு குறைவாக மின்சாரம் உபயோகிக்கும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் போன்ற மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களையும் உள்ளடக்கிய இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கான முன்னுரையுடன், 2020-21 நிதியாண்டுக்கான துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் இம்மன்றத்தில் சமர்ப்பிப்பேன் என்று கூற விரும்புகிறேன்.

**வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்**

**16.** உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை. (குறள்-1036)

அதாவது உழுபவர் கைமட்டும் வேலை செய்யாது இருந்துவிட்டால், எல்லோரும் விரும்பும் உணவையும் நாம் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவியரும் கூட அவரது அறத்தில் நிலைத்து நிற்க முடியாது என்பது திருவள்ளுவரின் வாக்கு.

**17.** இதைக் கருத்தில் கொண்டு எனது அரசு வேளாண் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கவும், விவசாயிகளுக்கு ஊக்கமளித்து அவர்களை வேளாண் தொழிலில் நிலைநிறுத்தவும் பல்வேறு நலத்திட்டங்களைக் கடந்த ஆண்டு நடைமுறைப் படுத்தியது. விவசாயிகளுக்கு சாகுபடி மானியமாக மட்டும் கடந்த ஆண்டு ₹ 11.16 கோடி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் எனது அரசு அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ₹ 25,000 நேரடி மானியமாக கடந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருவது தொடரும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**18.** காரைக்கால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வாயிலாக காரைக்கால் பகுதி விவசாயிகள் பருத்திக்கு கடந்த காலங்களைக் காட்டிலும் ஒரு குவிண்டாலுக்கு ₹ 1,000 வரை அதிகமான விற்பனை விலை பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது. மேலும், புதுச்சேரி பகுதி தட்டாஞ்சாவடியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தென்னிந்தியாவிலேயே முதலாவதாகத் தொடங்கப்பட்ட பலவித வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்தும் தேசிய மின் சந்தையாகும். இத்திட்டத்தின் மூலம் பலவித தரமான விளை பொருட்கள் முறையாக சந்தைப் படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு நல்லவிலை கிடைத்துள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் இந்திய உணவுக்கழகம் (FCI) மூலமாக நேரடி நெல் கொள்முதல் செய்ய எனது அரசு உரிய தொடர் நடவடிக்கை எடுத்திருப்பது விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பிற்கு பயிர்க் காப்பீடாக ₹ 7 கோடி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19.** எனது அரசு மேற்கொண்ட சீரிய விவசாயிகள் நலன் சார்ந்த பல திட்டங்கள் தற்போது நிலவும் கொரோனா பெரும் தொற்றுக் காலத்திலும் விவசாயிகள் தங்கள் தொழிலைச் சிறப்பாக மேற்கொள்ளப் பேருதவியாக இருந்து வருகிறது என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**20.** மேலும், எனது அரசு பரிட்சார்த்த அடிப்படையில் செயல்படுத்திய சாகுபடி நேரடி மானியத்திட்டம் உள்ளிட்ட விவசாயிகளின் நலன் சார்ந்த திட்டங்களை தற்போது விரிவுபடுத்தி 'நம்மாழ்வார் வேளாண் புத்தாக்கத் திட்டம்' (Nammaazhvar Agricultural Rejuvenation Mission) என்ற புதிய திட்டத்தை கீழ்க்கண்டவாறு கூடுதல் மானியங்களுடன் நடப்பு நிதி ஆண்டில் செயல்படுத்த உள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய நம்மாழ்வார் வேளாண் புத்தாக்கத் திட்டத்தின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :

(i) சொர்ணாவாரி மற்றும் சம்பாப் பருவ நெற்பயிருக்கு ஏக்கருக்கு தலா ₹ 5,000 வீதம் ₹ 10,000 மானியமாகத் தொடர்ந்து வழங்கப்படும். மேலும், சொர்ணவாரி பருவத்திற்கு பதிலாக நவரைப் பருவத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு

ஏக்கருக்கு ₹ 5,000 உற்பத்தி செலவின மானியமாக வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 24 கோடி செலவிடப்படும்.

(ii) கரும்பு மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 10,000 வீதம் தொடர்ந்து மானியமாக வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 10 கோடி செலவிடப்படும்.

(iii) காய்கறி, வாழை மற்றும் இதர பழங்கள் மற்றும் தோட்டப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மத்திய அரசுத் திட்டத்தில் வழங்கப்படும் சாகுபடிக்குப் பிந்தைய பொருளீட்டு மானியத்துடன் கூடுதலாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 5,000 வீதம் மொத்த மானியத் தொகை ஏக்கருக்கு ₹ 10,000க்கு மிகாமல் தொடர்ந்து வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 15 இலட்சம் செலவிடப்படும்.

(iv) மணிலா சாகுபடிக்கு அளிக்கப்படும் மானியம், ஏக்கருக்கு ₹ 2,000லிருந்து ₹ 5,000ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 85 இலட்சம் செலவிடப்படும்.

(v) எள் சாகுபடிக்கான மானியம் ஏக்கருக்கு ₹ 2,000லிருந்து ₹ 3,000ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 25 இலட்சம் செலவிடப்படும்.

(vi) தென்னை சாகுபடிக்கான மானியம் ஏக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு ₹ 3,000 வீதம் தொடர்ந்து வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 50 இலட்சம் செலவிடப்படும்.

(vii) தீவனப் பயிர் உற்பத்தி மானியத்தொகை ஏக்கருக்கு ₹ 8,000 வீதம் தொடர்ந்து வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 50 இலட்சம் செலவிடப்படும்.

(viii) சிறுதானியப் பயிர் உற்பத்தியை அதிகரிக்கவும் ஊக்குவிக்கவும் "Millet Mission" திட்டம் ஒன்று தொடங்கப்படும். சிறுதானியப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 5,000 வீதமும், பயறு வகைப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 2,000 வீதமும் தொடர்ந்து மானியம் வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 2.45 கோடி செலவிடப்படும்.

(ix) மரவள்ளி சாகுபடி செய்யும் விவசாயிகள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்திட ஏதுவாக மானியமாக ஏக்கருக்கு ₹ 5,000 வழங்கப்படும். இதற்கு மொத்தமாக ₹ 25 இலட்சம் செலவிடப்படும்.

(x) வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை அரசே செலுத்தவும் மற்றும் மானியத் தொகை வழங்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

(xi) ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள் சேமிப்புக் கிடங்கில் விவசாயிகள் தங்கள் நெல்லை இருப்பு வைத்து சந்தையில் அதிக விலை வரும் காலத்தில் விற்பனை செய்துகொள்ள ஏதுவாக பொருள் ஈட்டுக்கடன் வழங்க புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்களுக்கு ₹ 3 கோடி சுழல் நிதி மொத்தமாக வழங்க ஆவன செய்யப்படும்.

(xii) காரைக்கால் மாவட்டத்தில் காவிரி நீர் வரத்துக் குறைவாலும், பாசன வசதிக் குறைவாலும் விவசாய நிலங்களில் பரவலாக வளர்ந்துள்ள காட்டுக் கருவேல மரங்களை அகற்றி மீண்டும் விவசாயப் பயன்பாட்டிற்கு கொண்டுவர விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ₹ 10,000 (ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேர்) மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒரு விவசாயி தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பயிர் செய்யும் பட்சத்தில் மானிய உதவி நிலுவைத்தொகையாக வழங்கப்படும்.

(xiii) வேளாண் துறையால் அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ள ஆழ்குழாய்க் கிணறுகளில் இருந்து இறைக்கப்படும் நீர் திறந்தவெளி வாய்க்கால்கள் மூலம் நிலங்களுக்குப் பாய்ச்சப்படுவதால் நீர் வீணாவதைத் தடுக்கவும், அதிக அளவு நிலங்களுக்குப் பாசனவசதி அளிக்கவும், ஒவ்வொரு ஆழ்குழாய் கிணற்றுக்கும் உள்ள பாசன நிலங்களுக்கு 'நிலத்தடி குழாய் இணைப்புத் திட்டம்' முதற்கட்டமாக காரைக்கால் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்.

(xiv) ₹ 3 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு உதவியுடன் பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்கள் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும்.

(xv) வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ், டிராக்டர் மற்றும் வேளாண் உபகரணங்களைப் பொதுப் பிரிவு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கிட, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முறையே ₹ 2 கோடி மற்றும் ₹ 1 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினை விரிவுபடுத்த மத்திய அரசிடமிருந்து ₹ 5 கோடி நிதி கோரப்பட்டுள்ளது.

(xvi) பயறு வகைகள், சிறுதானியங்கள் மற்றும் கரும்பு ஆகியவற்றை உள்ளூரிலேயே பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கு தேவையான நிதி உதவியாக ஆர்வமுள்ள விவசாய குழுக்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ₹ 10 இலட்சம் அல்லது மொத்த செலவில் 35 விழுக்காடு இவற்றில் எது குறைவோ, அத்தொகை ஒரு முறை உதவியாக (One time Assistance) வழங்கப்படும்.

(xvii) பதிவு செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO) தனிப்பெயர் மற்றும் அடையாளத்துடன் பேக்கிங் செய்து விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெற்றிட ஒருமுறை உதவியாக (One time Assistance) ₹ 5 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

(xviii) புதுச்சேரி மக்களின் காய்கறித் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு, நகரப் பகுதிகளில் வீட்டின் புறப்பகுதி மற்றும் மாடிகளிலும், தொகுப்பு ரீதியாகவும் காய்கறிகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் புதிய திட்டம் (Mission Mode Project) இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

(xix) இந்த ஆண்டு 1,000 விவசாயிகள் மற்றும் விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வேளாண் உபகரணங்களைக் கையாளுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், வேளாண் பொறியியல் பணிமனை மூலமாக அளிக்கப்படும்.

(xx) ஒருங்கிணைந்த நிலத்தடி நீர் மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் குழாய் கிணறு அமைத்தல், நீர்மூழ்கி மோட்டார் மற்றும் உபகரணங்கள் பொருத்துதல், தெளிப்பு நீர் மற்றும் சொட்டு நீர் கருவிகள் அமைத்தல், நிலத்தடி நீர் பாசன குழாய் அமைத்தல் போன்றவற்றிற்கு மானியமாக ₹ 1.20 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(xxi) நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கோடு பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டத்தில் கால் ஏக்கர் அளவுள்ள பண்ணைக்குட்டை அமைக்க ₹ 1 இலட்சம் வீதம் மானியம் தொடர்ந்து வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட நம்மாழ்வார் வேளாண் புத்தாக்கத் திட்டங்களுக்காக தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கை வேளாண் முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**21.** எனது அரசு வேளாண் பெருமக்கள் பலனடையும் பொருட்டு மத்திய அரசின் விவசாயிகள் கடன் அட்டை (Kisan Credit Card) திட்டத்தை இந்த ஆண்டு விரிவாக்கி வேளாண் துறை மூலம் மேலும் 2,500 விவசாயிகளுக்குப் பெற்றுத்தர முடிவு செய்துள்ளது. இதன் மூலமாக விவசாயிகள் பயிரிடும் காலங்களில் விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், விவசாயக்கூலி ஆகியவற்றிற்குத் தேவையான கடன் வசதியை, அதிகபட்சமாக ₹ 3 இலட்சம் வரை 7 விழுக்காடு வட்டியில் பெற முடியும். இவ்வாறு பெறும் விவசாயக் கடனைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செலுத்தும் பட்சத்தில் அக்கடனுக்கு 3 விழுக்காடு வட்டி தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் கூட்டுறவு மற்றும் இதர வங்கிகள் மூலம் வெவ்வேறு பயிர்களுக்குக் கடன் வழங்க நமது அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட நிதி அளவு இந்த நிதி ஆண்டில் பின்வருமாறு அமையும்.

| வ. எண் | பயிர் வகைகள் | ஏக்கர் ஒன்றுக்கான கடன் அளவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **I.** | **புதுச்சேரி பகுதி —** | |
| 1. | நெல் | ₹ 27,000 |
| 2. | கேழ்வரகு | ₹ 6,000 |
| 3. | கம்பு | ₹ 6,000 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. | கரும்பு | ₹ 52,000 |
| 5. | வாழை | ₹ 42,000 |
| 6. | திசு வளர்ப்பு வாழை | ₹ 52,000 |
| 7. | மரவள்ளி | ₹ 22,000 |
| 8. | மணிலா | ₹ 25,000 |
| 9. | பருத்தி (அதிக மகசூல் ரகம்) | ₹ 22,000 |
| 10. | மிளகாய் | ₹ 15,000 |
| 11. | குளிர்கால காய்கறி வகைகள் | ₹ 25,000 |
| 12. | வெங்காயம் | ₹ 14,000 |
| 13. | காய்கறி | ₹ 20,000 |
| 14. | காய்கறி உயர்ரகம் | ₹ 25,000 |
| 15. | பருப்பு வகைகள் | ₹ 10,000 |
| 16. | தென்னை (பராமரிப்பு) | ₹ 12,000 |
| 17. | எள் | ₹ 7,400 |
| 18. | துளுக்க சாமந்தி | ₹ 10,000 |

II. காரைக்கால் பகுதி —

| | | | |
|---|---|---|---|
| 1. | நெல் | ₹ | 27,000 |
| 2. | வாழை | ₹ | 42,000 |
| 3. | பருப்பு வகைகள் | ₹ | 10,000 |
| 4. | மணிலா | ₹ | 20,000 |
| 5. | மிளகாய் | ₹ | 12,000 |
| 6. | பருத்தி (அதிக மகசூல் ரகம்) | ₹ | 24,000 |
| 7. | எள் | ₹ | 7,500 |
| 8. | காய்கறி | ₹ | 20,000 |
| 9. | உயர்ரக காய்கறி | ₹ | 25,000 |

**22.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் வேளாண் சார்ந்த பண்ணை இயந்திரமயமாக்குதல், தோட்டக்கலைப் பயிர்கள், பால் வளம், கால்நடைப் பராமரிப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் உணவு பதனிடுதல் உள்ளிட்டவைகளுக்கு ₹ 306 கோடி கடனும், பயிர்க்கடனாக ₹ 1,397 கோடியும் ஒட்டு மொத்தமாக ₹ 1,703 கோடி கடன் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**23.** நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்தவும், மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்கவும் மத்திய அரசிடமிருந்து ₹ 2 கோடி நிதி இந்த நிதி ஆண்டில் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**24.** நமது புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் இயற்கை விவசாயத்தை பரவலாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகின்றது. நடப்பு நிதி ஆண்டில் சுமார் ₹ 28.55 இலட்சம் செலவில் கண்டறியப்பட்ட 28 பகுதிகளில் விவசாய (Clusters) விளை பொருட்களை இயற்கை விவசாய முறைப்படி உற்பத்தி செய்வதற்கும் அதற்கான சான்றிதழ்களைப் பெறுவதற்குமான மத்திய அரசின் பாரம்பரிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் (PKVY) இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

**25.** தேசிய மின் சந்தை திட்டத்திற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட தட்டாஞ்சாவடி மற்றும் காரைக்கால் விற்பனைக் கூடங்களுக்கு மத்திய அரசின் நிதி உதவி தலா ₹ 30 இலட்சம் பெறப்பட்டு கட்டமைப்புப் பணிகள் மேம்படுத்தப்படும்.

**26.** மேலும், வீட்டின் புறக்கடை பகுதிகளில் பழ மரங்களை நடுவதற்கு விருப்பம் உள்ளவர்கள் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டால், பழக்கன்றுகளை அவர்கள் இல்லங்களுக்கே கொண்டுசென்று நடுவதற்குத் தேவையான வேளாண் சேவைகளை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாடித் தோட்டத்திற்காக நிழல் வலை குடில்கள் அமைக்க 75 விழுக்காடு மானியம் தரப்படும். கல்வித் துறை மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் மதிய

உணவுத் திட்டத்திற்கு தேவையான காய்கறிகளை வெளிச்சந்தைகளில் கொள்முதல் செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு விவசாயிகளிடம் நேரடியாகவும் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் மூலமாகவும் தரமான காய்கறிகளை உற்பத்தி செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.

**27.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் அமைந்துள்ள தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இயங்காத காரணத்தால், கரும்பு பயிரிடும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்கள் நிலங்களில் கரும்பு பயிரிட்ட விவசாயிகள், இந்த நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து விடுபட, கரும்பிலிருந்து உருண்டை வெல்லம், அச்சு வெல்லம், நாட்டுச் சர்க்கரை உள்ளிட்ட இதர மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் முதற்கட்டமாக, விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த கரும்பிலிருந்து மதிப்புகூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கத் தேவையான அரசு அனுமதி / உரிமம் / தடை இல்லாச் சான்றிதழ் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

**28.** வேளாண் தொழிலாளர்களுக்கான நலச்சங்கத்தின் பயனாளிகளின் பட்டியல் மறு ஆய்வு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த ஆண்டு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**29.** காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் நிலையத்தில் வேளாண் பொருளாதாரத் துறையில் முனைவர் பட்டப்படிப்பு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் ஒப்புதலோடு நடப்புக் கல்வி ஆண்டில் துவங்கப்பட உள்ளது. அடுத்த கல்வி ஆண்டு (2020-21) முதல் வேளாண் இளங்கலை பட்டம் மற்றும் தோட்டக்கலை பட்டப்படிப்பிற்கு முறையே 60 மற்றும் 40 இடங்கள் கூடுதலாக நிரப்பப்படும் வேளாண் மற்றும் தோட்டக்கலை முதுநிலை பட்டப்படிப்பில் 70 இடங்கள் கூடுதலாக நிரப்பப்படும். வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பிரிவுகளில் பட்டய படிப்பும் (Diploma) சான்றிதழ் (Certificate) படிப்பும் துவங்கப்படும்.

**30.** வரும் 2021-22ஆம் கல்வி ஆண்டில் புதிய வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம் ஒன்று புதிதாக தொடங்கப்படும். இதற்கான புதுச்சேரி வேளாண் அறிவியல் பல்கலைக்கழகச் சட்ட முன்மொழிவு தயாராகி வருகிறது. இப்புதிய பல்கலைக்கழகத்தின்கீழ் காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் அறிவியல் கல்லூரி (PAJANCOA), புதுச்சேரி ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரி (RIVER) மற்றும் காரைக்கால் வேளாண் அறிவியல் கழகங்கள் (KVKs) ஆகியவை இயங்கும். வேளாண் பல்கலைக்கழகம் அமைப்பதன் மூலம், வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி குழுமத்தின் (ICAR) மூலம் நிதி உதவி பெற்றிட முடியும். மேலும், பிராந்தியம் சார்ந்த வேளாண்,

கால்நடை மற்றும் மீன்வள அறிவியல் சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் மற்றும் பிற மத்திய நிதி வழங்கும் குழுமங்கள் மூலமாக அதிக நிதி பெற்றிட வழிவகை ஏற்படும். மேலும், பல்கலைக்கழகம் அமைப்பதன் மூலம் தற்போதுள்ள இடங்களை விடக் கூடுதலான இடங்களை இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் சார்ந்த படிப்புகளுக்குப் பெற்று தன்னாட்சி அதிகாரம் வழங்கி நிதி ஆதாரத்தை பெருக்கிக் கொள்ள வழிவகை செய்யப்படும். மேலும், மேம்பட்ட கற்றல் ஆராய்ச்சி மற்றும் வேளாண் விரிவாக்க கல்விக்கும் இது வழிவகுக்கும்.

**31.** ஐக்கிய நாடுகள் ஆராய்ச்சி நிறுவனமான International Crop Research Institute for Semi Arid Tropics (ICRISAT) நிறுவனத்துடன் இணைந்து வேளாண் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுச்சேரி அரசால் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு ₹ 5 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ள விரிவான செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை மத்திய அரசிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை நிர்வகித்தல் மூலம் நீடித்த நிலையான வேளாண் உற்பத்தி இலக்கினை அடைய புதுச்சேரி மற்றும் காரைக்காலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் கற்றல் மையங்களை அமைத்து அதன் மூலம் அடையும் பயனை இதர கிராமங்களுக்கும் பரவலாக்கிட இத்திட்டம் பெருமளவில் உதவும்.

**32.** கடந்த பிப்ரவரி 2020இல் நடைபெற்ற சிறப்புச் சட்டப்பேரவைக் கூட்டத்தில், காரைக்கால் காவிரி டெல்டா பகுதிகள் மற்றும் புதுச்சேரி, பாகூர் கொம்யூன் தென்பெண்ணையாற்றின் டெல்டா பகுதியில் உள்ள விளை நிலங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக "புதுச்சேரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அபிவிருத்தி மசோதா 2020" புதுச்சேரி சட்டப்பேரவையில் விரைவில் நிறைவேற்றிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் காரைக்கால் பிரதேசம் மற்றும் புதுச்சேரியில் பாகூர் பகுதிகளில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் மேம்படும்.

**33.** ஊரகக் கட்டுமான நிதியிலிருந்து (RIDF) தட்டாஞ்சாவடி மற்றும் கரையாம்புத்தூரில் ₹ 7 கோடி செலவில் உள்கட்டுமான பணிகள் மற்றும் ₹ 2 கோடி செலவில் இலாசுப்பேட்டை, அரும்பார்த்தபுரம் மற்றும் அரியாங்குப்பம் பகுதிகளில் உள்ள உழவர் சந்தைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ஆகியவற்றை இந்த ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தானியம் போரடிக்கும் களம் மற்றும் சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றை ஏம்பலம் உள்ளிட்ட நெல் பயிரிடும் கிராமங்களில் அமைத்துத் தரவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**34.** எனது அரசு சிறுதானிய வகைகள், காய்கறி மற்றும் கனி வகைகள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் ஆகியவற்றிற்கான தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய "தொழில்நுட்ப மேம்பாட்டு மையம்" (Technical Incubation Centre) ஒன்றை புதுச்சேரி பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையத்தில் (PKKVK) இந்த ஆண்டு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**35.** உழவர் உற்பத்தியாளர்கள் குழுமம் நிறுவனம் (FPO) உருவாக்குவதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள புதிய திட்டத்தில் 300 நபர்கள் கொண்ட FPO குழுமங்களை நிறுவுவதற்கு நிதி உதவி ₹ 18 இலட்சம் வரை மானியமாக பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்த நிறுவனத்தில் பங்குதாரராக ஆவதற்குத் தேவையான முதலீட்டு நிதிக்கான உதவி (Matching Grant) நபர் ஒன்றுக்கு ₹ 2,000 வீதம், ₹ 15 இலட்சம் வரை பெற நடவடிக்கை எடுக்கப்படும். வங்கிகள் மூலம் FPO குழுமங்களுக்கு அதிகபட்சமாக ₹ 150 இலட்சம் வரை கடன் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**36.** மத்திய அரசால் மிகச்சிறிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான திட்டத்தில் சுய உதவிக்குழுவிற்கு (SHG) தேவையான ஆதார நிதி (Seed Money)

மானியமாக ஒவ்வொரு குழுவிற்கும் ₹ 40,000 பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், உணவுப்பதப்படுத்தும் நிறுவனத்திற்கு கடனுடன் இணைக்கப்பட்ட 35 விழுக்காடு மானியம் ₹ 10 இலட்சத்திற்கு மிகாமல் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். பொதுகட்டமைப்பு ஏற்படுத்த முன்வரும் உழவர் உற்பத்தியாளர் குழுமத்திற்கும் (FPO), சுய உதவி குழுமத்திற்கும், (SHG) ₹ 50,000 வரை உதவித் தொகை வழங்கப்படும். இந்த திட்டங்கள் அனைத்தும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA) மூலமாக நடைமுறைப்படுத்தப்படும். நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 119.37 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வனம் மற்றும் வனவிலங்கு**

**37.** சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் சுத்தமான காற்று, தீவனங்கள், மரங்கள் மற்றும் எரிபொருட்கள் ஆகியவற்றைப் பெறுவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சமுதாயக் காடு வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கில் சுமார் 50,000 காட்டு மரக்கன்றுகள் சாலையோரங்களிலும், ஏரிக்கரையிலும், கல்விக்கூடங்களிலும், தொழிற்பேட்டையிலும் மற்றும் விளை நிலங்களிலும் நடப்பட உள்ளன. மேலும், சமூக காடு வளர்ப்பின் பயனைப் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மரம் நடுதலை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒரு இலட்சம் மரக்கன்றுகளை

பொதுமக்கள், பள்ளிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் மற்றும் விவசாயம் சார்ந்த காடு வளர்ப்பின்கீழ் சுமார் 65 ஹெக்டேர் நிலப்பரப்பில் காடுகளை உருவாக்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும். வண்ண மரக் கன்றுகளை நட்டு நகரின் முக்கியச் சாலைகள் அழகுபடுத்தப்படும்.

**கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**38.** கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சியில் கால்நடை பராமரிப்பு முக்கிய இடம் பெற்றுள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக, வேளாண்மையின் ஒருங்கிணைந்த அங்கமாகக், கால்நடை பராமரிப்பு திகழ்கிறது. எனது அரசு கால்நடைகளின் தர மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து அதற்கான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**39.** இந்த ஆண்டில் பண்டித ஜவஹர்லால் நேரு கால்நடை புத்தாக்கத் திட்டம் (Pandit Jawaharlal Nehru Animal Husbandry Rejenuvation Mission) என்ற புதிய திட்டத்தை அறிமுகப் படுத்துவதில் நான் பெருமை கொள்கிறேன். அதன் சிறப்புக் கூறுகள் பின்வருமாறு :

(i) கறவைப் பசுக்கள் மூலம் பால் உற்பத்தியை உயர்த்தும் நோக்கில் சிறந்த மரபணுக்கள் கொண்ட கலப்பின கிடேரிக் கன்றுகளை உருவாக்க 70,000 செயற்கை முறை கருவூட்டல்கள் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20,000 சிறந்த மரபணுக்கள் கொண்ட கன்றுகளை வரும் 2020-21-ல் நாம் பெற இயலும். அதிக திறன் கொண்ட கிடேரிக் கன்றுகளை உருவாக்கி அதன் மூலம் விவசாயிகள் இலாபம் ஈட்டும் பொருட்டு எனது அரசு 5,000 சிறந்த மரபணுக்கள் கொண்ட இனம் பிரிக்கப்பட்ட உறைவிந்து சினை ஊசிகளைக் (High pedigree sex-sorted semen) கொள்முதல் செய்ய உத்தேசித்துள்ளது. கலப்பினப் பசுக்கள் சராசரியாக 10 லிட்டர் பால் தருகின்றன. சாதாரணப் பசுக்களை ஒப்பிடுகையில் தினமும் 4 லிட்டர் பால் அதிகம் கிடைக்கிறது. இதனால் ஒரு பசுவுக்கு மாதம் ₹ 4,000 வரையில் அதிக வருமானம் பெற வாய்ப்பு ஏற்படும்.

(ii) எனது அரசு, அனைத்து கால்நடை வளர்ப்பவர்களும் பயன்பெறும் வகையில் கால்நடை விவசாயிகளுக்கும் “விவசாயக் கடன் அட்டை” (Kisan Credit Card) வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த

நடவடிக்கை எடுத்து வருகிறது. பாண்லே கூட்டுறவு ஒன்றியம் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை அல்லாமல் கால்நடைத் துறை மூலமாக குறைந்தபட்சம் 2,000 பசு-எருமை வளர்ப்பவர்களுக்கு கடன் அட்டைகள் இந்த ஆண்டு (2020-21) வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களில் இரு கறவைப் பசுக்கள் வளர்ப்பவர்களுக்கு ₹ 30,000 மற்றும், இரு உயர் ரக முர்ரா இன எருமைகள் வளர்ப்பவர்களுக்கு ₹ 42,700 என்ற விகிதத்திலும் அதிகபட்சமாக ₹ 2.00 இலட்சம் வரை ஒவ்வொருவருக்கும் கடன் வங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதே கடன் அட்டைத் திட்டத்தின் மூலமாக கோழி மற்றும் ஆடு வளர்ப்பவர்களுக்கும் கடன் வழங்கப்படும். 10 எண்ணிக்கையிலான ஆடு வளர்ப்பவர்களுக்கு ₹ 20,000 கடனாக வங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 6 வாரம் வரை வயதுள்ள 1,000 எண்ணிக்கையிலான கறிக்கோழி வளர்ப்பவர்களுக்கு ₹ 50,000 கடனாக மற்றும் 5,000 எண்ணிக்கையிலான கறிக்கோழி வளர்ப்பவர்களுக்கு ₹ 2,50,000 கடனாக வங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுக்கு முறையில் 1,000 எண்ணிக்கையிலான 1½ வருட வயது வரையுள்ள முட்டைக்கோழி வளர்ப்பவர்களுக்கு ₹ 50,000 வங்கிகள் மூலம் கடனாக வழங்க ஏற்பாடு செய்யப்படும். கால்நடை பசுந்தீவனத்திற்காக இரண்டு எண்ணிக்கையிலான பசுக்கள் அல்லது எருமைகள் வளர்ப்பவர்களுக்கு ₹ 20,000 கடனாக 7 விழுக்காடு வட்டியில் வழங்கப்படும். மேற்கண்ட அளவிலான கடன் தொகையைத் தவணை மாறாமல் திருப்பிச் செலுத்தும் கால்நடை விவசாயிகளுக்கு 3 விழுக்காடு வட்டியில் மானியம் வழங்கப்படும்.

(iii) இந்த ஆண்டு கறவைப்பசுக்கள் வாங்குவதற்கு, மத்திய அரசு மானியமாக 25 விழுக்காடு பொதுப்பிரிவினருக்கும் மற்றும் 33.3 விழுக்காடு அட்டவணை இனத்தவருக்கும் வழங்கப்படும். கூடுதலாக மாநில அரசு மானியமாக 10 விழுக்காடு அனைத்துப் பிரிவினருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டு 2,000 கறவைப் பசுக்கள் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) கால்நடைகளின் நலனை மேம்படுத்தவும், இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் கடந்த ஆண்டு மூன்று கிராமங்களில்

சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட "பகுதி வாரியான தாது உப்புக் கலவை" (Area Specific Mineral Mixure) வழங்கும் திட்டம் இந்த ஆண்டு புதுச்சேரி மாநிலத்தின் அனைத்து கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மூன்றே ரூபாய் மதிப்பில் தினமும் 50 கிராம் தாது உப்பு ஒவ்வொரு பசு மற்றும் எருமைக்கும் வழங்குவதால் ஒரு வேளைக்கு கூடுதலாக அரை லிட்டர் பால் கிடைக்கும். இவ்வகையில் ஒரு மாதத்திற்கு ஒரு கால்நடைக்கு கூடுதலாக ₹ 1,000 வரையில் வருவாயை அதிகரிக்க வழிவகை செய்யப்படும்.

(v) தொலைதூரக் கிராமங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர் பயன் பெறும் வகையில் இரு சக்கர ஆம்புலன்ஸ் வாகனங்கள் மூலமாக நடமாடும் செயற்கைக் கருவூட்டல் ஊசி போடும் திட்டம் தொடங்கப்படும். இதற்கென 15 இரு சக்கர வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்படும்.

(vi) புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள ஒவ்வொரு கொம்யூனையும் உள்ளடக்கிய குறைந்தபட்சம் 1,000 பயனாளிகளுக்கு, கால்நடை சார்ந்த ஒரு வாரகாலப் பயிற்சி கால்நடை மருத்துவக்கல்லூரி, கால்நடை பராமரிப்புத் துறை, வங்கிகள், காப்பீட்டு

நிறுவனங்களுடன் இணைந்தவாறு தேர்ந்தெடுத்து கால்நடை வளர்க்க அரசின் உதவி மற்றும் வங்கிக் கடன்கள் பெற உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(vii) இளைஞர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு ஊட்டச்சத்துப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கிலும், அவர்களிடம் தொழில் முனைவோராகும் எண்ணத்தை விதைக்கும் பொருட்டும், புறக்கடை நாட்டுக்கோழி வளர்க்கும் திட்டம் ஒன்று புதிதாக அறிமுகப்படுத்தப்படும். விலையில்லா கோழிக் குஞ்சுகளை மாணவ மாணவியர்களுக்கு வழங்கி அவர்கள் வளர்த்த கோழிகளை சந்தைப்படுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்படும்.

**40.** முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க, புதுச்சேரி-கரியமாணிக்கம் மற்றும் காரைக்கால்-கோட்டுச்சேரி பகுதிகளில் உள்ள கோழிப்பண்ணைகளைப் புதுப்பிக்கும் பணிகள் இந்த ஆண்டே மேற்கொள்ளப்படும்.

**41.** கோமாரி மற்றும் புருசெல்லோசீஸ் (Brucellosis) நோய்களைக் கட்டுப்படுத்தி நோய்களை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய கால்நடை நோய்த்

தடுப்புத் திட்டத்தின்கீழ் நான்கு மாதங்களுக்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து கால்நடைகளுக்கும் தனித்துவ அடையாள எண் (Unique Identification Number) வழங்கும் பணி விரைவில் முடிவடையும். இதுவரை 7,000 எண்ணிக்கையிலான கால்நடைகளுக்கு தனித்துவ அடையாள எண் பொருத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 66,000 எண்ணிக்கையிலான கால்நடைகளுக்கு செப்டம்பர் 2020க்குள் தனித்துவ அடையாள எண் பொருத்தப்படும். மேற்குறிப்பிட்ட இரு நோய்களைக் களைந்திடும் இலக்கினை அடையும் பொருட்டு, வருடம் இருமுறை மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு மற்றும் பன்றிகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து 4 முதல் 8 மாத பெண் கன்றுகளுக்கு புருசெல்லோசீஸ் நோய் தடுப்பூசி போடப்படும்.

**42.** ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (RIVER), மற்ற உயர் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்போடு "தொலைதூரக் கல்வி முறையை" (Distance Education System) அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. மேலும், பிரான்ஸ் மற்றும் சூடான் நாட்டு பல்கலைக்கழகங்களோடு இணைந்து கால்நடைகளின் நலம் பற்றிய ஆய்வை மேற்கொள்ளவுள்ளது. கல்வி ஆண்டு 2021-22ல் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளில் மாணவர்களின்

எண்ணிக்கையைக் கணிசமாக அதிகரிப்பதற்கான நிர்வாக ஒப்புதல்கள், இந்த நிதி ஆண்டிலேயே (2020-21) பெறப்படும். இது புதுச்சேரி மாணவர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

**43.** தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் மூலம் வழங்கப்படும் கால்நடை தீவன மானியங்கள் தொடர்ந்து இந்த ஆண்டும் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 42.92 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

**44.** ஏழை மக்கள் மற்றும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு இலவச அரிசி வழங்கும் திட்டத்தைத் தலையாய கடமையாக எனது அரசு கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தீவிர நிதித் தட்டுப்பாடு இருக்கும் பட்சத்திலும் இந்த அரசு ₹ 176 கோடியை இந்த ஆண்டில் (2020-21) இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா நோய்ப் பரவலாலும், ஊரடங்கு உத்தரவாலும், ஏழை குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் எந்த வகையிலும் பசியாலோ அல்லது ஊட்டச்சத்துக் குறைவினாலோ

துன்புறக்கூடாது என்ற உயரிய நோக்கத்தில் அவர்களின் அடிப்படைத் தேவையான உணவு கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு கடந்த ஆண்டுகளில் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள இலவச அரிசிக்கான தொகையாக ₹ 100 கோடி கூடுதலாக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு வறுமைக்கோட்டுக்குக்கீழ் (BPL) மற்றும் வறுமைக்கோட்டுக்குமேல் (APL) ஆகிய அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தற்போது அரிசி வழங்கப்படும் விகிதாச்சாரப்படி நிலுவைத் தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

**45.** ஒரேநாடு ஒரே குடும்ப அட்டை என்ற திட்டத்தின்கீழ் நாட்டிலுள்ள அனைவரும் எங்கு சென்றாலும், புலம்பெயர்ந்து சென்றாலும், அவர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் கிடைக்கும் விதத்தில் புதுச்சேரியிலுள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளும் புத்தாக்கம் செய்யப்படும். மேலும், குடும்ப அட்டைகள் அனைத்தும் ஆதார் எண் மற்றும் கைரேகையுடன் இணைக்கப்பட்டு புத்தாக்கம் செய்யப்பட்ட நியாயவிலைக் கடைகள் மூலம் நியாயவிலைப் பொருட்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்படும்.

**46.** கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், கொரோனாத் தொற்று நோயால் ஏற்பட்ட அசாதாரணமான சூழல்களைச் சமாளிக்க ஏதுவாக எனது அரசு, குடும்பத்திற்கு ₹ 2,000 வீதம் நேரடி பணம் செலுத்தும் முறை (DBT) மூலம் 3,44,701 குடும்ப அட்டைதாரர்களுக்கு (Both BPL & APL) நிதியுதவி

வழங்கியுள்ளது. இதனால் அரசுக்கு ₹ 68.16 கோடி செலவாகியுள்ளது. இது அல்லாது அரசு ஊழியர்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள் தவிர வறுமைக்கோட்டிற்குமேல் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 30 கிலோ அரிசி வழங்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் கொரோனாத் தொற்று நெருக்கடிகால உதவியாக பயனாளி ஒன்றுக்கு மாதம் 5 கிலோ வீதம் 60 கிலோ அரிசி வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**47.** குடிமைப்பொருள் வழங்கல் உணவுப் பங்கீட்டு அட்டை தொடர்பான அனைத்து சேவைகளையும் நேரடியாக இணையதளம் மூலம் பெறுவதற்கு பிரத்தியேக இணையதளம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. இது கூடிய விரைவில் செயல்பாட்டுக்கு வர உள்ளது. மேற்கூறிய சேவைகளைப் 'பொது சேவை மையங்கள்' (Common Service Centre) மூலமாகவும் எளிதில் பெறலாம்.

**கூட்டுறவு**

**48.** கூட்டுறவுத் துறை, வேலை வாய்ப்பு, வருமானம் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவைகளை உருவாக்குதல் போன்றவற்றில் வாய்ப்புகளை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகிறது. கூட்டுறவை ஊக்குவிக்கும் விதமாக, நவீனப்படுத்தப்பட்ட அரிசி

அரவை ஆலை ஒன்று காரைக்கால் மத்திய கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் ₹ 3 கோடி செலவில் நிறுவப்பட உள்ளது. புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் ₹ 37 இலட்சம் செலவில் கால்நடைத் தீவனப் பரிசோதனை மையம் “தேசியக் கால்நடைத் திட்டம்” மூலம் நவீனமயமாக்கப்படும். தேசிய விவசாய உதவித் திட்டத்தின் மூலம் ₹ 50 இலட்சம் மதிப்புள்ள இரு குளிர்சாதன வண்டிகள் வாங்க 50 விழுக்காடு மானியமாக ₹ 25 இலட்சம் பாண்லேக்கு மத்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டுள்ளது.

**49.** புதுச்சேரியிலுள்ள பாண்லே பால் பண்ணை மற்றும் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும், பால் உற்பத்திக்கான பசுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும், பாண்லே நிறுவனம் பசுக்களின் தீவனத்திற்கு பதிலாக பால் உற்பத்தியின் அடிப்படையில் மானியத் தொகை வழங்கும் திட்டம் இந்த ஆண்டு துவங்கப்படும். பாண்லேயில் ஒரு நாளைக்கு சுமார் 55,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் ஒரு நாளைக்கு 1,10,000 லிட்டர் பால் தேவைப்படுகிறது. பற்றாக்குறை பால் வெளிமாநில கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் தனியார் பால் பண்ணைகளிலிருந்தும் வாங்கப்படுகிறது. இவ்வாறு வாங்குவதைத் தவிர்த்து, பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு

பசுக்களுக்கான தீவனத்தைப் பால் உற்பத்திக்கு ஏற்றவாறு தொடர்பு படுத்தி அதாவது ஒரு லிட்டர் பாலிற்கு ஊக்கத்தொகையாக ₹ 2க்கு மிகாமல் கூடுதலாக கறவைப் பசு உரிமையாளர்களுக்குத் தீவன மானியமாக வழங்கி பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக, கூடுதலாக இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு "தேசப்பிதா மகாத்மா காந்தி பால் உற்பத்தி மேம்பாட்டு திட்டம்" என்று பெயர் சூட்டப்படும். இத்திட்டம் காரைக்காலில் செயல்படும் கோலே பால் கூட்டுறவு நிறுவனம் மூலமாகவும் செயல்படுத்தப்படும். இதன் மூலம் புதுச்சேரி மாநிலம் பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி ஏற்படும். விவசாயக் கடன் அட்டை திட்டத்தின்கீழ் கறவைப் பசு மற்றும் எருமைகள் வைத்திருக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் 7,500 நபர்களுக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பால் உற்பத்தி சார்ந்த கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு இந்த நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இதன்கீழ், அதிகப்படியான கறவை மாடுகள் வங்கிக்கடன் உதவியுடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**பள்ளிக் கல்வி**

**50.** மக்களாட்சி வலுப்பெற மக்களுக்கு கல்வி அறிவு இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்துள்ள, எனது அரசு,

இலவச மற்றும் தரமான கல்வி அனைத்து மாணவர்களுக்கும் குறிப்பாக ஏழை மாணவர்களுக்கு புதுச்சேரி மாநிலத்தில் நன்கு கிடைத்திட வேண்டும் என்ற இலக்கைக் கொண்ட பல்வேறு மாணவ நலத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. பள்ளி என்பது, மாணவர்களுக்கு நன்கு கற்கும் சூழலுடன் விளங்கி அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இடமாக இருப்பதால், அனைத்து குழந்தைகளும் பள்ளி சென்று நன்கு கற்கும் வாய்ப்பு கிடைத்திட வேண்டும் என்கிற நோக்கில், எனது அரசு, இலவச சீருடை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், காலையில் பால் மற்றும் மதிய உணவு, ஒரு ரூபாய் கட்டணத்தில் பேருந்து வசதி, உதவித் தொகைகள் போன்ற பல்வேறு மாணவ நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த திட்டங்கள் அனைத்தும், ஏழை மாணவர்கள் அனைவரும் பள்ளிக் கல்வியின் பயன்களை முழுமையாகப் பெறுவதற்கும், மாணவர்களின் இடைநிற்றலைப் பெருமளவில் குறைப்பதற்கும் ஏற்பாக அமைந்துள்ளது. அனைத்து மாணவர் நலத்திட்டங்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

**51.** தற்போது மாணவர்களுக்கு காலை வேளைகளில் பால் வழங்கப்பட்டு வருகிறது. இதனை ‘மேம்படுத்தப்பட்ட டாக்டர் கலைஞர் கருணாநிதி காலைச் சிற்றுண்டி மற்றும்

ஊட்டச்சத்துத் திட்டமாக' விரிவுபடுத்தி காலைச் சிற்றுண்டியுடன் நடைமுறைப்படுத்த எனது அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி, மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டியாக, இட்லி, கிச்சடி, பொங்கல் போன்ற உணவுகள் வழங்கப்படும். இதற்காக இந்த ஆண்டு ₹ 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குழந்தைகள் தினமான நவம்பர் 14, 2020ல் அமல்படுத்தப்டும்.

**52.** கொரோனா நோய்ப் பரவல் காரணமாக, பள்ளிகள் தற்போது மூடப்பட்டுள்ள நிலையில், மாணவர்களின் கல்வி பாதிப்படைவதை குறைக்கும் வகையில், தொலைக்காட்சி, சமூக வானொலி மற்றும் இணையவழி கற்பித்தல் போன்ற பல்வேறு வழிகளில் அனைத்து தரப்பு மாணவர்களையும் சென்றடையும் வண்ணம் இந்தக் கல்வி ஆண்டு (2020-21) முதல் டாக்டர் A.P.J. அப்துல்கலாம் கல்வி தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இப்புதியத் திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு :

(i) சிறப்பு தொலைக்காட்சி சேனல்கள், சமுதாய வானொலி, கைகணினி ஆகியவற்றின் வாயிலாக மாணவ மாணவியர்களின் வீடுகளுக்கே பாடத்திட்டங்கள் போதிப்பதைக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அரசால் புதிதாக “கல்வி தொலைக்காட்சி சேனல்கள்” பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும். மேலும், பிரத்தியேக சமூக

வானொலி (Comminity Radio) மூலம் புதிய வானொலி சேனல்கள் துவங்கப்பட்டு அதன் மூலமாகவும் பாடங்கள் எடுக்கப்படும். இந்த திட்டங்கள் சுமார் ₹ 4 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

(ii) மின்னணு காட்சி மையம் (Digital Studio) ஒன்று பள்ளிக் கல்வித் துறையால் அமைக்கப்படும்.

(iii) கொரோனா நோய்ப் பரவல் சூழலில் மாணவர்களுக்குக் கற்றலில் உதவும் பொருட்டு, கிராமப்புறங்களில் உள்ள சமூக அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள் ஒத்துழைப்போடு, கிராமப்புறக் கல்வி மையங்கள் நிறுவப்படும். இந்த மையங்கள் மூலமாக சமூக இடைவெளியுடனும், பாதுகாப்புடனும், பள்ளிக்குச் செல்ல இயலாத நாட்களிலும், காலை மாலை வேளைகளிலும், கல்வி கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது. இம்மையங்களில் பெரிய அளவிலான மின்னணு தொலைக்காட்சிகள், மற்றும் கணினிகள் வைத்து கல்வி கற்பிக்க ஆவன செய்யப்படும்.

(iv) மத்திய அரசு உதவியுடன் ₹ 2.76 கோடி மதிப்பீட்டில் கிராமப்புறப் பள்ளிகளில் மின்னணு வகுப்பறைகள்

(Digital Classroom) இந்த ஆண்டு அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

(v) பள்ளிகளுக்குத் தேவையான சிறு பராமரிப்புப் பணிகளையும், புதுப்பித்தல் பணிகளையும் அந்தந்தப் பள்ளியின் பள்ளி மேலாண்மைக் குழுக்களே முன்நின்று செய்து முடிக்கும்வண்ணம் தற்போதைய நிர்வாக நடைமுறைகளைத் தளர்த்தி, புதிய நிர்வாக நடைமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

(vi) பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுப் பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக (Model School) மாற்றப்படும்.

(vii) பள்ளிக் கட்டடப் பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு பணிகளுக்கு இந்த ஆண்டு ₹ 19 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(viii) மத்திய அரசு, முன்மழலையர் வகுப்புகளை பள்ளிக் கல்வியுடன் இணைந்து நடத்திட ஆலோசனை வழங்கியுள்ளது. குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி என்பது ஒரு பள்ளிச் சூழலில்தான்

செவ்வனே அமையும் என்பது உளவியல். இந்த அடிப்படையில் புதுச்சேரியில் உள்ள அங்கன்வாடிகள், அருகாமையில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளுடன் இணைக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 50 அங்கன்வாடிகள், முதற்கட்டமாக அருகே உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளுடன் இணைக்கப்படும். இதன் வாயிலாக அங்கன்வாடிக் குழந்தைகள் இணைக்கப்பட்டுள்ள பள்ளியின் வளங்கள் வாயிலாக மேலும் செம்மையாக கல்வி கற்றிடும் வாய்ப்புகள் உருவாகும்.

(ix) கல்வி கற்றலில், கொரோனா தொற்றுநோயின் காரணமாக ஏற்பட்ட மாறுதல்களால் தற்போதுள்ள சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, ஏழை மாணவ மாணவியர்கள் கல்வி கற்பதில் உள்ள சிரமங்களைக் குறைக்கும் வண்ணம் அரசுப் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ மாணவியர் இணையவழிக் கல்வி பயிலுவதற்காக அனைவருக்கும் விலையில்லா கைகணினி (tablet) டாக்டர் APJ. அப்துல் கலாம் மாணவர்கள் கல்வி தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

**53.** இதுவரை, நமது அரசுப்பள்ளிகளில் பயிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர், கல்வி உதவித் தொகை பெறுவதற்காக, பல்வேறு, சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் ஒரு நீண்ட நிர்வாக நடைமுறையைப் பின்பற்ற வேண்டி இருந்தது. நமது மாணவர்களின் சிரமங்களை முழுவதும் தவிர்த்து மாணவர்கள் எளிதாகக் கல்வி உதவித் தொகை பெறும் வகையில் எளிமைப்படுத்தப்பட்ட நிர்வாக மாற்றங்கள், 2020-21ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**54.** பள்ளிகளின் தரவுகளை குறித்த நேரத்தில் பெற்றிடும் வகையிலும், பள்ளிகளின் தரவுகள் அடிப்படையிலான அறிக்கைகள் பள்ளி மேலாண்மையில் முக்கிய பங்கு வகிப்பதால் அவை பள்ளித் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பேருதவி புரியும் என்பதாலும், இவைகள் ஒருங்கே கிடைக்கப்பெற பள்ளி மேலாண்மைத் தொகுப்பு (School Management System) என்னும் இணையம் சார்ந்த நிர்வாக முறையை, பள்ளிக் கல்வித் துறையில் அமுல்படுத்த எனது அரசு உத்தேசித்துள்ளது. இதன் வாயிலாகப் பள்ளிகளின் பல்வேறு தரவுகளான, பள்ளி அமைவிடம், உட்கட்டமைப்பு, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வருகை, ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் முறைகள் மாணவர்கள் தேர்ச்சி செயல்பாடுகள் மற்றும் கற்றலில் முன்னேற்றம் போன்றவற்றைக் குறித்த நேரத்தில் இணையம் வாயிலாகப் பகிர்ந்து கொண்டு,

உள்ளீடுகளைப் பெற்று பள்ளி மேம்பாட்டிற்கான வழிமுறைகளை விரைவாக நடைமுறைப்படுத்த முடியும்.

**55.** தொடக்கப்பள்ளி மாணவர்களின் கற்றலை மதிப்பிடும் வகையில் சென்ற ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் (DEAL) மாணவர் மதிப்பீட்டுத் திட்டம், இந்த ஆண்டும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு "நிலை அறி தேர்வு" (Base Line Test) நடத்தப்பட்டு, அதன் மூலமாக மாணவர்களின் கற்றல் இடைவெளிகளை இனங்கண்டு, அவற்றைக் களையும் வகையில் மூன்று மாதங்களுக்குத் தொடர் கற்பித்தல் நடைமுறைப் படுத்தப்படும். அதன் பின்னர் நடத்தப்படும் நிலை சோதனைத் தேர்வின் (Achievement Test) மூலமாக மாணவர்கள் கல்வியில் பெற்ற முன்னேற்றம் அளவிடப்படும். இந்தத்திட்டம் மாணவர்களின் கற்றல் குறியீடுகளின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படுவதால், மாணவர்களின் கற்றல் திறன் மேம்பாடு உறுதி செய்யப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 695.41 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

**56.** புதுச்சேரி மாநில விளையாட்டுக் கழகம் (Pondicherry State Sports Council) மற்றும் இராஜீவ் காந்தி விளையாட்டுப் பள்ளி (Rajiv Gandhi School of Sports) ஆகியவற்றை

இணைத்து மற்ற மாநிலங்களில் இருப்பது போல புதுச்சேரி மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (Sports Development Authority) என்ற அமைப்பு இந்தக் கல்வி ஆண்டில் (2020-21) உருவாக்கப்படும். இதன் மூலமாக விளையாட்டு மேம்பாடு தொடர்பான அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைப்புடன் விரைவாகச் செய்ய வழிவகை ஏற்படும்.

**57.** பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் உள்ள அனைத்து விளையாட்டுக் கட்டமைப்புகளையும் ஆய்வு செய்து, அரசிடம் பதிவு பெற்ற மாநில விளையாட்டுச் சங்கங்கள் மூலமாகக் கட்டமைப்புகளைச் செம்மைப்படுத்தி, அதிகாலை முதல் இரவு வரை விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையில், விளையாட்டுச் சங்கங்களுடன் இணைந்து புதிய நிர்வாக, நடைமுறைகள் இந்த ஆண்டு (2020-21) முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர்கள் அதிகப் பயன் பெறுவார்கள். விருப்பமான விளையாட்டுப் பிரிவில் சிறப்பாகப் பயிற்சிகள் பெற வாய்ப்புகள் பெருகும்.

**58.** சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கான ரொக்கப் பரிசும், மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கான மானியமும் விரைவில் வழங்கப்படும்.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**59.** எனது அரசு பள்ளிக் கல்வியைப் போலவே உயர் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. உயர் கல்விக்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் உறுதி செய்வதன் மூலம் இளைஞர்கள் தகுந்த உயர்கல்விப் படிப்பைத் தேர்ந்தெடுத்து தங்களின் எதிர்கால வாழ்க்கையை உறுதி செய்வதற்கு உகந்த சூழ்நிலைகளை நம் மாநிலத்தில் உயர்கல்வித்துறை மூலம் தொடர்ந்து உருவாக்கி வருகிறோம்.

**60.** எனது அரசு இந்த வரவு-செலவுத் திட்டத்தில், பெருந்தலைவர் காமராசர் மாணவர் கல்வி நிதி உதவி திட்டத்தின்கீழ் ₹ 31.35 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, பல்வேறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் (Ph.D.) ஆராய்ச்சி செய்யும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், ஆராய்ச்சி மாணவர் ஒவ்வொருவருக்கும் தலா ₹ 70,000 இந்த ஆண்டில் வழங்கப்படும்.

**61.** பெருந்தலைவர் காமராசர் மாணவர் நல நிதி என்ற சிறப்பு நிதி, இந்த நிதியாண்டிலிருந்து தொடங்கப்படும். இதன்மூலம் மாணவர்களுக்குத் தேவையான மருத்துவம் உள்ளிட்ட அவசர



,

தேவைகளுக்காகவும் மற்ற நலத்திட்டங்களுக்காகவும் நிதி உதவி வழங்கப்படும். நடப்பு நிதி ஆண்டில் இந்த நலத்திட்டத்திற்கான வரைமுறைகள் வகுக்கப்படும். இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக ₹ 50 இலட்சம் இந்த நிதியாண்டில் ஒதுக்கப்படும்.

**62.** புதுச்சேரி இலாசுப்பேட்டையில் உள்ள காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சமுதாயக் கல்லூரி, இதர உயர்கல்வி மையங்கள், பள்ளிக்கூடங்கள், விளையாட்டு மையங்கள், மோதிலால் நேரு தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்நுட்ப பயிற்சிப் பள்ளி ஆகிய பெரு கல்வி நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளை ஒன்றிணைத்து புதியதாக "மகாத்மா காந்தி கல்வி நகரம்". (Mahatma Gandhi Educational City) நிறுவப்பட்டு, அதற்கான திட்ட வரைபடம் (Master Plan) விரைவில் தயார் செய்யப்படும்.

**63.** எனது அரசு எடுத்த தொடர் முயற்சிகளின் காரணமாக புதுச்சேரி பொறியியல் கல்லூரியை தொழில்நுட்ப பல்கலைக் கழகமாகத் தரம் உயர்த்துவதற்கான "புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்ட மசோதாவுக்கு" மாண்பமை குடியரசுத் தலைவர் கடந்த மார்ச் 2020ல் ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கிணங்க புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டமானது 24-6-2020 அன்று புதுச்சேரி அரசிதழில் வெளியிடப்பட்டது. புதுச்சேரி ஒன்றியத்து

ஆட்சிப்பரப்பின் முதலாவது மாநில அரசுப் பல்கலைக்கழகமாக இது விளங்குவது நமக்குப் பெருமையளிப்பதாகும். காரைக்காலில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியும் (PKIET), ஏனாம் பொறியியல் கல்லூரியும் மேற்படி புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக நடப்பு ஆண்டிலிருந்து செயல்படும். அரசு பாலிடெக்னிக் பயிலகங்கள் அனைத்தும் இந்தப் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

**64.** காரைக்கால் பெருந்தலைவர் காமராசர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் (PKIET) (i) வேளாண் பொறியியல், (ii) பெட்ரோ – வேதிப் பொறியியல், மற்றும் (iii) உயிரி – மருத்துவப் பொறியியல் போன்ற மாணவர்கள் விரும்பும் புதிய பாடப் பிரிவுகள் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதன் மூலம் அக்கல்லூரி மரபுசாரா பன்முகப் பொறியியல் பாடப் பிரிவுகள் கொண்ட சிறந்த நிறுவனமாக நிலை நிறுத்தப்படும். புதிய காரைக்கால் PKIET கல்லூரி வளாகம் அமைக்க ஏற்கனவே 25 ஏக்கர் நிலம் காரைக்காலில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கு கட்டமைப்பு வசதிகளை உருவாக்க முதற்கட்டமாக ₹ 7 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. PKIET கல்லூரி இயங்கிவரும் தற்போதைய தற்காலிக வளாகம் ₹ 25 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட உள்ளது.

**65.** புதியதாகத் துவங்கப்படும் ஏனாம் பொறியியல் கல்லூரியானது கணினிப் பொறியியலில் சிறப்பு வாய்ந்த புதிய பாடப்பிரிவுகளுடன் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை (IIIT) அடியொற்றி நிலை நிறுத்தப்படும். (i) Robatic and Automation, (ii) 3D Animation and Grapics and (iii) Digital Techniques for Design and Planning என்னும் மூன்று பாடப் பிரிவுகளுடன் கூடிய ஏனாம் அரசு பொறியியல் கல்லூரி இந்த கல்வி ஆண்டிலிருந்தே செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ₹ 26 கோடி மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்படவுள்ள இக்கல்லூரிக்கான கட்டுமானப் பணி இந்த நிதி ஆண்டிலேயே நிறைவடையும். இந்தக் கல்லூரிக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J. அப்துல்கலாம் அவர்களின் பெயர் சூட்டப்படும்.

**66.** காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தை (PG Centre) மாநில அரசின் கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகமாக சிறப்பாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுச்சேரி காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்காக ₹ 5 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அதேபோல் தேசிய கட்டடக்கலை பள்ளி (School of Planning and Architecture) ஒன்றைப் புதுச்சேரியில்

நிறுவுவதற்கும் மத்திய அரசுக்குத் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதேபோன்று தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்லூரியின் (National Institute of Fashion Technology) மையம் ஒன்றை புதுச்சேரி மாநிலத்தில் அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதுச்சேரி அரசு சட்டக் கல்லூரியை தேசிய சட்டப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்துவதற்கான நிர்வாகப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன. வரைவு மசோதாவும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான அனைத்து ஒப்புதல்களையும் பெறும் பணிகள் இந்த நிதி ஆண்டே (2020-21) முடிக்கப்படும்.

**67.** புதுச்சேரி பொறியியல் கல்லூரியில் (i) Electronics & Communication, (ii) Civil, (iii) Mechanical and (iv) Computer Science Engineering ஆகிய நான்கு பாடப் பிரிவுகளில் 240 இடங்கள் கடந்த ஆண்டு அதிகரிக்கப்பட்டன. அதேபோல் நடப்புக் கல்வி ஆண்டில் (i) Electronics & Instrumentation, (ii) Electrical & Electronics and (iii) Information Technology ஆகிய மூன்று பாடப்பிரிவுகளில் கூடுதலாக 180 இடங்கள் அதிகரிக்க ஒப்புதல் பெறப்படும். அதற்கான கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், 60 மாணவர்கள் சேர்க்கையுடன் கூடிய "B.Tech. (Mechatronics)" என்னும் புதிய பாடப் பிரிவு இந்த கல்வி ஆண்டிலேயே தொடங்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. புதுச்சேரி பொறியியல் கல்லூரியில் Innovation Entrepreneur & Venture Development என்ற மேலாண்மை

முதுகலைப் பாடப் பிரிவை (MBA) இந்த ஆண்டே (2020-21), 60 இடங்களுடன் தொடங்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

**68.** இது மட்டுமன்றி பாலிடெக்னிக் பயிலகங்களில் தற்போதுள்ள ஆசிரியர்கள் மற்றும் உட்கட்டமைப்பைப் பயன்படுத்தி இந்த கல்வி ஆண்டில் அதிக வேலை வாய்ப்புள்ள நான்கு இளங்கலை (Bachelor of Vocational "B.Voc.") பாடப்பிரிவுகள் புதுச்சேரி பொறியியல் கல்லூரியால் தொடங்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் புதுச்சேரி மகளிர் பாலிடெக்னிக் பயிலகத்தில் "Interior Design (Civil)" என்னும் பாடப் பிரிவும், அரசு மோதிலால் நேரு பாலிடெக்னிக் பயிலகத்தில் "Refrigeration and Air Conditioning (Mechanical)" என்னும் பாடப் பிரிவும், காரைக்கால் மகளிர் பாலிடெக்னிக் பயிலகத்தில் "Communication (Electronics & Communication)" என்னும் பாடப் பிரிவும் மற்றும் ஏனாம் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பாலிடெக்னிக் பயிலகத்தில் "Graphics and Multimedia and Mobile App Development (Computer Science / Information Technology)" என்னும் பாடப்பிரிவும் தலா 30 இடங்களுடன் இந்த ஆண்டே தொடங்கப்படும்.

**69.** இந்த கல்வி ஆண்டிலேயே தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான வேலைவாய்ப்பு உடைய பாடப்பிரிவுகளில் பட்டயம் (Diploma), சான்றிதழ் (Certificate) மற்றும் பயிற்சித் திட்ட (Training) வகுப்புகளை, நம் மாநிலத்தில் நடத்தும் பொருட்டு

தேசிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (NIELIT) புதுச்சேரி மையம் ஒன்றை புதுச்சேரி மகளிர் பாலிடெக்னிக் பயிலகத்தில் அமைப்பதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**70.** அரசு கல்லூரிகளில் ஆசிரியர் பணி இடங்களை மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் நிரப்புதல், புதிய பதவி இடங்களை உருவாக்குதல், பணி அமர்த்தும் விதிகளைச் சீராய்வு செய்தல் உள்ளிட்ட நிர்வாகப் பணிகள் இந்த ஆண்டே செய்து முடிக்கப்படும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள கல்லூரி மேலாண்மை தொகுப்பு (College Management System) ₹ 1 கோடி மதிப்பீட்டில் விரைவில் மேம்படுத்தப்படும். இதன் மூலம் கல்லூரிகளில் பல்வேறு தரவுகள் இணையம் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டு உயர் கல்வியை மாணவ மாணவிகளுக்கு மிகச்சிறப்பாக சென்றடைய வழிவகைகள் ஏற்படும்.

**71.** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் பொறியியல், வேளாண்மை, கால்நடை, மருத்துவக் கல்லூரிகளிலும் பயில்வதற்காக இந்த ஆண்டு விண்ணப்பக் கட்டணங்கள் முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது. இதனால் 10,000க்கு

மேலான மாணவர்கள் பயன்பெறுவர். மேலும், இந்த ஆண்டு கல்லூரிகளில் செலுத்தப்படும் இதர வகைக் கட்டணங்களான நூலகக் கட்டணம், விளையாட்டு தினக் கட்டணம், கல்லூரி இதழ் கட்டணம், கல்லூரி நாள் விழா கட்டணம், ஆய்வகக் கட்டணம் உள்ளிட்ட கட்டணத் தொகைகள் செலுத்துவதிலிருந்து வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மாணவ மாணவிகளுக்கு முழுவதும் விலக்கு அளிக்கப்படும். வங்கிகள் மூலமாக இந்த கல்வி ஆண்டில் 2020-21 ₹ 87 கோடி அளவுக்கு கல்விக்கடன் மாணவர்களுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**72** புதுச்சேரி இலாசுப்பேட்டையில் சமுதாயக் கல்லூரி செயல்பட்டு வருவதைப்போல் மாஹே பகுதியில் புதிய சமுதாயக் கல்லூரி புதுச்சேரி பல்கலைக்கழகத்தால் அமைக்கப்படும். இதற்காக மாஹே பகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு விரைவில் இந்த நிலம் வழங்கப்படும். இதன் மூலம் மாஹே பகுதி மாணவர்களும் இளைஞர்களும் பலன் பெறுவர்.

**73.** 2020-21ல் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்காக ₹ 272.36 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாண்பமை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மின்விசை**

**74.** எனது அரசு அனைத்து பிரிவு மின் நுகர்வோருக்கும் 24 மணிநேரமும் தடையின்றி மின்சாரம் வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். வில்லியனூர், காலாப்பட்டு மற்றும் கோர்க்காடு துணைமின் நிலையங்களிலுள்ள 10/16 MVA திறனுள்ள மின்மாற்றிகளை ₹ 2.03 கோடி செலவில் 25 MVA திறனுடைய மின்மாற்றிகளாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இலாசுப்பேட்டை பகுதியில் ஏற்கனவே கையகப்படுத்திய இடத்தில் துணைமின் நிலையம் ஒன்று அமைக்க இந்த ஆண்டு பணிகள் தொடங்கப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உரிமங்கள் வழங்குதல் மற்றும் சட்டப்பூர்வமான ஆய்வுகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு எனத் தனியே ஒரு மின் ஆய்வகம் (Electrical Inspectorate) அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு நடப்பு ஆண்டிலிருந்து செயல்படும்.

**75.** மேலும், வெவ்வேறு திறனுடைய 80 பகிர்ந்தளிக்கும் மின்மாற்றிகள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட உள்ளன. மற்றும் 15 கிலோ மீட்டர் அளவுக்கு உயர்மின் அழுத்தப் பாதைகளும், 30 கிலோ மீட்டர் அளவிற்கு குறைந்தமின் அழுத்தப் பாதைகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 10 தொழிற்சாலைகளுக்கு உயர்மின் அழுத்த இணைப்புகளும், 50 தொழிற்சாலைகளுக்கு குறைந்த மின் அழுத்த இணைப்புகளும், 30 விவசாய பம்ப் செட்டுகளுக்கும், 13,000 வீடுகளுக்கும், 1,500 வர்த்தக நிறுவனங்களுக்கும், 500 புதிய தெரு விளக்குகளுக்கும்

மின் இணைப்பு வழங்கப்பட உள்ளன. 10 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு உயர் மற்றும் குறைந்தமின் அழுத்த புதை மின்வடங்கள் புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 100 குறைந்தமின் அழுத்த மேல்நிலை இணைப்புகள் புதை மின்வடங்களாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. 10,000 பழுதடைந்த / நின்றுபோன மின்சார மீட்டர்களை நிலை மின் இயல் மீட்டர்களாக மாற்ற இந்த வருடம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**76.** மின்வெட்டு குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு முன்கூட்டியே செய்தித்தாள்களின் வழியே தெரிவிப்பதுபோல், குறுஞ்செய்தி (SMS) மூலமாகவும் தெரியப்படுத்த மின் துறைக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**77.** வீட்டு மின் நுகர்வோருக்கு மானிய விலையில் மேற்கூரை சூரிய மின் உற்பத்தி பேனல்கள் அமைக்கும் திட்டத்தில் ₹ 150 கோடி செலவில் மின் கட்டமைப்புடன் மொத்தம் 30 மெகா வாட் திறன்கொண்ட மேற்கூரை சூரிய மின் உற்பத்தி பேனல்கள் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு மத்திய நிதி உதவி மற்றும் 60 விழுக்காடு மின் நுகர்வோர்களின் பங்களிப்பு மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இதனால் உற்பத்தி செய்யப்படும் சூரிய மின்சாரத்தை வீட்டு மின் நுகர்வோர்கள் மிக குறைந்த விலையில் பயன்படுத்தலாம்.

**78.** புதியதாக "புதுச்சேரி மின்விசைத் திறன்மேம்பாட்டு இயக்கம் திட்டம்" மின் துறையில் உருவாக்கப்பட்டு அதன் மூலம் வீட்டுக்கூரைகளில் அமைக்கப்படும் சூரிய சக்தி மற்றும் இதர புதுப்பிக்கவல்ல மின்திறனை மேம்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். சுமார் 15,000 வீடுகளின் கூரைகளில் சூரிய தகடு அமைக்கப்பட்டு 30 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், புதுச்சேரி பொறியியல் கல்லூரியில் (CSR) நிதி மூலம் சூரிய தகடு அமைக்கப்பட்டு 2 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், கரியமாணிக்கம், குரும்பாபேட் KVK பண்ணை ஆகிய இடங்களில் உள்ள விவசாயத்துறை கட்டடங்களின் கூரைகளில் சூரிய தகடு அமைக்கப்பட்டு 2 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும், இதன் மூலம் சேமிக்கப்படுகின்ற மின்ஆற்றலைக் கருத்தில் கொண்டு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் சலுகையான அதாவது 100 யூனிட் வரை பயன்படுத்தி வரும் ஏழைக் குடும்பங்களின் மின்சார செலவு 50 விழுக்காடு மானியத்திலிருந்து உயர்த்தப்பட்டு முழுவதுமாக இந்த நிதியாண்டு முதல் தள்ளுபடி செய்யப்படுகிறது. 100 யூனிட் வரை பயன்படுத்தும் சுமார் 1,40,000 ஏழைக் குடும்பங்களுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்படும். இந்தக் குடும்பங்கள் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணத்தை அரசே செலுத்திவிடும்.

**79.** மின்கட்டமைப்புடன் கூடிய சூரிய மின் உற்பத்தி பேனல்களை அரசு விவசாய நிலங்களில் அமைக்கும் திட்டத்தில் 1.50 முதல் 2.0 வரை மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி பேனல்கள் கரியமாணிக்கம் மற்றும்

அய்யங்குட்டிபாளையத்தில் உள்ள வேளாண் துறை நிலங்களில் நிறுவப்படும். இதனால் விவசாயப் பணிகள் பாதிக்கப்படாது இதே திட்டம் தனியார் விவசாய நிலங்களிலும் செயல்படுத்தப்படும்.

**80.** ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டு திட்டத்தில் (IPDS) உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு :

- 31 புதிய மின் மாற்றிகள் புதுச்சேரி, மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் அமைக்கப்படும்.
- 4,831 ஒரு முனை LPRF மின் அளவிகளும் மற்றும் 932 மும்முனை LPRF மின் அளவிகள் காரைக்கால் பகுதிகளிலும் அமைக்கப்படும்.
- 9.45 கிலோமீட்டர் புதை மின்வட மின்னூட்டிகள் புதுச்சேரி, மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் அமைக்கப்படும்.
- 10 கிலோமீட்டர் மேல்நிலை உயர்மின் அழுத்த மின்னூட்டிகள் புதுச்சேரியில் அமைக்கப்படும்.
- 140KWp சூரிய மின் உற்பத்தி பேனல்கள் புதுச்சேரி, அரசு கட்டடங்களில் அமைக்கப்படும்.

மத்திய அரசின் திட்டத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு :

- 8 புதிய மின் மாற்றிகள் புதுச்சேரியில் அமைக்கப்படும்.

- 10,328 ஒரு முனை LPRF மின் அளவிகளும் மற்றும் 11,307 மும்முனை LPRF மின் அளவிகள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அமைக்கப்படும்.

- 1,250 மின்மாற்றிக்கான மின் அளவிகள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொருத்தப்படும்.

- 35 கிலோமீட்டர் மேல்நிலை உயர்மின் அழுத்த மின்னூட்டிகள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அமைக்கப்படும்.

**81.** அரசு ஒப்புதலின்படி மின்சார ஊடிணைப்பு மற்றும் பங்கீட்டு கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் பெருகிவரும் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கான வேலைகளை செயல்படுத்துவதற்கும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) வாயிலாக ₹ 746.53 கோடி கடன் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**82.** வில்லியனூர், காலாப்பட்டு, கோர்க்காடு மற்றும் திருபுவனை துணை மின்நிலையங்களில் உள்ள நான்கு 10/16 MVA மின் மாற்றிகளின் திறனை 25 MVA திறனை மாற்றியமைக்க ₹ 4.06 கோடி செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**83.** 30 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு. 20 மின் மாற்றிகளின் திறன் அதிகரிக்கப்படவுள்ளது. 55 கிலோ மீட்டர் புதிய உயர்மின் அழுத்த மற்றும் தாழ்மின் அழுத்தப் பாதைகளின் திறனை மாற்றி அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 110 குறைந்த அழுத்த மேல்நிலை மின் இணைப்புகளை புதைமின் வடமாக மாற்றுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 15,000 பழைய மின் அளவிகள் இயல் ஆற்றல் மின் அளவிகளாக மாற்றப்படவுள்ளன.

**84.** 2017-18ஆம் ஆண்டு முதல் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து வேளாண்மின் நுகர்வோர்களுக்கும் 100 விழுக்காடு மின் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. இச்சலுகை இந்த ஆண்டு 2020-21லும் வழங்கப்படும்.

**85.** மின் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள், பணியின்பொழுது, மின் விபத்தினால் இறக்க நேரிடுகிறது. இந்த தொழிலாளர்களின் நலன் கருதி மின் துறை தொழிலாளர்களுக்கு ₹ 10 இலட்சத்திற்கான விபத்து காப்பீடு அமுல்படுத்த எனது அரசு முடிவு செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 1,736.87 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மீன் வளம் மற்றும் மீனவர் நலம்**

**86.** மீனவர் நலனில் தனி அக்கறை கொண்டுள்ள எங்கள் அரசு, இந்த நிதி ஆண்டு முதல், ஏற்கனவே செயல்படுத்திவரும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் திட்டங்களையும், புதியதாக

அறிமுகப்படுத்தப்படவுள்ள திட்டங்களையும் மற்றும் விவசாயிகள் கடன் அட்டை திட்டத்தையும் ஒருங்கிணைத்து 'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மீன்வள புத்தாக்கத் திட்டம்' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலமாக மீன்பிடித் திறனை மேம்படுத்தவும், உள்நாட்டு மீன்வளர்ப்பு உற்பத்தியை பெருக்குவதற்கும், மீனவர் மற்றும் மின்வளர்ப்போர் ஆகியோரின் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்துவதற்கும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இயலும். மேலும், இத்திட்டத்தால் மீன்வளங்களைப் பாதுகாப்பதற்கும், கடல்வள மேலாண்மையினை உறுதிசெய்யவும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் வழிவகை ஏற்படும் இத்திட்டத்தின் கூறுகள் பின்வருமாறு :

(i) கடந்த 2019-20ஆம் நிதி ஆண்டில் மீனவர் முதியோர் ஓய்வூதியத் தொகை 50-59 வயது உள்ளவர்களுக்கு ₹ 1,570லிருந்து ₹ 2,000ஆக உயர்த்தியும், 60-79 வயது உள்ளவர்களுக்கு ₹ 2,090லிருந்து ₹ 2,500 ஆக உயர்த்தியும், 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது உள்ளவர்களுக்கு ₹ 3,135லிருந்து ₹ 3,500ஆக உயர்த்தியும் ஏற்கனவே அறிவித்தபடி நிறைவேற்றப்பட்டு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இந்த உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகை இந்த ஆண்டும் மீனவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும். இதற்காகத் தேவைப்படும் நிதி ₹ 22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) மீன்பிடி தடைக் காலங்களில், மீனவக் குடும்பங்களுக்கு, மீன்பிடி தடைக்கால நிவாரணமாக, குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை ₹ 5,500லிருந்து ₹ 6,500ஆக உயர்த்தி வழங்குவதற்குத் தேவைப்படும் நிதி ₹ 12.41 கோடி ஒதுக்கப்பட்டு, இந்த நிதி ஆண்டில் உடனடியாக வழங்கப்படும்.

(iii) மழைக் காலங்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் காலங்களான அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், தொடர்ச்சியாக மீன்பிடி தொழில் செய்வதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, மீனவர்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் நிவாரணம், குடும்பம் ஒன்றிற்கு ₹ 2,500லிருந்து ₹ 3,000ஆக உயர்த்தி வழங்குவதற்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கப்படும்.

(iv) மீனவர்கள் எவரேனும் இறக்க நேரிட்டால், அவர்களின் வாரிசுகளுக்கு ‘உடனடி இறப்பு நிவாரணம்’ என்ற திட்டத்தின்கீழ் ₹ 2 இலட்சம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினை இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காகத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(v) மீன்பிடி தடைக்காலங்களில் பழுது நீக்குவதற்காகப் பெரிய விசைப்படகுகளுக்கு வழங்கப்பட்டுவரும் நிதி உதவியைப் போன்று, வெளிப்புறம் மோட்டார் பொருத்திய பைபர் படகுகள்/கட்டுமரங்கள் போன்ற சிறு மீன்பிடி படகுகளுக்கும், நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கும் மத்திய அரசின் மீன்பிடி தடைக்காலம் பொருந்தும் என்பதாலும், மீன் வளங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், இந்த நிதி ஆண்டிலிருந்து, மீன்பிடி தடைக்காலங்களில் பழுது நீக்குவதற்காக, பதிவு பெற்ற வெளிப்புறம் மோட்டார் பொருத்திய, பைபர் கட்டுமரங்கள் / படகுகளுக்கு ₹ 5,000 நிதி உதவி வழங்கப்படுவதுடன், இதற்குத் தேவைப்படும் நிதி ₹ 1.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(vi) மீன்பிடித் தடைக்காலங்களில் பதிவு பெற்ற மீன்பிடி மரம்/இரும்பு/பைபர் விசைப்படகுகளுக்கு பழுது நீக்குவதற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ₹ 20,000லிருந்து ₹ 30,000ஆக உயர்த்தியும், பதிவு பெற்ற செதில் வலை (Gill Netters) விசைப்படகுகளுக்கு வழங்கப்பட்டு

வரும் நிதி உதவி ₹ 10,000லிருந்து ₹ 20,000ஆக உயர்த்தியும் இந்த நிதி ஆண்டில் வழங்கப்படும்.

(vii) பதிவு பெற்ற மீன்பிடி விசைப்படகுகளுக்குச் செய்யப்படும் காப்பீட்டு சந்தாத் தொகையில் இதுவரை திருப்பி அளிக்கப்பட்டு வந்த 75 விழுக்காடு தொகையை காப்பீட்டு கம்பெனிகளுக்கு மீன்வளத் துறையே செலுத்தும். இதற்காக தேவைப்படும் நிதி ₹ 46 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(viii) புதிய மரம்/இரும்பு/பைபர் மீன்பிடி விசைப்படகுகள் கொள்முதல் செய்வதற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் 50 விழுக்காடு மானிய தொகையான ₹ 20 இலட்சம் திட்டம் இந்த நிதி ஆண்டில் செயல்முறைப்படுத்தப்படும்.

(ix) இயந்திரம் பொருத்தாத புதிய பைபர் கட்டுமரங்கள் கொள்முதல் செய்வதற்கு வழங்கப்படும் 50 விழுக்காடு மானியத் தொகையான ₹ 16,500 அளிக்கும் திட்டம், இந்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(x) எங்கள் அரசு அறிவித்தபடி, 2,650 ஐஸ் பெட்டிகளை மீன் விற்பனையாளர்களுக்கு இலவசமாக வழங்குவதற்குத் தேவைப்படும்

நிதியான ₹ 1.33 கோடி இந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்டு, மீன் விற்பனையாளர்களுக்கு இலவச ஐஸ் பெட்டிகள் வழங்குவதற்குண்டான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

(xi) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த நன்னீர் மீன் வளர்ப்போர்களுக்கு வழங்கப்படும் இடுபொருள் மானியம், ஏக்கர் ஒன்றுக்கு ₹ 7,500 வீதம் வழங்குவதற்கு தேவைப்படும் நிதி ₹ 26.90 இலட்சம் ஒதுக்கப்பட்டு, இந்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.

(xii) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 75 விழுக்காடு மற்றும் அதற்குமேல் மதிப்பெண் பெறும் மீனவ மாணவ மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுத் தொகை வழங்குவதற்கு தேவைப்படும் நிதி ₹ 32.75 இலட்சம் ஒதுக்கப்பட்டு இந்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.

(xiii) புதுச்சேரி, மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளை சேர்ந்த மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை

வாங்குவதற்கு வழங்கப்படும் 50 விழுக்காடு மானியத் தொகை இந்த நிதி ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படும். இதற்காகத் தேவைப்படும் நிதி ₹ 40 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(xiv) ₹ 4.58 இலட்சம் செலவில், மீனவர்கள், மீன்வளர்ப்போர், மீன் வியாபாரிகள் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்களுக்கும், அவர்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்சித் தொகுப்பு அளிக்கப்படவுள்ளது. மேலும், மீன்வளத்துறையில் புதிய திட்டங்களை வகுப்பதற்கும், நடைமுறையில் உள்ள திட்டங்களை மேம்படுத்தவும் மதிப்பீடு (Survey) மற்றும் கணக்கெடுப்பு மிகவும் அவசியம் என்பதால், சுமார் ₹ 45.80 இலட்சம் செலவில் மீன்வள விவரக்குறிப்பு சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(xv) பயனாளிகளின் பங்குத் தொகையுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின்படி, ‘புதிய மீன் பண்ணைக் குளங்கள் அமைத்தல்’ திட்டத்தின்கீழ் ஹெக்டேருக்கு ₹ 7 இலட்சம் என்கிற மதிப்பீட்டில், 15 ஹெக்டேர் பரப்பிற்கு நன்னீர் மீன்வளர்ப்பிற்காக மானியமாக ₹ 53.20 இலட்சம் வழங்கப்படும்.

(xvi) புதியதாகத் திருமணமானவர்கள், மீன்பிடி தடைக்காலம் மற்றும் மழைக்கால நிவாரணம் போன்ற நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு ஏதுவாக, அவர்களின் குடும்ப அட்டைகளுக்கு பதிலாக, அரசால் அங்கீகரிக்கப்பட்ட திருமணச் சான்றிதழின் அடிப்படையில் நிவாரணத் தொகை வழங்குவதற்காக, திட்ட அறிவிப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

(xvii) ஈமச்சடங்கு நிதி உதவி, ₹ 2,000லிருந்து ₹ 10,000ஆக உயர்த்தப்பட்டு, முதியோர் ஓய்வூதியம் பெற்ற மீனவர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும்.

(xviii) புதுச்சேரி மாநிலத்தில், மத்திய அரசு, மாநில அரசு, உலக வங்கி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ஆகிய நிதி தொகுப்புகளின் மூலம் நம் மாநில மீனவர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட மீன்பிடி துறைமுகம், மீன்பிடி படகுகள் தரையிறங்கும் தளம், குளிர்சாதன ஆலை, மீன் அங்காடி போன்ற சொத்துக்களும், தொடர்புடைய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ‘ஒரு பொதுவான

சொத்து’ என்பதற்கான அரசாணை விரைவில் வெளியிப்படும். இதனால் மேற்கூறிய உட்கட்டமைப்பு வசதிகள் முழுவதையும் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த அனைத்து மீனவர்களும் பயன்படுத்த வழிவகை ஏற்படும்.

(xix) எதிர்வரும் நவம்பர் 21ஆம் தேதியான உலக மீனவர் தினத்தன்று புதுச்சேரியில் மீன்வள வளர்ச்சிக் கழகம் துவக்கப்படும்.

(xx) புதுச்சேரி கடல் பகுதியிலுள்ள மீன்வளங்களைப் பாதுகாப்பதற்கும். மீனவர்களின் வாழ்வாதாரத்தினை உறுதிசெய்யவும், கண்ணா படகுகளை (Purse Seine) ஆழ்கடல் தூண்டில் படகுகள் அல்லது செவுள் வலை படகுகளாக மாற்றுவதற்கு 50 விழுக்காடு மானியமாக ₹ 5 இலட்சத்திற்கு மிகாமல் நிதி உதவி வழங்கப்படும்.

(xxi) உவர்நீர் மீன்வளர்ப்பிற்கு புதிய பண்ணைக் களங்கள் அமைத்தல் என்ற திட்டத்தின்கீழ் 7 பயனாளிகளுக்கு ஹெக்டேருக்கு ₹ 8 இலட்சம் மதிப்பீட்டில் 5 ஹெக்டேர் பரப்பளவிற்கு மானியமாக ₹ 20.80 இலட்சம் வழங்கப்படும்.

(xxii) உவர்நீர் மீன்வளர்ப்பிற்குத் தேவைப்படும் இடுபொருள்கள் வாங்குவதற்கு, ஹெக்டேருக்கு ₹ 6 இலட்சம் மதிப்பீட்டில் 6 ஹெக்டேர் பரப்பளவிற்கு மானியமாக ₹ 15.60 இலட்சம் வழங்கப்படும்.

(xxiii) அலங்கார மற்றும் பொழுதுபோக்கு மீன்வளம் ஊக்குவித்தல் திட்டத்தின்கீழ புறக்கடை அலங்கார மீன்வளர்ப்பு அலகு (நன்னீர் மீன்கள்) நிறுவ ₹ 8.40 இலட்சம் மதிப்பில் நிதி உதவி அளிக்கப்படும். நடுத்தர அளவு அலங்கார மீன்வளர்ப்பு அலகு (கடல் மற்றும் நன்னீர் மீன்கள்) நிறுவ, ₹ 3.20 இலட்சம் மதிப்பில் நிதி உதவி அளிக்கப்படும். ஒருங்கிணைந்த அலங்கார மீன்வளர்ப்பு அலகு (நன்னீர் மீன்கள் இனப் பெருக்கம் மற்றும் வளர்ப்பு) அமைக்க, ₹ 10 இலட்சம் மதிப்பில் நிதி உதவி அளிக்கப்படும்.

(xxiv) தொழில்நுட்பம் உட்புகுத்துதல் மற்றும் தத்தெடுத்தல் திட்டத்தின்படி தொழில்நுட்பத்தை உட்புகுத்தி அதிக மீன் மகசூல் பெறும் நோக்கில் "புறக்கடை மறு சுழற்சி மீன் வளர்ப்பு முறை அமைப்பு" மூலம், மீன் வளர்ப்போர் 5 நபர்களுக்கு ₹ 1.20 இலட்சம் மதிப்பில் நிதி உதவி அளிக்கப்படும்.

(xxv) பயனாளி சார்ந்த திட்டத்தின்படி ₹ 40 இலட்சம் திட்டச் செலவில் 10-50 டன் திறன்கொண்ட குளிர் களஞ்சியங்கள், பனிக்கட்டி உற்பத்தி நிலையம் (Cold Storages / Ice Plants) அமைப்பதற்கு ஏதுவாக ஆர்வமுள்ள தனியார் தொழில் முனைவோருக்கு நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

(xxvi) ₹ 25 இலட்சம் அலகு விலையில் "குளிரூட்டப்பட்ட வாகனம்" (Refrigerated Vehicle) வாங்குவதற்கு ஏதுவாக ஒரு பயனாளிக்கு/ஆர்வமுள்ள தனியார் தொழில்முனைவோருக்கு 40 விழுக்காடு மானியமாக ₹ 10 இலட்சம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

(xxvii) ₹ 20 இலட்சம் அலகு விலை வீதம் "காப்பிடப்பட்ட வாகனம்" (Insulated Vehicle) வாங்குவதற்கு ஏதுவாக 3 பயனாளிகளுக்கு/ஆர்வமுள்ள தனியார் தொழில்முனைவோருக்கு வழங்கப்படவுள்ளது. ₹ 75,000 அலகு விலை வீதம் "ஐஸ் பெட்டியுடன் கூடிய இரண்டு சக்கர வாகனம்" (Motor cycle with Ice Box) வாங்குவதற்கு ஏதுவாக 20 எண்ணிக்கையிலான பயனாளிகளுக்கு 40 விழுக்காடு மானிய நிதி உதவி ₹ 6 இலட்சம்

வழங்கப்படவுள்ளது. ₹ 20 இலட்சம் அலகு விலை வீதம் “உயிர் மீன் விற்பனை மையம்” (Live Fish Vending Centre) அமைப்பதற்கு ஏதுவாக 2 ஆர்வமுள்ள மீன் வளர்ப்போர்/தனியார் தொழில் முனைவோருக்கு 40 விழுக்காடு மானியமாக ₹ 24 இலட்சம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

(xxviii) ₹ 10 இலட்சம் அலகு விலை வீதம் “மீன் விற்பனை நிலையம்” (Fish Kiosks) அமைப்பதற்கு ஏதுவாக 5 ஆர்வமுள்ள தனியார் தொழில்முனைவோருக்கு முறையே 60 விழுக்காடு மானியத்திலும் ஆக மொத்தம் ₹ 30 இலட்சம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது. ₹ 50 இலட்சம் அலகு விலை வீதம் “மதிப்பு கூட்டப்பட்ட மீன் உணவு விற்பனை நிலையம்” (Fish Value Add 2 ஆர்வமுள்ள தனியார் தொழில் முனைவோருக்கு மானியமாக ₹ 60 இலட்சம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

(xxix) காரைக்காலில் மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்கள் மின்னணு முறையில் வணிகம் மேற்கொள்வதற்கு வழிவகை செய்யப்படும்.

(xxx) ஆழ்கடல் மீன்பிடிப்பை மேம்படுத்துதல் திட்டத்தின்படி பாரம்பரிய மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி கலன்கள் கொள்முதல் செய்ய நிதி உதவி வழங்கப்படும். யூனிட் விலை ₹ 120 இலட்சம் உடைய ஆழ்கடல் மீன்பிடி கலன் கொள்முதல் செய்வதற்கு மீனவர்களின் நிதிச் சுமையை குறைப்பதற்கு, மத்திய அரசின் 40 விழுக்காடு பங்குடன் (₹ 48 இலட்சம்) கூடுதலாக மாநில அரசின் 25 விழுக்காடு பங்கான ₹ 30 இலட்சம் சேர்த்து வழங்கப்படும்.

(xxxi) இயந்திரப் படகுகளில் உயிர் கழிவறை (Bio Toilet) அமைப்பதற்கு யூனிட் விலை ₹ 50,000 என்ற மதிப்பீட்டில் அரசிடம் பதிவுபெற்ற மீன்பிடி விசை படகுகளுக்கு மத்திய அரசின் 40 விழுக்காடு மானிய உதவியுடன் கூடுதலாக மாநில அரசின் பங்கான 20 விழுக்காடு உதவித் தொகையும் சேர்த்து வழங்கப்படும். அதேபோல் மீனவ மகளிருக்கும் மத்திய அரசின் நிதி உதவி அளிக்கப்படும்.

(xxxii) பதிவு பெற்ற மோட்டார் இயந்திரம் பொருத்திய மீன்பிடி படகுகளுக்கு தொலை தொடர்பு அல்லது இருப்பிடம் காட்டும் கருவிகள் வாங்குவதற்கு யூனிட்

விலை ₹ 35,000 என்ற மதிப்பீட்டில், மத்திய அரசின் 40 விழுக்காடு மானிய உதவியுடன் கூடுதலாக மாநில அரசின் பங்கான 20 விழுக்காடு உதவித் தொகை சேர்த்து வழங்கப்படும். அதேபோல் மீனவ மகளிருக்கு மத்திய அரசின் 60 விழுக்காடு பங்குடன் கூடுதலாக மாநில அரசின் பங்கான 20 விழுக்காடு சேர்த்து நிதி உதவி அளிக்கப்படும்.

(xxxiii) மீனவர்களின் பாதுகாப்பினை மேம்படுத்த பாதுகாப்பு கருவிகள் வாங்குவதற்காக பதிவு பெற்ற மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளுக்கு யூனிட் விலை ₹ 1 இலட்சம் என்ற மதிப்பீட்டில் மத்திய அரசின் 40 விழுக்காடு மானிய உதவியுடன் கூடுதலாக மாநில அரசின் பங்கான 20 விழுக்காடு உதவித் தொகை சேர்த்து வழங்கப்படும். அதேபோல் மீனவ மகளிர் பெயரில் பதிவு பெற்ற மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளுக்கு மத்திய அரசின் 60 விழுக்காடு பங்குடன் கூடுதலாக மாநில அரசின் பங்கான 20 விழுக்காடு சேர்த்து நிதி உதவி அளிக்கப்படும்.

(xxxiv) மீன்வளங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் "வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு" துணைத்திட்டத்தின் (சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்) மூலம் முழு நேர மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவராகவும். மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகவும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவராகவும் மற்றும் 18 வயதிலிருந்து 60 வயதுவரை உள்ள மீனவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறலாம். பயனாளியின் பங்குத் தொகையான ₹ 1,500க்கு இரட்டிப்பு பங்கான ₹ 3,000த்தை மத்திய அரசிடம் பெற்று மொத்தம் ₹ 4,500 கொடுக்கப்படும்.

**87.** காரைக்கால் மற்றும் ஏனாம் மீன்பிடி துறைமுகங்களில் இரண்டாம் கட்ட விரிவாக்கம் செய்ய பணிகள் மேற்கொள்ளப்படும். பெரிய காலாப்பட்டு, நல்லவாடு மற்றும் தேங்காய்த்திட்டு ஆகிய மீனவ கிராமங்களில் மீன் தரையிறக்கும் மையங்கள் (Fish Landing Center) முறையே ₹ 10.17 கோடி, ₹ 10.51 கோடி மற்றும் ₹ 31.10 கோடி செலவில் நிறுவுவதற்கானத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 407 இயந்திரம் பொருத்திய கட்டுமரங்கள் பயனடையும்.தற்போது இத்திட்டத்தின்கீழ் அதிகபட்ச நிதி உதவியானது ₹ 25 கோடியாக திருத்தியமைக்கப்பட்டுள்ளதால் தேங்காய்த்திட்டில் மீன் தரையிறக்கும் மையத்தினை நிர்மாணிக்கத்

தேவையான மீதமுள்ள தொகை நிதி நிறுவனங்களிடமிருந்தோ அல்லது நபார்டு ஊரக மேம்பாட்டு நிதியின் மூலமாகவோ பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. காரைக்காலில் உள்ள பட்டிணச்சேரியில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கப்படும். காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களின் முகத்துவாரம் மற்றும் புதுச்சேரி மீன்பிடி துறைமுகத்தின் ஆற்றுப் பகுதிகளில் (Near wharf area) தூர்வார உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**88.** அரியாங்குப்பம் ஆற்று முகத்துவாரத்தில் மணல் சேர்மானத்தைத் தடுப்பதற்கான பணிகள் புனேவில் உள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆராய்ச்சி நிலையம், மற்றும் பெங்களூருவில் உள்ள மத்திய மீன்வளத்துறைக்கான கரையோரப் பொறியியல் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். சுமார் 120 மீனவ மகளிர் மற்றும் 1,000 பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதுச்சேரி நகராட்சி மூலம் நெல்லித்தோப்பில் ஒரு "சில்லறை மீன் அங்காடி" அமைக்கப்பட உள்ளது. காரைக்காலில் கலைநயம்மிக்க மொத்த வியாபார மீன் அங்காடி ஒன்றும் கட்டப்படும்.

**89.** மத்திய திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கடலோர மீனவ கிராமங்களுக்கும் மீனவ நண்பன் ("சாகர் மித்ரா") என்னும் துணைத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில், விலங்கியல்/

மீன்வளம்/இளங்கலை பட்டப்படிப்பு முடித்த இளைஞர்கள், முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்படுவர். இவர்கள் மீன்வளத்துறைக்கும் மீனவர்களுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கப் பாலமாக செயல்படுபவர். ஒவ்வொரு மீனவ கிராமங்களிலும், இவர்கள் மத்திய, மாநில அரசின் திட்டங்களையும், வழிமுறைகளையும் அரசாணைகளைப் பற்றியும் விளக்கிக் கூறுவதுடன் மீன்வரத்து, படகுகளின் வருகை மற்றும் மீன்பிடிக்கச் செல்லுதல், உள்ளிட்ட இதர விவரங்களை எடுத்து அரசிடம் சமர்ப்பிப்பர். அனைத்துத் திட்டங்களும் சரியான முறையில் மக்களைச் சென்றடைவதற்கு ஏதுவாக இருப்பர். இத்திட்டத்தில் உள்ள மீனவ இளைஞர்களுக்கு மாத ஊக்கத்தொகை வழங்குவதுடன், மடிக்கணினி, கைபேசி வசதிகளும் செய்து தரப்படும். இத்திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்று மூர்த்திக்குப்பம், புதுக்குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் உள்ள உவர்நீர் பகுதியை மேம்படுத்தி அதனை அந்த ஊரைச்சார்ந்த ஆரம்ப மீனவ கூட்டுறவு சங்கம்/ஆண்கள் சுய உதவிக்குழுக்கள்/பெண்கள் சுய உதவிக்குழுக்கள் வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**90.** மத்திய அரசின் “பிரதம மந்திரியின் மட்சிய சம்படா யோஜனா” திட்டத்தின் மூலம் 100 விழுக்காடு நிதி உதவியுடன், புதுச்சேரியில் ஒரு மீனவ கிராமமும், காரைக்கால் பகுதியில் ஒரு மீனவ கிராமம் ஆகிய இரண்டு மீனவ கிராமங்களை கிராமம்

ஒன்றுக்கு ₹ 750 இலட்சம் செலவில் “ஒருங்கிணைந்த நவீன கடலோர மீன்பிடி கிராமங்களாக” உருவாக்கப்படும். இதன் மூலம் கடற்கரையோர மீனவர்களுக்கு அவர்களின் நிலையான மீன்பிடி நடைமுறையின் மூலம் பொருளாதார மற்றும் சமூக நன்மைகள் அதிகரிக்கும்.

**91.** மத்திய அரசின் பிரதம மந்திரி மட்சிய சம்படா திட்டத்தின்கீழ் 100 விழுக்காடு நிதி உதவியுடன் ஏனாம் பகுதியில் ஒரு “ஒருங்கிணைந்த Aqua பூங்கா” அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏனாம் பகுதியில் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு இறால் வளர்ப்பிற்காக கொடுக்கப்பட்டுள்ள அரசு நிலத்தில் இம்மாதிரியான “ஒருங்கிணைந்த Aqua பூங்கா” அமைக்கப்படுவதன் மூலம், ஒரே இடத்தில் தரமான மீன்/இறால் விதை உற்பத்தியிலிருந்து, வளர்ப்பு முறைகள் பதப்படுத்துதல் மற்றும் மீன்/இறால் ஊறுகாய்கள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள் செய்து ஏற்றுமதி செய்வது வரை, தேவைப்படும் கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் கொண்டதாக அமையும். இதனால் மீன்/இறால் உற்பத்தி பெருகுவதுடன், ஏனாம் பகுதியில் வசிக்கும் 5,000 மீனவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும். எனவே, PMMSY திட்ட வழிகாட்டுதல்கள்படி விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்து, மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறுவதற்கு விருப்பமுள்ள தனியார் தொழில் முனைவோரிடமிருந்து இது சம்மந்தமான விரிவான திட்ட அறிக்கை கோரப்படும். நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 63.22 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**92.** புதுச்சேரியில் கொரோனா வைரஸ் பரவலை பெருமளவில் தடுத்து, நோயாளிகளைக் குணப்படுத்த தன்னலமற்று அயராது பாடுபடும் மருத்துவ துறையைச் சார்ந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். வைரஸ் பரவலைத் தடுக்கும் முன்னணி இனப்போராளிகளாய் அயராது செயல்பட்டுவரும் காவல் துறையினர், துப்புரவு பணியாளர்கள், வருவாய் துறையைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் எனது அரசு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பு கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் இந்த நாட்டில் மற்ற மாநிலங்களைவிட சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மக்கள் தேவையற்ற அச்ச உணர்வுகள் கொள்ளவேண்டியதில்லை. அதே சமயம், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசு இயந்திரத்துடன் ஒத்துழைத்து நோயைத் தடுக்கும் எளிய மற்றும்

அத்தியாவசிய தற்காப்பு முறைகளான சமூக இடைவெளி, அடிக்கடி கை கழுவுதல் மற்றும் முகக் கவசம் அணிதல் ஆகியவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என புதுச்சேரி மாநிலத்தின் அனைத்துத் தரப்பு மக்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**93.** நமது புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் அனைத்து வகையான நோய்களிலிருந்தும் பாதுகாப்பு வழங்கும் பொருட்டும், சிறந்த சிகிச்சை அளிக்கும் பொருட்டும் தற்போது செயல்படுத்தப்படும் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை மாற்றி அமைத்து புதுச்சேரியிலுள்ள 3,40,000 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை உள்ள அனைத்து நபர்களும் மருத்துவ பயன்பெறும் வகையில் அனைவருக்குமான ஒட்டுமொத்த முழு சுகாதார பாதுகாப்புத் திட்டம் (Universal Health Coverage) இந்த ஆண்டே உடனடியாக துவக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு “இந்திரா காந்தி மருத்துவ காப்பீட்டுத் திட்டம்” என்று பெயர் சூட்டப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் வருமான வரம்பின்றி ஏழைகள் மற்றும் நலிவடைந்த குடும்பங்கள் உட்பட புதுச்சேரியில் உள்ள அனைத்து குடும்பங்களும் இலவச சிகிச்சை பெறுவதற்காக ₹ 16 கோடி கூடுதலாக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**94.** ஜிப்மர் மற்றும் இந்திரா காந்தி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையங்களில் கொரோனா பரிசோதனைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனிவரும் நாட்களில் கொரோனா மாதிரி பரிசோதனைகள் அதிகரிக்கப்படும். மேலும், கட்டுப்பாட்டு மற்றும் சிவப்பு மண்டலத்தில் வசிக்கும் கொரோனா நோய்த் தொற்று அறிகுறி உள்ளவர்களை விரைவில் பரிசோதிக்க நடமாடும் அவசர ஊர்திகள் மூலம் கொரோனா தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

**95.** முகக்கவசம் மற்றும் தேவையான உபகரணங்களை வாங்குவதற்காக சுகாதாரத் துறைக்கு ஏற்கனவே ₹ 9.50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்காக, பிரத்யேகமாக, 2020-21 வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது, அரசு மருந்தகத்தில் தனிநபர் பாதுகாப்பு கவச உடை (PPE), N-95 முகக்கவசம் (N-95 mask) ஆகியன தேவைக்கு மேலாக இருப்பில் உள்ளன.

**96.** புதுச்சேரி மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் குறிப்பாக கொரோனா பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் நானும் எனது சக அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும்

நேரில் சென்று பொதுமக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு காய்கறிகள், இலவச அரிசி, மளிகைப் பொருட்கள் போன்றவைகள் வழங்கியுள்ளனர். மேலும், கொரோனா பாதித்த தடை செய்யப்பட்ட பகுதிகளில், முதலமைச்சரின் கொரோனா நிவாரண நிதி மூலமாக அந்தப் பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு ₹ 500 அளவிலான அரிசியும், மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிகளும் வருவாய்த் துறை மூலம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

**97.** முதலமைச்சர் நிவாரண நிதியின் மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அவர்களது சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு தனியாக பேருந்து வாகனங்கள், ரயில்கள் போன்றவைகள் இயக்கப்பட்டு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இதற்காக ₹ 20 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. பொது மக்களை கொரோனா நோயிலிருந்து பாதுகாக்க சுகாதாரத் துறை மூலம் குறிப்பாக ஆயூஷ் பிரிவின் மூலம் புதுச்சேரியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் கபசுர குடிநீர், நிலவேம்பு கஷாயம், ஆர்சனிக் ஆல்பம் போன்ற எதிர்ப்பு சக்திகளை உருவாக்கும் மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**98.** கொரோனா நோய் ஆரம்பித்த பிறகு, அதாவது இந்த வருடம் மார்ச் மாதத்திற்குப் பிறகு பொதுமக்களின் நலன் காக்கும் பொருட்டு கடந்த மூன்று மாதங்களில் அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக 71 வென்டிலேட்டர்கள் (Ventilators) பெறப்பட்டுள்ளது.

தற்சமயம் 131 வென்டிலேட்டர்கள் உள்ளன. கூடுதலாக 5 டெபிரிலேட்டர்கள் (Defibrillator) வாங்கப்பட்டு தற்சமயம் 13 டெபிரிலேட்டர்கள் உள்ளன. கூடுதலாக 6 எ.பி.ஜி. இயந்திரங்கள் (ABG Machine) வாங்கப்பட்டு தற்போது 10 எ.பி.ஜி. இயந்திரங்கள் உள்ளன. கூடுதலாக 15 இ.சி.ஜி. இயந்திரங்கள் வாங்கப்பட்டு தற்சமயம் 21 இ.சி.ஜி. இயந்திரங்கள் உள்ளன. கூடுதலாக 57 மல்டிமீட்டர் மானிட்டர், (Multi Parameter Monitor) வாங்கப்பட்டு தற்சமயம் 103 மல்டிமீட்டர் மானிட்டர்களும், கூடுதலாக 60 தெர்மல் ஸ்கேனர்கள் (Thermal Scanner) வாங்கப்பட்டு தற்சமயம் 64 தெர்மல் ஸ்கேனர்களும், கூடுதலாக 6 அனஸ்தீசியா இயந்திரங்கள் (Anasthesia Machine) வாங்கப்பட்டு தற்சமயம் 17 அனஸ்தீசியா இயந்திரங்களும் உள்ளன. கூடுதலாக 30 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகள் (ICU Cots with Mattress) வாங்கப்பட்டு தற்சமயம் 41 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகளும், கூடுதலாக 160 இதர பல்வேறு வகையான படுக்கைகள் (Semy fowler Cots with Mattress) வாங்கப்பட்டு தற்சமயம் 290 இதர பல்வேறு வகையான படுக்கைகள் அரசு மருத்துவமனைகளில் உள்ளன. மேலும், 7 இலட்சம் மூன்று மடிப்பு முகக்கவசங்களும், 1 இலட்சம் முழு உடம்பு கவசங்களும், 20,000 கை உறைகளும், 4,000 N-95 முகக் கவசங்களும், 1 இலட்சம் சாதாரண முகக் கவசங்களும், 1,000 ஆர்.டி.பிசி.ஆர் கருவிகளும், 5,000 பி.டி.என். கருவிகளும் மக்கள் நலனுக்காக வாங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**99.** வரும் காலங்களில் கொரோனா நோய்த் தொற்றினை எதிர்கொள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மொத்தம் 4,500 படுக்கை வசதிகள் தயார் நிலையில் உள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**100.** இவ்வாட்சிப்பரப்பில் சுகாதார வசதிகளை முற்றிலும் சீரமைத்து தற்பொழுதுள்ள வசதிகளை மேம்படுத்தவும், போதுமான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து பொது மக்களுக்கு அதிக அளவில் சுகாதார வசதிகளைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரியிலுள்ள ஏழை மக்களுக்கு அரசு சுகாதார நிலையங்களின்மேல் நம்பிக்கையை உருவாக்குவதே இந்த அரசின் தலையாய குறிக்கோளாகும். இதன் அடிப்படையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் அரசு பொது மருத்துவமனைகள் வரை உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**101.** அனைத்து குடியிருப்புப் பகுதிகளிலும். ஆதுரச் சாலை (Athura Salai) என்னும் மக்கள் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் மக்கள் வசிக்கும் கிராமங்களில் மருத்துவச் சேவைகளை எளிதில் பெற முடியும்.

**102.** அதிகரித்து வரும் உடல் நலம் சார்ந்த உபாதைகளையும், நோய் தாக்கும் கிருமிகளையும் கருத்தில் கொண்டு, மருத்துவ ஆராய்ச்சிகளைச் சிறப்பாக முன்னெடுக்க

அரசு மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி போன்ற மருத்துவம் சார்ந்த கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி உலகத் தரம் வாய்ந்த புதிய மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம் புதுச்சேரியில் வரும் 2021-22 ஆண்டு முதல் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்

**103.** மேலும், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், அனைத்து மக்களுக்கும் தாங்கள் வசிக்கும் பகுதிகளிலேயே, ஒருங்கிணைந்த அனைத்து வசதிகளுடன் கூடிய முழுமையான ஆரம்ப சுகாதார வசதிகள் எளிதில் பெறும் வண்ணம் சுகாதார நல மையங்கள் (Wellness Centre) செயல்பட்டு வருகின்றன. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து 40 ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 81 துணை சுகாதார மையங்கள், உள்ளிருப்பு மருத்துவர், பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள் (ANMs) ஆகியோர் அடங்கிய சுகாதார நல மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இம் மையங்களின் பராமரிப்புக்காக, மத்திய அரசு ₹ 10.08 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், கிராமப்புற நோயாளிகள் முழுமையான உடற்பரிசோதனை செய்து கொள்ளும் வண்ணம் இந்த சுகாதார நல மையங்களில் வசதிகள் உள்ளன. புதுச்சேரி அரசு பொது மருத்துவமனைக்கும், கிராம சுகாதார நல மையங்களுக்கும் இடையில் தொலை மருத்துவச் சேவை

(Telemedicine facility) ஏற்படுத்தப்படும். இதனால் கிராமப்புறத்தில் வசிக்கும் மக்கள் மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனைகளை இம்மையங்களில் இருந்தே பெறமுடியும். பள்ளூர் பகுதியில் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

**104.** இந்த நிதி ஆண்டில் ராஜீவ் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் வென்டிலேட்டர் வசதி கொண்ட ஒரு அவசர ஊர்தி வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உலகத் தரத்திற்கு நிகராக நம் மருத்துவ சேவையை வலிமைப்படுத்தும் வண்ணம் ₹ 65 இலட்சம் செலவில் High End Color Doppler Scanner, ₹ 40 இலட்சம் செலவில் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான 16 Slice CT Scanner Microscope போன்ற உபகரணங்கள் வாங்கப்படும். தேசிய நலவாழ்வு இயக்கத்தின்கீழ், காரைக்கால் அரசு பொது மருத்துவமனையின் மகப்பேறு வளாகத்தில் அடிப்படைக் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும். உலகளாவிய தடுப்பூசி திட்டத்தின்கீழ் தடுப்பூசியால் அகற்றப்படும் நோய்களுக்கான கண்காணிப்பு முறையை வலிமைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கோரிமேட்டில் உள்ள ESI மருத்துவமனையில் வெளிப்புற சிகிச்சை வளாகத்தில் (OPD) முதல் அடுக்கு இந்த ஆண்டில் கட்டப்படும். நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 709.47 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**105.** எனது அரசின் சேவைகளை பொதுமக்களுக்கு அளிப்பதற்கு தகவல் தொழில்நுட்பத்தை அரசு அலுவலகங்களில் முழுமையாக செயல்படுத்த உறுதி பூண்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் வசிக்கும் பகுதியின் அருகாமையிலேயே அரசின் சேவைகளை எளிதில் பெறுவதற்கு ஏதுவாக பொது சேவை மையங்களின் (CSC) எண்ணிக்கையை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதார் எண் மூலம் வங்கிப் பரிவர்த்தனைகள் செய்வதற்கு ஏற்ப, "Digi Pay" என்ற வசதியை பொது சேவை மையங்கள் மூலம் பெறுவதற்கு விரைவில் ஏற்படுத்தப்படும்.

**தொழிலாளர் நலம்**

**106.** படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் 12,000 இளைஞர்களுக்கு ஆறு மத்திய அரசின் திட்டங்களின்கீழ் (PMKVY) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வரும் ஐந்து ஆண்டுகளில் வழங்கப்படவுள்ளது. அவை, கைவினைப்பொருள் பயிற்சி, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பயிற்சி, மீன் பிடிப்பு மற்றும் பாதுகாப்புப் பயிற்சி, படகு பழுது பார்த்தல், கட்டட கட்டுமானப் பயிற்சி, ஆழ்கடல் நீச்சல் பயிற்சி, மீன் வளர்ப்பு, கடல்வாழ் உணவு

பதப்படுத்துவதற்காக பயிற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இது மட்டுமல்லாமல் திறன் வாய்ந்த மனித ஆற்றல் அதிகம் தேவைப்படும் இடங்களைக் கண்டறிந்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் 18,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். ஆக மொத்தம் 2025ஆம் ஆண்டு இறுதியில் 30,000 இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்றிருப்பார்கள். M.Phil. மற்றும் Ph.D. படித்துள்ள ஆதி திராவிட இளைஞர்களுக்கு தேசியத் தகுதி தேர்வில் (NET) தேர்ச்சிபெற பயிற்சி அளிக்கப்படும்.

**107.** மேட்டுப்பாளையத்தில் மாதிரி தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க மத்திய அரசு ₹ 1.75 கோடி நிதி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் (PMSYMY) திட்டத்தின்கீழ் புதுச்சேரி கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்த 18 முதல் 40 வயது நிரம்பிய உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமாக மாதத்திற்கு ₹ 3,000 அவர்கள் 60 வயது அடைந்தவுடன் அளிக்கப்படும். “ஆயூஷ்மான் பாரத்” (PMJAY) திட்டத்தின்கீழ் குடும்பத்திற்கு தலா ₹ 5,00,000 வரை தற்போது வழங்கப்படும் காப்பீடு மூலம் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிறப்பு உயர்தர சிகிச்சைகள் பெறுவதற்கு வழிவகை கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**108.** கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, தலைக்கவசம், பாதுகாப்பு காலணி, கையுறை ஆகியவற்றிற்காக நிதி உதவி அளிக்கப்படும். கட்டுமானத் தொழிலாளர்களின் மனநலம் மற்றும் உடல்நலம் குன்றிய குழந்தைகளுக்கு மாதந்தோறும் குழந்தை ஒன்றுக்கு தலா ₹ 1,200 வீதம் இந்த ஆண்டிலிருந்து வழங்கப்படும். மேலும், சிறுநீரக பாதிப்பு, இருதய நோய், கல்லீரல் பாதிப்பு, சிலிக்காசிஸ் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பதிவுபெற்றக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நோய்க்குத் தகுந்தாற்போல் ₹ 75,000 வரை நிதி உதவி வழங்கப்படும்.

**109.** பதிவு செய்யப்படாத தொழிலாளர்கள் மற்றும் வெளிமாநில தொழிலாளர்களின் நலனிலும் எனது அரசு அக்கறை கொண்டுள்ளது. வேலை செய்யும் இடத்தில் எதிர்பாராத நிகழ்வுகளால் மரணம் அல்லது ஊனமுற்றால் அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். அதன்படி, வேலை செய்யும் இடத்தில் மரணம் நிகழ்ந்தால் ₹ 1,00,000, 50 விழுக்காட்டிற்குமேல் நிரந்தரமாக ஊனமுற்றால் ₹ 50,000, 25 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காட்டிற்குள் ஊனம் இருந்தால் ₹ 10,000 என்ற அளவில் நிவாரண நிதி வழங்கப்படும்.

**தொழில் துறை**

**110.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பிற்கான புதியதாகத் தொழில் துவங்கு (Start up) கொள்கையினை கடந்த ஆண்டு 2019இல் வெளியிடப்பட்டது என்பதை இந்த மாண்புமிகு அவையின் உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இந்த கொள்கையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

(i) இக்கொள்கை ஒரு உகந்த கட்டமைப்பை உருவாக்குவதையும், ஆர்வமுள்ளவர்களுக்கு குறிப்பிட்ட கால அளவுக்குள் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதையும், எளிமையான, ஆதரவான மற்றும் சுய ஒழுங்குமுறை முறையை செயல்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

(ii) கண்டுபிடிப்பு நிலை முதல் செயல் வடிவம் பெறும்வரை அல்லது பொருளாதார ரீதியாக சாத்தியமான மற்றும் சந்தைப்படுத்தப்படும் வரை தொழில் முனைவோர் மற்றும் கண்டுபிடிப்பாளருக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கும்.

(iii) கல்வி நிறுவனங்களால் இன்குபேட்டர் வசதிகள் நிறுவப்பட்டு அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களுக்கு ₹ 3 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

(iv) ஒவ்வொரு கண்டுபிடிப்பில் ஈடுபடும் தொழில் ஆர்வலருக்கும் ஒவ்வொரு மாதம் ₹ 10,000 வரை அதிகபட்சமாக ஐந்து நபர்களுக்கு அத்திட்டம் முடியும் வரை வழங்கப்படும். அதேபோல் பெண்கள், ஆதிதிராவிடர், மாற்றுத்திறனாளிக்கு, மூன்றாம் பாலினத்தவருக்கு அதிகபட்சமாக ₹ 15,000 வழங்கப்படும்.

(v) இந்தத் திட்டத்துக்காக தேவையான தொழில்கூடம், இணையதள வசதி, மொபைல் செயலி, கிளவுட் சேவைகள், ஆய்வக வசதிகள், உட்கட்டமைப்பு ஆகியவை வழங்குவதற்காக ₹ 10 கோடி ஒதுக்கப்படும்.

**111.** புதுச்சேரி அரசு தொழில் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு காலவரையறைக்குள் அனுமதிகளை வழங்குவதற்கும் ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு முதலீட்டு சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் ஒரு புதிய சட்டத்தை இயற்ற முன்வந்துள்ளது. இந்தச் சட்டம் 2020 புதுச்சேரி எளிய முறையில் தொழில் செய்தல் / சேவை வழங்கல் சட்டம் என்று அழைக்கப்படும். இந்தச் சட்டம் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் புதிய முதலீடுகள் பெறுவதற்கு வழிவகை செய்யும்.

**112.** தொழில் செய்வதற்கு எளிமையான சூழ்நிலையை உருவாக்கி புதுச்சேரியில் தொழில் வளத்தைப் பெருக்கும் நோக்கில் தொழில் மற்றும் வணிகம் தொடர்பான உரிமங்களை புதுப்பிப்பதில் தொடர்பாக எளிய நடைமுறைகளை புகுத்தும் பொருட்டு சுயமாக உரிமம் புதுப்பிக்கும் திட்டம் ஒன்று புதிதாக உருவாக்கப்படும். இதன்படி கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், ஒப்பந்த ஊழியர் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள் சட்டம், மாநிலங்களுக்கிடையேயான புலம் பெயர்ந்த தொழிலாளர் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்ற உரிமங்கள், மருந்துகள் தயாரிப்பு, விற்பனை, சேமிப்பு உரிமம், உள்ளாட்சி அமைப்புகளில் வழங்கப்படும் வணிக உரிமங்கள் ஆகியவைகள் வருடா வருடம் தாமாகவே புதுப்பிக்கப்படும். இதற்காக எவரும் எந்த அலுவலகத்திற்கும் செல்லத் தேவை இருக்காது. புதுப்பிக்கத் தேவையான உரிமக் கட்டணத்தை சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் நேரிலோ அல்லது வங்கி வரைவோலையாக சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு பதிவு அஞ்சலில் அனுப்பியோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ சுயமாகவே புதுப்பித்துக்கொள்ளலாம். இதன்மூலம் உரிமங்களைப் புதுப்பிக்கத் தேவையான ஆய்வுகள் தவிர்க்கப்படுகிறது. அதாவது, சமமான ஊதியச் சட்டம், குறைந்தபட்ச ஊதியச் சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், போனஸ் சட்டம், கூலித்தொகை சட்டம், கருணைத் தொகை சட்டம், ஒப்பந்த ஊழியர் சட்டம், தொழிற்சாலை சட்டம்,

கொதிகலன்கள் சட்டம், மாசுக் கட்டுப்பாடு தடுப்பு தண்ணீர் சட்டம், காற்று மாசுபாடு தடுப்புச் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் உரிமங்களை புதுப்பிக்க யாரும் ஆய்வுக்குச் செல்லவேண்டியதில்லை என்று ஆணை பிறப்பிக்கப்படும். இதன்மூலம் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களின் சுமைகளும் தேவையில்லாத அலைச்சலும் நீக்கப்படும்.

**113.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, நானும் எங்களுடைய சக அமைச்சர்களும் வங்கி அதிகாரிகளுடன் பலமுறை கூட்டம் நடத்தி வணிகம் மற்றும் சிறு குறு தொழில்களுக்கு கடன் உதவி வழங்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வணிகங்கள் மற்றும் சிறு குறு தொழில்களுக்காக அவசரகால உத்தரவாத கடனுதவி திட்டம் மற்றும் பேரிடர் காலத்தில் சிறு குறு தொழில்களை மேம்படுத்துவதற்கு சொத்தின் மீது கடனுதவி பெற்று துன்பப்படுபவர்களுக்கான துணைக்கடன் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் எனது அரசு வங்கியாளர்களுடன் ஒருங்கிணைந்து தகுதியுள்ள 10,942 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் முதல்கட்டமாக 8,116 தொழில் நிறுவனங்களுக்கு ₹ 157 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் ₹ 101 கோடி நிதி 3,541 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு மாத

கால அவகாசத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த கடன் உதவி ஒரு சாதனையாகும். நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுடன் ஒப்பிட்டால் பயனாளிகளுக்கு கடனுதவி அளித்ததில் புதுச்சேரி மாநிலம் முதன்மையாக திகழ்ந்து வருகிறது.

**114.** இதுபோன்று சொத்தின் மீது கடன் உதவி பெற்று அல்லலுறுபவர்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் துணைக்கடன் வழங்கும் திட்டத்தினையும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. எளிய முறையில் தொழில் செய்வதற்காக தொழில் துறை இயக்குநரை ஒருங்கிணைப்பு அதிகாரியாக (Nodal Officer) நியமிக்கப்பட்டு தொழில் துவங்க ஊக்குவிக்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 50.78 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**115.** இந்த நிதி ஆண்டில் எனது அரசு பல்வேறு திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இதற்காக இந்த ஆண்டில் ₹ 16 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

**116.** அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் தரமான மற்றும் தேவையான அளவிற்கு சுத்தமான குடிநீர், குழாய் இணைப்பு மூலம் 2024ஆம் ஆண்டுக்குள் வழங்கும் விதமாக மத்திய

அரசு “ஜல்ஜீவன் மிஷன்” என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 2020-21 முதல் 2023-24 வரை மூன்று ஆண்டுகள் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் அமுல்படுத்தப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் மொத்தமுள்ள 10 கொம்யூன் பஞ்சாயத்துக்களில் 108 கிராம பஞ்சாயத்துக்கள் உள்ளன. இந்த 10 கொம்யூன்களிலும், 1,14,908 வீடுகள் உள்ளன. 1-4-2020 வரையில், 99,993 வீடுகளுக்குத் தண்ணீர் குழாய் இணைப்புகள் அதாவது கிட்டத்தட்ட 87 விழுக்காடு வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. 100 விழுக்காடு இலக்கை அடையும் விதமாக, 2020-21ஆம் ஆண்டில் மீதமுள்ள வீடுகளுக்கு குழாய் இணைப்புகள் வழங்கப்படும்.

**117.** காரைக்கால் நிரவி-திருமலைராயன்பட்டினம் தொகுதியின் விழுதியூர் பகுதியில் சமுதாய நலக்கூடம் மக்கள் பயன்பாட்டிற்காக இந்த நிதி ஆண்டில் கட்டிமுடிக்கப்படும்.

**118.** அமிழ்தம் என்ற நடமாடும் உணவகம் மூலம் மலிவு விலையில் உணவு வழங்கும் திட்டம் உள்ளாட்சி அமைப்பின் மூலம் முதல் கட்டமாக புதுச்சேரி, உழவர்கரை மற்றும் காரைக்கால் நகராட்சிகளில் இந்த ஆண்டு வழங்கப்படும்.

**119.** புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து தெரு விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் SMART CITY மூலமாகவும் காரைக்கால், ஏனாம் நகராட்சி மற்றும் மண்ணாடிப்பட்டு, நெட்டப்பாக்கம், கோட்டுச்சேரி, நெடுங்காடு, திருநள்ளார், நிரவி, திருபட்டினம் ஆகிய கொம்யூன் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் மாநில எரிசக்தி சிக்கன நிதி (State Energy Conservation Fund) மூலமாக அனைத்து தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றப்பட உள்ளன. மேலும், வில்லியனூர், அரியாங்குப்பம், பாகூர் கொம்யூன் பஞ்சாயத்து மற்றும் மாஹே நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொந்த நிதியின் மூலம் அனைத்து தெரு விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**புதுச்சேரி பொலிவுறு நகரத் திட்டம் (SMART CITY)**

**120.** நாட்டிலுள்ள 100 நகரங்களை பொலிவுறு நகரமாக மாற்றுவதற்காக மத்திய வீடு மற்றும் நகர்ப்புற அமைச்சகம் 'பொலிவுறு நகரம்' திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. எனது அரசின் இடைவிடாத முயற்சியாலும், அதிகாரிகளின் அயராத உழைப்பினாலும், 'பொலிவுறு நகரத்திட்டத்தின்'கீழ் புதுச்சேரி மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக கடந்த 2017ஆம் ஆண்டு புதுச்சேரி

பொலிவுறு நகர வளர்ச்சிக் கழகம் ஏற்கனவே துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மத்திய அரசின் கொடை | .. | ₹ 500 | கோடி |
| 2. | மாநில அரசின் பங்கு | .. | ₹ 500 | கோடி |
| 3. | இதர மத்திய அரசு திட்டங்களிலிருந்து பெறப்படும் நிதி | .. | ₹ 118 | கோடி |
| 4. | AFD கடன் மூலம் பெறும் நிதி | .. | ₹ 200 | கோடி |
| 5. | NBCC திட்டங்களை அமலாக்கம் செய்வதன் மூலமாக பெறும் நிதி | .. | ₹ 210 | கோடி |
| 6. | பொதுத்துறை-தனியார் நிறுவனங்களின் கூட்டு | .. | ₹ 300 | கோடி |
| | மொத்தம் | .. | ₹ 1,828 | கோடி |

**121.** சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பொலிவுறு நகரத் திட்டத்திற்கான தரவுகளைச் சேகரித்து, சூழ்நிலை பகுப்பாய்வு செய்தல், நிறைவேற்றல் அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை ஆகியன தயார் செய்யப்பட்டுள்ளன. பொலிவுறு நகரத் திட்டத்தின் தற்போதைய நிதி நிலைமை பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | பொலிவுறு நகரத்திட்ட அறிக்கை தயாரிக்க | .. | ₹ 2 கோடி |
| 2. | மத்திய அரசு வழங்கிய முதல்கட்ட பங்கு | .. | ₹ 98 கோடி |
| 3. | மத்திய அரசு வழங்கிய இரண்டாம் கட்டபங்கு | .. | ₹ 3 கோடி |
| 4. | புதுச்சேரி அரசின் பங்கு | .. | ₹ 60 கோடி |
| | மொத்தம் | .. | ₹ 163 கோடி |

**122.** வெள்ளநீர் பிரிவுக்கான திட்டம் ₹ 95.53 கோடி பொதுப்பணித்துறை மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 11.09 கிலோ மீட்டர் வெள்ளநீர் வடிகால் வாய்க்கால்கள் மேம்படுத்தப்பட்டு, 8 சாலைகளின் செல்லும் வாய்க்கால்கள் கட்டுமானம் அல்லது மறுகட்டுமானம் செய்யப்படும். இதன் உத்தேச மதிப்பீடு ₹ 78 கோடி ஆகும். இரயில் பாதையின் கீழ் செல்லும் பாலம் அமைப்பதற்காக ₹ 2.79 கோடி மதிப்பிற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ₹ 14 கோடி மதிப்புள்ள பணிகளான உப்பார் வாய்க்கால், சித்தன்குடி இணைப்பு வாய்க்கால், சிங்கம் பூங்கா வடிகால், பாலாஜி நகர் இணைப்பு வாய்க்கால், கிருஷ்ணா நகர் இணைப்பு வாய்க்கால் ஆகியவற்றுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

குண்டு சாலையில் மேட்டு வாய்க்கால், குண்டுசாலை எல்லைப்பிள்ளைச் சாவடி அண்ணா நகர், வீட்டுவசதி வாரியம் எதிர்ப்புறம் ஆகிய இடங்களில் சாலையின்கீழ் செல்லும் பாலங்கள் மற்றும் உழந்தை பகுதியில் PCC வடிகால் அமைப்பதற்கான ₹ 61.21 கோடிக்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

**123.** பாப்பம்மாள் கோயில் வடிகால், சின்னவாய்க்கால் வடிகால், குண்டுசாலை வடிகால், திருவள்ளுவர் நகர் வடிகால், சோலைதாண்டவகுப்பம் வடக்கு U வடிகால், வாணரப்பேட்டை வடிகால் மற்றும் முத்தியால்பேட்டை, நெல்லித்தோப்பு (பகுதி) வில்லியனூர் (பகுதி) ஆகிய இடங்களில் உள்ள சிறிய U வடிகால் முதலிய 12.29 கிலோ மீட்டர் நீளமுள்ள வெள்ளநீர் வடிகால்களை மேம்படுத்த ₹ 17.93 கோடிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. புதுச்சேரி நகராட்சி மற்றும் புதுச்சேரி பொலிவுறு நகர வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் மூலமாக செயல்படுத்தப்பட உள்ள இந்தப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

**124.** புதுச்சேரி பொலிவுறு நகரத் திட்டத்தில், சுகாதாரப் பிரிவின்கீழ் ₹ 2.75 கோடி மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தின்படி உப்பளம், ராஜ்பவன்,

முத்தியால்பேட்டை மற்றும் உருளையன்பேட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மொத்தம் 44 கழிவறைகள் ₹ 88 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளன. இதில் 10 இடங்களில் நவீன (Modular) கழிவறைகள் கட்டுவதற்கு பணி ஆணையம் வழங்கப்பட்டுள்ளன. 5 இடங்களில் நடமாடும் கழிவறைகள் கட்டுவதற்கு ₹ 41 இலட்சத்துக்கான பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது. ₹ 69 இலட்சம் மதிப்பீட்டில் 24 கழிவறைகள் தரம் உயர்த்த ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது. ₹ 77 இலட்சம் செலவில் 5 கழிவறைகள் மறு சீரமைப்பு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

**125.** புதுச்சேரி பொலிவுறு நகர வளர்ச்சிக் கழகம் மற்றும் புதுச்சேரி குடிசை மாற்று வாரியம் ஆகியவை இணைந்து உருளையன்பேட்டை மற்றும் ராஜ்பவன் தொகுதிக்குப்பட்ட சின்னையாபுரம், திடீர் நகர், குமரகுருபள்ளம் ஆகிய பகுதிகளில் புதிய வீடு கட்டும் திட்டங்களை செயல்படுத்த உள்ளது. இதில் முதல் கட்டமாக சின்னையாபுரம் பகுதியில் ₹ 17.16 கோடி செலவில் 230 குடியிருப்பு வீடுகளை 6 தொகுதிகளாக கட்டி முடிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**126.** புதுச்சேரி நகரத்தின் பழம்பெரும் அடையாளமான அண்ணா திடல் ₹ 12.19 கோடி செலவில் சிறு விளையாட்டரங்கமாக மாற்றப்படும். இந்த விளையாட்டரங்கத்தின் பகுதிகளாக பூப்பந்தாட்ட மைதானம், கைப்பந்தாட்ட மைதானம், பல்நோக்கு திடல், திறந்தவெளி உடற்பயிற்ச்சிக் கூடம், குழந்தைகள் விளையாடும் இடம், பார்வையாளர்கள் கூடம், தங்கும் அறைகள் ஆகியவற்றுடன் சீரமைக்கப்பட்ட கடைகளும் மற்றும் வாகன நிறுத்துமிடமும் கொண்டதாக அமையும். இதற்கான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும். அதேபோல புதுச்சேரி நகரத்தின் பெருமையை பறைசாற்றும் வகையில் பிரெஞ்சு கலாச்சாரத்தின் பாரம்பரிய கட்டடக்கலையின் வடிவமாகத் திகழும் கலவைக் கல்லூரி ₹ 4.39 கோடியிலும், வ.உ.சி. மேல்நிலை பள்ளி ₹ 5.85 கோடியிலும், பெண்ஷனேட் பள்ளி ₹ 5.51 கோடி செலவிலும் கட்டடங்களின் பழமை மாறாமல் புனரமைக்கப்படும்.

**127.** எழில்மிகு புதுச்சேரி கடற்கரையின் தெற்குப் பகுதி அதாவது பழைய துறைமுகத்திற்கும் புதிய கலங்கரை விளக்கத்திற்கும் இடைப்பட்ட பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டு ₹ 4.06 கோடி செலவில் அழகுபடுத்தப்படும். இதற்கான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், கடற்கரையின் வடக்குப் பகுதி, பழைய சாராய ஆலை சாலையிலிருந்து சோலை நகர் பகுதிவரை ₹ 3.23 கோடி

செலவில் அழகுபடுத்தப்படும். நீராதாரத்தை மேம்படுத்தும் வகையில் வில்லியனூர் தொகுதியில் உள்ள அம்மன் குளம், உப்பளம் தொகுதி தமிழ்த்தாய் நகரில் உள்ள புறா குளம், மற்றும் முதலியார்பேட்டை தொகுதியில் உள்ள மரப்பாலம் குளம், ஆகியவை ₹ 1.29 கோடி செலவில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு குளங்களுக்குப் புத்துயிர் அளிக்கப்படும். இதற்கான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். ராஜ்பவன் தொகுதியில் உள்ள பசுமைமிகு பாரதி பூங்கா மற்றும் தலைமைச் செயலகம் எதிரில் உள்ள பாறை நீரூற்று ஆகியவை ₹ 42 இலட்சங்கள் செலவில் மேம்படுத்தப்படும்.

**128.** மாசற்ற போக்குவரத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, பொதுமக்கள் மிதிவண்டி பகிர்வுத் திட்டம் 43 இடங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் ராஜ்பவன், முத்தியால்பேட்டை, தட்டாஞ்சாவடி, இந்திரா நகர், உப்பளம், உழவர்கரை, உருளையன்பேட்டை, நெல்லித்தோப்பு, அரியாங்குப்பம் மற்றும் காமராஜ் நகர் தொகுதிகளுக்கு உட்பட்ட 19 இடங்களில் செயல்படுத்தப்படும்.

**129.** இவைதவிர வாகன நிறுத்துமிடம் பற்றாக்குறையைப் போக்குவதற்காக பழைய சிறை வளாகம், பழைய துறைமுகம், ரிச்மண்ட் வீதி (கடற்கரைக்கு அருகில்) நேரு வீதி-ஆம்பூர் சாலை சந்திப்பு, ஆம்பூர் சாலை-இரங்கபிள்ளை வீதி சந்திப்பு, இரயில்

நிலையம், தாவரவியல் பூங்கா எதிரில் உள்ள காலியிடம், ஏ.எப்.டி. மைதானம், அவ்வைத் திடல் மற்றும் மணிமேகலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் 10 இடங்களில் ₹ 15 கோடி செலவில் பல அடுக்கு கார் நிறுத்துமிடம் அமைக்க பூர்வாங்க திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சிவாஜி சிலை முதல் மரப்பாலம் சந்திப்பு வரையிலான சுமார் 6 கிலோ மீட்டர் நீளச் சாலையில் இயற்கை வனப்புத் திட்டம் ₹ 1.68 கோடி செலவில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பொலிவுறு நகரத்திற்குட்பட்ட பகுதிகளில் கண்ணாடி இழை கேபிள் திட்டத்தினை பாண்டி கண்ணாடி இழைத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**130.** “ஸ்மார்ட் சிட்டி” திட்டத்தின்கீழ் மின் கட்டுமானப் பணிகள் ₹ 30 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், புதுச்சேரி பெரிய வாய்க்காலை ஒட்டி 11 இடங்களில் 25 குறு மின் நிலையங்கள் நிறுவப்படும். வாணரப்பேட்டை, நேதாஜி நகர் மற்றும் ராஜ்நிவாஸ் அருகிலுள்ள உயர்மின் அழுத்த வழித்தடங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மாற்றியமைக்கப் படவுள்ளன. அதனுடன் புதிய இரண்டு உயர்மின் அழுத்த மின்னூட்டி வழித்தடங்கள் மரப்பாலம் துணைமின் நிலையத்தில் அமைக்கப்படவுள்ளன. மேலும், புதுச்சேரி நகரப்பகுதியில் உள்ள சின்னக்கால்வாய் பகுதியில் உள்ள மேல்நிலை மின் கட்டமைப்பை அடித்தள மின்கட்டமைப்பாக மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**131.** பொலிவுறு நகரம் (Smart City) திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் பின்வருமாறு :

(i) பெரிய கால்வாய் (Ground Canal) வழித்தடத்தில் உள்ள 11K.V. எண்ணெய் வகை மின்மாற்றிகள் மற்றும் மின்சாதன பெட்டிகளை புதிய தொழில்நுட்ப மின் உபகரணங்களாக மாற்றியமைப்பதற்கும் மற்றும் அதனைச் சார்ந்த புதைவட மின்பாதைகள் அமைப்பதற்கும் ₹ 11.795 கோடி செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்துவதன் மூலம் இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் மேல்நிலை மின்னூட்டிகளின் மின்தடை முற்றிலுமாக தவிர்க்கப்படும். இதனால் நிலையான மின்சாரம் மின் நுகர்வோருக்கு வழங்கப்படும்.

(ii) வம்பாகீரப்பாளையம், வாணரப்பேட்டை, டாக்டர் அம்பேத்கர் சாலை, கடலூர் சாலையின் ஒரு பகுதி மற்றும் தேங்காய்த்திட்டு பகுதிகளில் 11 K.V. புதைமின் வடங்கள் அமைக்கப்படும். மேலும், சிறிய கால்வாய் தெருவின் பகுதியில் உள்ள 22 K.V. மேல்நிலை மின்னூட்டிகள் 11 K.V. புதை மின்வட மின்னூட்டிகளாக மாற்றுவதற்கு ₹ 9.60 கோடி செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) வம்பாகீரப்பாளையம், வாணரப்பேட்டை, டாக்டர் அம்பேத்கர் சாலை, கடலூர் சாலையின் ஒரு பகுதி மற்றும் தேங்காய்த்திட்டு பகுதிகளில் 11 K.V. மின் உபகரணங்கள், மின்மாற்றிகள் குறைந்த அழுத்த மின்சாதன பெட்டிகளும் அதனை சார்ந்த 22 K.V. மேல்நிலை மின்னூட்டிகளை 11 K.V. புதைவட மின்னூட்டிகளாக மாற்றியமைப்பதற்கு ₹ 10.10 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iv) மரப்பாலத்தில் தற்பொழுதுள்ள காற்று காப்பு துணைமின்நிலையம் சுமார் 25 வருடங்களுக்கு முன்பாகவே அமைக்கப்பட்டது. இத்துணைமின் நிலையத்தின் செயல்திறன் முழுவதுமாக நிறைவடைந்ததன் காரணமாக ஒரு புதிய 110/22K.V. வாயு காப்பு துணைமின் நிலையம் அமைப்பதற்கு ₹ 26.25 கோடி செலவில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது ஒரு நவீன தொழில்நுட்பமானது. இத்துணைமின் நிலையம் அமைப்பதன் பயனாக நிலையான மற்றும் மேம்பட்ட மின்சாரம் மின் நுகர்வோருக்கு வழங்கப்படும்.

(v) தற்பொழுதுள்ள தெரு மின் விளக்குகளை LED தெரு மின் விளக்குகளாக மாற்றுவதற்கு நவீன கணினிமயமாக்கப்பட்ட மற்றும் நிர்வகிக்கும் முறை

(Computerised Command and Management System), இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் நிறைவேற்றப்படும். இதுதவிர பகுதி சார்ந்த மேம்பாட்டு திட்டத்தில் (Area Based Development) உள்ள புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சி பகுதிகளும் இதில் அடங்கும். இத்திட்டம் 29.40 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ளது. இதன் மூலம் கணிசமான முறையில் மின்சாரம் சேமிப்பதோடு நிலையான தடையில்லா மின்சாரம் தெருக்களுக்கு வழங்கப்படும். இந்த கணினி முறையிலான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயல்பாட்டின் மூலம் தெரு விளக்கு பழுதுகள் உடனடியாக சரிசெய்யப்படும்.

(vi) மின் கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய மின் உற்பத்தி பேனல்கள் அரசு கட்டடங்களில் அமைக்கும் திட்டத்தில் மின் கட்டமைப்புடன் கூடிய 2 மெகாவாட் திறன் உள்ள மேற்கூரை சூரிய மின் உற்பத்தி பேனல்கள் அனைத்து அரசு கட்டடங்களில் மற்றும் நிறுவனங்களில் (RESCO) முறையில் ஸ்மார்ட் சிட்டி பகுதிகளில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் சூரிய மின் உற்பத்தியாளர்களை ஒப்பந்தப் புள்ளி அடிப்படை முறையில் தேர்வு செய்யப்படும். இந்த தேர்வு

செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் நிதி முதலீடு செய்து மற்றும் சூரிய மின் உற்பத்தி பேனல்கள் அமைத்து 25 வருடங்களுக்கு பராமரிப்பர். மேலும், அந்த ஒப்பந்ததாரர் இந்த சூரிய மின்சாரத்தை அரசு துறை மற்றும் நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மூலம் 25 வருடங்களுக்கு விற்பனை செய்வர்.

**132.** பொதுக்கழிப்பிடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய கழிப்பிடங்கள் அமைத்தல் (₹ 2.10 கோடி), நகரின் பெயரை முன்னிலைப்படுத்தல் (₹ 2.10 கோடி), பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக புதிய 230 வீடுகள் கட்டுதல் (₹ 217.88 கோடி), போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் (₹ 73.50 கோடி), மாடி மேல் சூரிய சக்தி உபகரணங்கள் அமைத்தல் (₹ 22.05 கோடி), புவிசார் குறியீட்டு முறை (GIS Maping) வசதிகள் (₹ 3.15 கோடி), பாரம்பரியமிக்க கல்வி நிலையங்களான கலவைக் கல்லூரி, வ.உ.சி. பள்ளி ஆகியவற்றை புதுப்பித்தல் மற்றும் கணினிமயமாக்குதல் (₹ 5.25 கோடி), மின்னணு சுகாதார தரவு முறை (₹ 18.90 கோடி), முதன்மைக் கால்வாய் மேம்படுத்துதல் (₹ 52.50 கோடி), நகராட்சிக் கால்வாய் மேம்படுத்துதல் (₹ 21 கோடி), இருவழி வடிவமைப்பு மற்றும் மின்விசை மாற்றிகள் மாற்றுதல் (₹ 36.96 கோடி) ஆகிய முக்கியமான பணிகளை மேற்கொள்ள இந்த நிதி ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

**133.** புதிய துறைமுகப் பகுதியில் 34 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள "பாண்டி மரினா" (Pondy Marina) கடற்கரையில் சுமார் ₹ 8 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா நோக்கில் வளர்ச்சிப் பணிகள் பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டே மேற்கொள்ளப்படும். இதன் ஒரு பகுதியாக, புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் கலை கலாச்சாரப் பெருமையை பறைசாற்றும் வண்ணம் சுமார் ஐந்து ஏக்கர் பரப்பில் கைவினைப் பொருட்கள் பூங்காவும் (Handicrafts Park) அமையப்பெறும். இந்த கடற்கரை புனரமைப்புப் பணிகள் உள்ளூர் மக்களுக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும்.

**134.** பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் ஒன்பது பிரதான வாய்க்கால்களில் பொது மக்களின் நலனிற்காக மழைக்காலங்களில் நீர் தேங்கும் சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு மழைநீர் வாய்க்கால் மேம்படுத்தும் பணிகள், பல்லவாய்க்கால், மேட்டு வாய்க்கால், உழந்தை உபரி வாய்க்கால், கருவடிக்குப்பம், பாவாணர் நகர், கிருஷ்ணா நகர், வானவில் நகர், காமராஜ் சாலை முதல் வாணரப்பேட்டை வரை உள்ள உப்பார் வாய்க்கால், மூன்று இரயில்வே கல்வர்ட் ஆகிய இடங்களில் கால்வாய் அமைக்கும் பணிகள் சுமார் ₹ 62.03 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**காவல்**

**135.** கொரோனா நோய்க்கு எதிரான போரில் அயராது உழைத்துவரும் காவல் துறைக்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நமது புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் சட்டம்-ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு புதுச்சேரி மாநிலம் அமைதியாகத் திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் காவல் துறையினர் தமது பணிகளைத் திறம்பட மேற்கொள்வதை உறுதிசெய்ய, தேவையான பணியாளர்களையும், நவீன உபகரணங்களையும் இந்த அரசு தொடர்ந்து வழங்கிவருகிறது. முக்கியமான பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Cameras) நிறுவியதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது கட்டுப்படுத்தப்படுவதுடன், குற்றவாளிகள் துரிதமாகப் பிடிக்கப்படுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. உளவுத்துறையை வலுப்படுத்துதல், CCTV கண்காணிப்புகளை மேம்படுத்துதல், கட்டுப்பாட்டு அறை மேம்பாடு (காவல்துறை கட்டுப்பாட்டு வாகனங்கள் உட்பட), உலகத் தரம் வாய்ந்த / பயங்கரவாத மற்றும் வெடிகுண்டு தடுப்பு நடவடிக்கைகள், தானியங்கி போக்குவரத்து மேலாண்மை, காவலர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளித்தல் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து ₹ 50.75 கோடிக்கான பாதுகாப்பான “நகர திட்டம்” (Safe City Project) என்ற ஒரு கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பி

வைக்கப்பட்டுள்ளது. மாஹே பிராந்தியத்தில் கடலோர காவல் நிலையம் மற்றும் ஏனாம் பிராந்தியம் தரியல்திப்பாவில் புறக்காவல் நிலையம் ஆகியவை நடப்பு ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வரும். இது தவிர புதுச்சேரி, இலாசுப்பேட்டை, ரெட்டியார்பாளையம் மற்றும் கரிக்கலாம்பாக்கம் பகுதிகளில் காவல் நிலையங்கள் கட்டும் பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும். ரெட்டியார்பாளையம் காவல் நிலைய சரகத்தில் காவல் உதவி ஆய்வாளர் (Sub-Inspector) பதவி, காவல் ஆய்வாளர் பதவியாக தரம் உயர்த்தப்படும்.

**136.** மேலும் தற்போதுள்ள அனைத்து வாக்கி-டாக்கிகளையும் (Walkie-talkie) டிஜிட்டல் முறையில் (VHF Static / Hand Held Repeater sets) நவீனமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காவல் துறையில் உள்ள பழைய இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு மாற்றாக ₹ 2.68 கோடி செலவில் புதிய வாகனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காவல் துறையை வலுப்படுத்த, சென்ற ஆண்டு உத்தேசிக்கப்பட்டு தவிர்க்க முடியாத நிர்வாகக் காரணங்களினால் தள்ளிப்போன காவல் துறையில் உள்ள காலியிடங்களை நிரப்பும் பணி இந்த ஆண்டு செய்து முடிக்கப்படும். இதில் 44 உதவி ஆய்வாளர்கள், 390 காவலர்கள், 200 கடலோர ஊர்க்காவல் படையினர், 265 ஊர்க்காவல் படையினர், 29 ஓட்டுநர்கள் மற்றும் பிற தொழில்நுட்ப பணியிடங்கள் அடங்கும். நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 250.34 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**137.** எனது அரசு துறைமுக மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். அரியாங்குப்பம் நதி முகப்பில் சுமார் 1.20 இலட்சம் கன மீட்டர் அளவிற்கும் மற்றும் தேங்காய்த்திட்டு மீன்பிடித் துறைமுகத்தில் சுமார் 60,000 கன மீட்டர் அளவிற்கும் ₹ 6 கோடி மதிப்பீட்டில் மணல் தூர்வாரும் பணிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். மத்திய அரசின் சுற்றுச்சூழல், அமைச்சகத்தின் அனுமதி மற்றும் கடற்கரை வரையறைப் பகுதிக்கான அனுமதியுடன் "சாகர் மாலா" திட்டத்தின்கீழ் ₹ 7.30 இலட்சம் கனமீட்டர் மணல்பரப்பை தூர்வாரும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ₹ 33 கோடி மதிப்பீட்டில் பணிகள் இந்த ஆண்டே துவங்கப்படும். இந்தத் திட்டத்துக்காக மத்திய அரசு ₹ 18 கோடியை ஏற்கனவே விடுவித்துள்ளது. இந்த தூர்வாரும் பணிகள் முடிவடைந்தவுடன் புதுச்சேரி துறைமுகத்தில் ஆண்டொண்றிற்கு 4 இலட்சம் டன் ஏற்றுமதி - இறக்குமதி சரக்குகள் கையாளப்படும். இதன் மூலம் துறைமுகம் சார்ந்த வளர்ச்சிப் பணிகள் விரிவடையும்.

**138.** தேங்காய்த்திட்டு உப்பங்கழியில் (Lagoon) "பாண்டி நெக்லஸ்" (Pondy Necklace) திட்டத்தின்கீழ் ₹ 1.23 கோடி மதிப்பீட்டில் மண் தூர்வாரப்பட்டு இந்த ஆண்டு துறைமுகம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**139.** புதுச்சேரிக்கு தெற்கே 15 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள பன்னித்திட்டு மலட்டாறு முகத்துவாரத்தில் ஒரு சிறிய துறைமுகம் (Mini Port) அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க சென்னையிலுள்ள தேசிய தொழில்நுட்ப கழகத்திடம் கோரப்பட்டுள்ளது.

**140.** கடல்சார்ந்த திட்டமிடல் (Marine Spatial Planning) மூலம் பாதுகாக்கப்பட்ட சூழலில், புதுச்சேரி கடற்கரை பகுதிகளில் கடற்சார் பகுதிகள் வரையறுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாசுபடா வண்ணம், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் பெருந்திட்டம் (Master plan) இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும். இந்தத்திட்டத்தின் பயனாக பல புதிய வளர்ச்சித் திட்டங்களை துறைமுகம், சுற்றுலா, மீனவர் நலம், நகரமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள வழிவகை ஏற்படும். இத்தகு வளர்ச்சி கடலோர மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**141.** புதுச்சேரியிலுள்ள பழைய துறைமுகத்தின் உட்கட்டமைப்பை பழமை மாறாமல் சுமார் ₹ 20 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது. அதற்கான பணிகள் இந்த ஆண்டே துவங்கப்படும்.

**142.** புதுச்சேரி மக்களும், புதுச்சேரிக்கு வருகைதரும் சுற்றுலா பயணிகளும் தங்களது வாகனங்களுடன் கடற்கரையை ஒட்டிப் பயணிக்கும் பொருட்டு, உப்பளம் பகுதியில் உள்ள பாண்டி மரினா கடற்கரையிலிருந்து, புதுச்சேரியின் தென் பகுதியில் அமைந்துள்ள பெரிய வீராம்பட்டினம் உள்ளிட்ட பிற கடற்கரைகளையும் இணைக்கும் வண்ணம் துறைமுகவாயில் (Port Channel) வழியாக பயணிகள் மற்றும் வாகனங்களை ஏற்றிச்செல்லும் படகுப் போக்குவரத்து (Ferry Service) இந்த ஆண்டே (2020-21) துவக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**143.** புதுச்சேரித் துறைமுகம் மிதவை கலன்கள் (Vessels) இழுவை கலன்கள் (Barges), உல்லாசப் படகுகள் (Pleasure Boats/Yacht) ஆகியவற்றின், கட்டுமானம் மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் மையமாகத் திகழும் வண்ணம், புதுச்சேரியின் புதிய துறைமுக வளாகத்தில் உட்கட்டமைப்பு பணிகள் இந்த ஆண்டே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**144.** புதிய துறைமுகத்தின் நுழைவு வாயில் அருகில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலையிலிருந்து “பாண்டி மரினா” கடற்கரைக்கு உள்ளூர் மக்களும் சுற்றுலா பயணிகளும் எளிதில் சென்றடையும் வண்ணம் சுமார் ₹ 3 கோடி மதிப்பீட்டில் புதிய இணைப்புச்சாலை அமைப்பதற்கான பணிகள் இந்த ஆண்டே துவக்கப்படும்.

**145.** மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, புதுச்சேரி மாநிலத்தின் காரைக்கால் துறைமுகம் மற்றும் இலங்கையின் வடக்கு பகுதியிலுள்ள காங்கேசன் துறைமுகம் இடையே பயணிகள் மற்றும் சரக்கு ஏற்றிச்செல்லும் படகுப் போக்குவரத்து (Ferry Service) நடைபெறுவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதி ஆண்டிலேயே (2020-21) படகுப் போக்குவரத்து துவங்க ஆவன செய்யப்படும். இதற்கான பணிகளை விரைந்து முடிக்க ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**பொதுப் பணிகள்**

**146.** மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் உட்கட்டமைப்பு மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. எனது அரசு மாநிலத்தின் சொந்த நிதி மற்றும் நபார்டு (NABARD), ஹட்கோ (HUDCO) உள்ளிட்ட மத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று (Negotiated Loan) உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**147.** புதுச்சேரி மாநிலத்தின் சிவப்பு அட்டைதாரர் குடும்பங்கள் அனைவரும் குடிநீர் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இதன்மூலம், அரசுக்கு ஆண்டுக்கு சுமார்

₹ 20 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். ஆனால், இந்த வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்காக தற்பொழுது நிலத்தடி நீர் எடுக்கும் தொழிற்சாலைகள் மற்றும் பெரிய அளவிலான வர்த்தக நிறுவனங்கள் ஆகியவைகளிடமிருந்து அவர்கள் ஆழ்குழாய் கிணறு மூலம் நிலத்தடி நீர் எடுக்கும் தண்ணீருக்காக செலுத்த வேண்டிய வரி கட்டணம் உயர்த்தப்பட்டு இந்த வருவாய் இழப்பு சரி செய்வதுடன், உயர்த்தப்பட்ட வரி வருவாயின் மூலம் குடிநீர் மேம்படுத்துவதற்காக குளம், ஆறு, ஏரி போன்றவைகளின் நீர் பிடிப்புத் திறன் அதிகப்படுத்துவதற்கான வேலைகள் செய்யப்படும்.

**148.** இவ்வாட்சிப்பரப்பில் தற்பொழுது 28 முக்கிய பொதுப் பணிகளுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. குடிநீர் வழங்கல் பிரிவின்கீழ் ₹ 143.36 கோடி செலவில் 15 திட்டங்கள் புதுச்சேரியிலும், ₹ 74.64 கோடி செலவிலான நான்கு திட்டங்கள் காரைக்கால் பகுதியிலும் நடைபெற்று வருகின்றன. புதுச்சேரிப் பகுதியில் நான்கு கழிவுநீர் வடிகால் மற்றும் துப்புரவு திட்டப்பணிகள் ₹ 11.40 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. ₹ 20.16 கோடி செலவில் மூன்று முக்கிய கட்டுமானப் பணிகள் புதுச்சேரி மற்றும் மாஹேயில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாலை மற்றும் பாலங்கள் பிரிவின்கீழ் ₹ 16.19 கோடி செலவில் இரண்டு வேலைகள் மாஹேயில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**149.** புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலை NH45Aஇல் அரும்பார்த்தபுரத்தில் ₹ 23.60 கோடி செலவில் மத்திய சாலை நிதி (Central Road Fund) மூலம் நடைபெறும் மேம்பாலம் அமைக்கும் பணிகள் விரைவில் நிறைவுற்று வரும் ஆகஸ்ட் மாதத்தில் பாலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இதேபோல், திருக்காஞ்சி-சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ₹ 31.36 கோடி செலவில் நபார்டு வங்கி மூலம் கடன் பெற்று நடைபெற்றுவரும் பாலம் அமைக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு வரும் ஆகஸ்ட் மாதத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்படும்.

**150.** ₹ 23.60 கோடி செலவில் நடைபெற்று வரும் காமராசர் மணிமண்டபம் அமைக்கும் பணிகள் சுமார் 80 விழுக்காடு அளவிற்கு நிறைவடைந்துள்ள நிலையில் மீதமுள்ள பணிகள் ஜனவரி 2021க்குள் முடிக்கப்படும். உப்பனார் பாலம் கட்டும் பணிகள் டிசம்பர் 2020க்குள் முடிவடையும். இப்பணிகளுக்கு முன்னுரிமை அளித்து காலதாமதம் இல்லாமல் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

**151.** பாதாளக் கழிவுநீர் சாக்கடை அமைக்கும் திட்டத்தின்கீழ், வீடுகளுக்குப் புதிய இணைப்பிற்குப் பெறப்படும் ஒருமுறை வைப்புத் தொகையைத் தள்ளுபடி செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. உள்ளாட்சித் துறையுடன் இணைந்து

ஆறு மாதத்திற்குள் பாதாளக் கழிவுநீர் சாக்கடை இணைப்பு வழங்கும் பணிகள் நிறைவு செய்ய செயல்முறை திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

**152.** மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் கீழ்க்கண்ட சாலை மேம்பாட்டு பணிகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் ₹ 40 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. (i) 18.5 Km. தொலைவிற்கு RC 19 & RC 20 மடுகரை சாலை (₹ 14 கோடி); (ii) 10 Km. தொலைவிற்கு RC 22 சேதராப்பட்டு சாலை (₹ 15 கோடி); (iii) 5 Km. தொலைவிற்கு NH66 & NH45க்கு இணைப்பு சாலை (₹ 5 கோடி); மற்றும் (iv) 5 Km. தொலைவிற்கு RC 16 கூடப்பாக்கம் சாலை (₹ 6 கோடி).

**153.** இதேபோல் மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம், தேசிய உட்கட்டமைப்பு (National Infrastructure Pipeline) திட்டத்தின் கீழ், புதுச்சேரி-விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை NH45A விரிவாக்கத்திற்கு ₹ 130 கோடி நிதியை 2020-21 ஆண்டு திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய உள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ், வில்லியனூர்-விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில், ஆரியப்பாளையம் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

**154.** குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ், சுதானா நகர், ஜெ.ஜெ. நகர், இராகவேந்திரா நகர், கொம்பாக்கம், சுதேசி பாரதி மில் வளாகம், அங்காளம்மன் நகர், T.B. சேனடோரியம், தொண்டமாநத்தம், அரியூர் அனந்தபுரம் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் சம்பந்தப்பட்ட பணிகள் ஆகஸ்ட் 2020ல் நிறைவடையும்.

**155.** மாஹே பகுதியில் கோடைக்காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. நடைமுறையில் உள்ள அஞ்ரகண்டி குடிநீர் திட்டமும் இப்போதுள்ள மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லை. எனவே, மழைநீரைக் சேகரித்து அதனைச் சுத்திகரித்து, அதன் மூலம் மாஹே பகுதியின் குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்ய சுமார் 10 ஏக்கர் தனியார் நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் உடனடியாக துவங்கப்படும்.

**156.** மாஹேவில், நபார்டு வங்கியின் கடன் உதவி மூலம் ₹ 3.50 கோடி மதிப்பீட்டில் புல்வார் சாலை மற்றும் கூடிக்கோட்டா சாலைகள் 90 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது. விரைவில் இந்த வேலை முடிக்கப்படும். மேலும், கல்லாயி – பந்தக்கல், பல்லூர் – பந்தக்கல் மூலக்கடவு சந்திப்பு, பாரல் – சொக்லி, சொக்லி – பெருங்காடி, I.K குமரன் பிரதான சாலை, செமத்திரி சாலை, தாயங்காடி சாலை மற்றும் கடற்கரைச் சாலை ஆகிய சாலைகளை ₹ 4.01 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின்

கடனுதவியுடன் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு இந்த நிதியாண்டிற்குள் இப்பணிகள் முடிவடையும். புதுச்சேரி அரசின் சொந்த நிதியின் மூலம் மடபீடிக்கா - பூக்கம் சாலை, TV ரிலே ஸ்டேஷன் சாலை, அரசினர் விடுதி சாலை ஆகியவற்றை மேம்படுத்தும் பணிகள் ₹ 47 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு இந்த நிதியாண்டிற்குள் இப்பணிகள் முடிவடையும்.

**157.** காரைக்கால் பகுதியில் பிராவடையானாற்றின் குறுக்கே புதிய பாலம்; திருநள்ளார் - அம்பகரத்தூர் சாலையை மேம்படுத்துதல்; ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்; அரசலாற்றில் 5 MLD ஆற்று நீரை குடிநீராக சுத்திகரிக்கும் நிலையம் அமைத்தல் மற்றும் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்துக்குட்பட்ட மேலப்பொன்பேத்தியில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஆகிய பணிகள் ₹ 46.88 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் இது மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கப்படும்.

**158.** மேலும், காரைக்கால் பகுதியில் கீழகாசாக்குடி முதல் கலையம் கட்டி பாலம் வரை மேற்கு புறவழிச் சாலை அமைத்தல்; நெடுங்காடு கொம்யூனுக்குட்பட்ட அன்னவாசல் கிராமத்தில் திருநள்ளார் சாலை சந்திப்பு முதல் மாநில எல்லை வரை உள்ள சாலை; மற்றும் அரசலாறு பாலம் அருகில் காரைக்கால் மேடு முதல் திருவேட்டக்குடி வரை உள்ள சாலைகள் மேம்படுத்தும்

பணிகள்; திருநள்ளார் பகுதியில் உள்ள செருமா விலங்கை கிராமம்; அம்பகரத்தூர்; மற்றும் நல்லம்பல் ஆகிய பகுதிகள்; கீழகாசாக்குடி பகுதியில் உள்ள இலட்சுமி நகரில் 12,00,000 லிட்டர் கொள்ளவு உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் ஏனைய பணிகள் ₹ 70.23 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**159.** மேலும், காரைக்கால் – திருநள்ளார் சாலை (நல்லூர் ஆற்றுச் சாலை உட்பட); நிரவி - I மற்றும் II சாலைகள் மற்றும் விழுதியூர் சாலை, திட்டச்சேரி சாலை (ஆயிரங்காளி அம்மன் கோயில் நுழைவு வரை); திருநள்ளார் – நல்லாத்தூர் சாலை ஆகிய சாலைகளை மேம்படுத்தும் பணிகள்; திருமலைராயன் ஆற்றின் குறுக்கே மதகு கட்டும் பணி, அத்திப்படுகை கிராமத்தில் அரசலாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல், திருநள்ளாரில் உள்ள நான்கு மாட வீதிகளை செப்பனிடுதல், திருநள்ளார் கோயில் நகரத்தில் பாதாள சாக்கடை அமைத்தல் போன்ற பணிகள் சுமார் ₹ 41.35 கோடி செலவில் இந்த நிதியாண்டில் மேற்கொள்ள ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**160.** ஹட்கோ (HUDCO) வங்கியிடம் ₹ 3.50 கோடி கடன் பெற்று புதுச்சேரியில் பல பகுதிகளில் 34 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு இந்த நிதியாண்டிற்குள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்படும். நடப்பு நிதியாண்டில்

இத்துறைக்காக ₹ 519.14 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையில் பல ஆண்டுகளாக பணிபுரியும் வவுச்சர் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகையை இரட்டிப்பாக்கி வழங்கப்படும்.

**வருவாய்**

**161.** கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பேரிடர் மேலாண்மை சட்டம் 2005ன் அடிப்படையில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்து அயராது உழைத்துவரும் வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளை இத்தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**162.** தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிதி உதவியுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில், பேரழிவினால் ஏற்படும் உயிரிழப்புகள், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை கணிசமான அளவில் குறைக்க “பேரழிவு அபாயக் குறைப்புக்கான சென்டாய் கட்டமைப்பு” (Sendai Frame Work for Disaster Risk Reduction) நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும்.

**163.** 483 தனிநபர் பட்டாக்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இலவச மனைப்பட்டா வழங்கும் விதிகளின்கீழ் (LGR), காரைக்கால் மாவட்டத்தில் 97 தகுதிவாய்ந்த நிலமற்ற ஏழைக் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. மேலும், இலவச மனைப்பட்டா வழங்கும் விதிகளின்கீழ் வழங்கப்பட்ட பட்டாக்கள் அனைத்தும் இந்த வருடம் கணினிமயமாக்கப்பட்டு பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் துறையின் வலைதளத்தில் (Website) பதிவேற்றப்படும். வருவாய்த் துறையில் காலியாக உள்ள துணை வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நில அளவையாளர்கள் பதவிகள் விரைவில் நிரப்பப்படும்.

**164.** நிலமற்ற கிராமப்புற கூலித் தொழிலாளர்களுக்கு வருவாய்த் துறை மற்றும் நில அளவை துறையின் மூலம் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படும். மேலும், கோயில் குத்தகை நிலங்களில் குடிசை வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசின் வீடு கட்டும் திட்டங்களின்கீழ் தளம் போட்ட வீடு கட்டுவதற்கு இந்து அறநிலையத்துறையின் மூலம் தடையில்லா சான்றிதழ் வழங்கப்படும்.

**அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்**

**165.** காரைக்காலில் உள்ள திருநள்ளாற்றில், ₹ 3.75 கோடி செலவில் ஏற்கனவே அறிவித்த கோளரங்கம் அமைக்கும் பணியை ஒருங்கிணைத்து விண்வெளி விளக்க மற்றும்

கண்டுபிடிப்பு மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி 5 ஏக்கர் நிலம் அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு கண்டறியப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

**166.** மத்திய அரசின் ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதுச்சேரியில் ₹ 8 கோடி மதிப்பீட்டில் கடலோரப் பகுதி மேம்பாட்டு பெரும் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு புதுச்சேரி மீனவப் பகுதி கிராமங்களான சின்னகாலாப்பட்டு, பிள்ளைச்சாவடி, புதுக்குப்பம் மற்றும் பனித்திட்டு ஆகிய கிராமங்களில் மீன் ஏல விற்பனைக் கூடம் மற்றும் பெரிய வீராம்பட்டினத்தில் மீனவ செப்பனிடும் கூடங்கள் ₹ 4 கோடி செலவில் அமைக்கப்படும். மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த Open Sea Cage Culture திட்டம் ₹ 2.42 கோடி செலவில் செயல்படுத்தப்படும். புதுச்சேரியில் உள்ள மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ₹ 2 கோடி செலவில் விரிவான திட்டம் செயல்படுத்தப்படும். மணப்பட்டு மற்றும் பனித்திட்டுக் கடற்கரை பகுதிகளை மேம்படுத்தி, கடல் பூங்கா அமைக்கப்படும்.

**167.** மேலும், தேங்காய்த்திட்டு கடலோரப் பகுதியில் உள்ளூர் மக்கள் பயனடையும் பொருட்டு பாண்டி ஆரம் (Pondy Necklace என்ற சுற்றுலாத் திட்டம் ₹ 18.3 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

கடலோரப் பகுதியிலுள்ள மணல் மேடுகளைக் பாதுகாக்க ₹ 1.72 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படும். கடலோர கிராமங்களில் உள்ள சதுப்பு நிலக் காடுகள் ₹ 8.08 கோடி செலவில் பாதுகாக்கப்படும். புதுச்சேரியில் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் ₹ 25 கோடி செலவில் செயல்படுத்தப்படும். மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையில் 'திட்ட மேலாண்மைச் சிறப்பு அமைப்பு' ஒன்று உருவாக்கப்படும்.

**நகர மற்றும் கிராமத் திட்டமிடல்**

**168** பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், தகுதியுள்ள அனைவருக்கும் வீடு வழங்கும் விதமாக, தற்போது கட்டப்பட்டு வரும் 3,000 வீடுகளின் கட்டுமானப் பணி நிறைவடையும், மேலும் 3,000 வீடுகள் கட்டுவதற்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திடம் அனுமதி பெறப்படும். மேலும், வீட்டுவசதி அமைச்சகத்தின் அனுமதி பெற்று பல்வேறு மாநில / மத்திய வீடுகட்டும் திட்டங்களின்கீழ் முன்னர் கட்டப்பட்டு தற்போது சிதிலமடைந்த நிலையில் உள்ள வீடுகளை மறுசீரமைப்பு செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு மேற்கொள்ளும்.

**169.** அங்கீகரிக்கப்படாத மனைகளை முறைப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் நல்ல வரவேற்பு பெற்றுள்ளதால், அதே போன்று, அங்கீகரிக்கப்படாத கட்டடங்களை முறைப்படுத்த இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும். விரிவான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் 2036க்கான வளர்ச்சித் திட்ட மையங்கள் அடையாளம் காணப்பட்டு விரைவில் அறிவிப்புகள் வெளியிடப்படும். காரைக்கால், மாஹே, ஏனாம் ஆகிய பகுதிகளுக்கு புதிய மாஸ்டர் பிளான் GIS அடிப்படையில் உருவாக்கப்படும். நகர மற்றும் மேம்பாட்டு சட்டத்தினைத் திருத்தி அமைத்து ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் வரைமுறைகள் சீர்செய்யப்படும். கீழ்க்கண்ட இரு திட்டங்களின் மூலம் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிப்பதற்கு தலா, ₹ 4 கோடி வீதம் மொத்தம் ₹ 8 கோடி ஒதுக்கப்படும்.

(i) குடிசை மேம்பாட்டுத் திட்டம் (Slum Upgradation Programme).

(ii) மூலதன வளர்ச்சித் திட்டம் (Capital Development Project).

**சுற்றுலா**

**170.** கொரோனா வைரஸ் பரவலால் இவ்வாட்சிப்பரப்பில் சுற்றுலாத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். முழு ஊரடங்கு

மற்றும் மக்களின் நடமாட்டத்தில் உள்ள கட்டுப்பாடுகளால் கடந்த இரண்டு மாதங்களாக பல்வேறு பகுதிகளில் இருந்துவரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. எனினும், தற்போது ஊரடங்குக் கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டு வருவதால், சுற்றுலாத் தொழில் வரும் மாதங்களில் முன்னேற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**171.** சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ள நிலையிலும், சுற்றுலாவை ஊக்குவிக்கும் பொருட்டு நடத்தப்பட்டு வரும் நிகழ்ச்சிகள் மற்றும் பண்டிகைக் காலங்களில் நடத்தப்படும் சாகச விளையாட்டு விழாக்கள் மற்றும் கடற்கரை திருவிழா போன்றவை இந்த ஆண்டும் நடத்தப்படும். காரைக்கால் பகுதியில் உள்ள திருநள்ளாற்றில் ஆன்மீகப் பூங்கா தொடர்பான பணிகள் இந்த ஆண்டில் நிறைவடையும். சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, கோவில்பத்து அரசு சுற்றுலா விடுதி புனரமைக்கப்பட்டு, கூடுதல் அறைகள் கட்டப்படும். ஏனாம் சுற்றுலா கோபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொழுதுபோக்குப் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் நிறைவுற்று அதன் இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். மாஹேயில் உள்ள மையாழி நதியில் படகு வீடு இயக்க ஆவன செய்யப்படும். நிதி ஆயோக் (NITI AAYOG) தொழில்நுட்ப ஆலோசனையின்கீழ், புதுச்சேரியில் உல்லாசப்

படகுத்துறையில் பாய்மரப் படகுகள் இயக்கவும், மணப்பட்டு பகுதியில் ஒரு சுற்றுலா பொழுதுபோக்கு மண்டலம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**172.** கடற்கரைகளில் மரக்குடில்கள் அமைத்தல், பாண்டி மெரினா கடற்கரை சாலையை அதன் முகத்துவாரம் வரை விரிவாக்கம் செய்தல் மேலும் பாண்டி மெரினாவிற்கும் வீராம்பட்டினம் மாணிக்க கடற்கரைக்கும் (Ruby Beach) இடையே படகு சவாரி ஏற்படுத்துதல், பழைய துறைமுகப்பகுதியில் சுற்றுலா மையம் உருவாக்குதல், நேரு வீதியில் பாதசாரிகளுக்கான நடைபாதை விரிவாக்கம் செய்தல் போன்ற புதிய மேம்பாட்டுப் பணிகளும் இந்த ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரி, வீராம்பட்டினம், அரியாங்குப்பம், முருங்கப்பாக்கம் மற்றும் தேங்காய்திட்டு கழிமுகப்பகுதிகளை உள்ளடக்கிய பாண்டி நெக்லெஸ் என்ற சுற்றுலாத்திட்டம் ₹ 18.50 கோடி மதிப்பீட்டில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையுடன் இணைந்து இந்த ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

**173.** மோட்டார் வாகன சட்டம் 1988, பிரிவு 135ன் படி, வாகன விபத்துகளுக்கான காரணங்களைத் தீர ஆராய்ந்து அதற்கு உண்டான தீர்வுகளை அளிப்பதற்காக போக்குவரத்து துறை,

போக்குவரத்து காவல் துறை மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இக்குழு அளிக்கும் பரிந்துரைகளின்படி, வருங்காலத்தில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**174.** புதுச்சேரியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு சாலை சந்திப்பு விரிவாக்கம் (Junction improvements), பேருந்து நிறுத்தங்களை மாற்றியமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த நிதியாண்டு முதல் அனைத்து போக்குவரத்து வரிகளையும் இணையதளம் மூலம் செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப்படும். திருச்செந்தூர், பழனி மற்றும் இராமேஸ்வரம் போன்ற ஆன்மீகத் தலங்களுக்கு புதுச்சேரியிலிருந்து புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம் மூலமாக நேரடி பேருந்துப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படும். புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழகத்துக்குக் கூடுதலாக ₹ 18 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

**175.** பொருளாதார வளர்ச்சி மட்டுமே சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் சமமான வளர்ச்சிக்கு உத்திரவாதம் அளிக்காது என்பதால், எனது அரசு, புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள

அனைத்து மக்களின், குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக ₹ 348 கோடி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**176.** நடப்பு நிதி ஆண்டில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியினை உறுதிசெய்யும் பொருட்டு எனது அரசானது டாக்டர் அம்பேத்கர் சமூக நீதி பாதுகாப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை இந்த நிதி ஆண்டு முதல் செயல்படுத்தும். இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

(i) பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் (PMAY) ஆதிதிராவிட வகுப்பினருக்கு, வீடு கட்ட தற்போது மத்திய அரசின் மானியமான ₹ 1.50 இலட்சத்தையும் சேர்த்து ₹ 4 இலட்சம் வழங்கப்படுகிறது, இது நடப்பு நிதி ஆண்டில் மேலும் ₹ 1 இலட்சம் உயர்த்தப்பட்டு ₹ 5 இலட்சமாக வழங்கப்படும் என்பதை இந்தப் பெருமை வாய்ந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டுக்காக, நெல், மணிலா, எள், கரும்பு, பருத்தி, சிறுதானியம், பயறு வகைகள் மற்றும் தீவனப் பயிர்கள், சாகுபடி செய்யும்

ஆதிதிராவிட இன விவசாயிகளுக்கு வேளாண் துறையால் அறிவிக்கப்பட்டுள்ள மானியத்துடன் கூடுதலாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 1,000 உயர்த்தி வழங்கப்படும்.

(iii) கறவைப் பசு வாங்கும் ஆதிதிராவிடர்களுக்கு 25 விழுக்காடு மானியத் தொகை உயர்த்தப்பட்டு வழங்கப்படும்.

(iv) புதுச்சேரியில் தனியார் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விலையில்லா கைக்கணினி (Tablet) பள்ளிக் கல்வித் துறையின் புதிய திட்டத்தையொட்டி வழங்கப்படும்.

(v) ஆதிதிராவிட மகளிருக்கு கால்நடை வளர்ப்பு, விவசாயத் தொழில், மீன்வளர்ப்பு பிரிவு மற்றும் இதர தொழில்களில் வாங்கும் கடனுக்கு, 3 விழுக்காடு வட்டி அரசின் மானியமாக வழங்கப்படும். இத்திட்டம் ஆதிதிராவிட மகளிருக்குப் பேருதவியாக அமையும்.

(vi) தற்பொழுது ஆதிதிராவிடர்களுக்கு திருமண நிதி உதவியாக ₹ 75,000 வழங்கப்பட்டு வருகிறது. இது உயர்த்தப்பட்டு ₹ 1 இலட்சமாக வழங்கப்படும்.

(vii) வளர்ச்சி, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தன்னிறைவு பெற்ற ஆதிதிராவிடர்கள் வசிக்கும் மாதிரி கிராமங்கள் இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

(viii) ஆதிதிராவிட மாணவர்களின் நலனுக்காக உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க ₹ 5 கோடி ஒதுக்கப்படும்.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**177.** எனது அரசு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் அவர்களின் சமூகப் பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்குவது மட்டுமின்றி அவர்களுக்கு உண்டு உறைவிட விடுதி (Hostel) வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. மேலும், தேசிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (NBCFDC) மூலமாகக் கடன் பெற்று, புதுச்சேரி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வளர்ச்சிக் கழகம் (PBC & MDC) மூலமாக, பயனாளிகளுக்குக் கல்விக் கடன், சிறு தொழில் கடன் முதலியன வழங்கப்பட்டு வருகின்றன. ஏழ்மை நிலையிலுள்ள கைவினைக் கலைஞர்களுக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய அனைத்து வசதிகளும், சிறுபான்மையினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. புதுச்சேரி சிறுபான்மையினர் நலக் குழுமத்திடம் இருந்து பெற்ற கடனைப் பயனாளிகள் முறையாகத் திருப்பி செலுத்தாத காரணத்தினால், அந்தக் குழுமம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மேம்பாட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, இவ்வாண்டு ₹ 5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மாணவர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க ₹ 5 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**178.** புதுச்சேரியை சேர்ந்த 1,205 இஸ்லாமிய மாணவ மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு ₹ 25,79,000 வழங்கப்பட்டது. இது இந்த வருடம் இரட்டிப்பாக வழங்க ஆவன செய்யப்படும். இந்த உதவித் தொகை பெற குடும்ப வருமானம் ₹ 60,000 என உள்ளதை ₹ 2 இலட்சமாக உயர்த்த ஆவன செய்யப்படும். இதன் மூலம் அதிக மாணவ மாணவியர் பயன்பெறுவர்.

**179.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள 40 மசூதிகளுக்கு புனித ரமலான் மாதத்தில் ஒவ்வொரு மசூதிக்கும் ₹ 30,000 வீதம் இந்த ஆண்டு ₹ 12 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இதை அரசுத் திட்டமாக மாற்ற இந்த ஆண்டு ஆவன செய்யப்படும். சென்ற ஆண்டு

புனித ஹஜ் பயணம் மேற்கொண்ட 84 நபர்களுக்கு ₹ 16,000 வீதம் மொத்தம் ₹ 13.44 இலட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இதை அரசுத் திட்டமாக மாற்ற இந்த ஆண்டு ஆவன செய்யப்படும்.

**180.** காரைக்கால் பகுதியில் அதிக வக்பு சொத்துக்கள் உள்ளதால், அவற்றை நிர்வகிக்க வக்ஃபு வாரியத்தின் கிளையை மத்திய சிறுபான்மை அமைச்சகத்தின் நிதி உதவியுடன் காரைக்காலில் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**சமூக நலம்**

**181.** எனது அரசு, மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள கைவினைக் கலைஞர்களுக்கு தற்போதுள்ள பல்வேறு நலத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த உறுதிபூண்டுள்ளது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி அளிக்கிறேன். நிதித் தட்டுப்பாடு இருந்தபோதிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதா மாதம் ஓய்வூதியத் தொகை தவறாமல் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 20,951 மாற்றுத் திறனாளிகளுக்கு 12 மாதங்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்காக ₹ 51 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**182.** புதுச்சேரி அரியாங்குப்பம் பகுதி மற்றும் காரைக்கால் பகுதியில் இயங்குவது போல, புதுச்சேரி வில்லியனூர் பகுதியிலும் “பாதுகாப்பு மற்றும் பொழுது போக்கு மையம்“ (Day Care Centre) ஒன்றை மூத்த குடிமக்களின் நலனுக்காக நடப்பு நிதியாண்டில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**183.** எனது அரசு, தொடர்ந்து பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. வருவாய்ப் பற்றாக்குறை இருந்தபோதிலும், எனது அரசு, கருவுற்ற தாய்மார்களுக்கு பேறு காலத்துக்கு முந்தைய மற்றும் பிந்தைய நலத்திட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க இணை உணவு வழங்குதல், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், முதியோர் மற்றும் முதிர்க்கன்னிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல் ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் என்று இந்தத் தருணத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி அளிக்கிறேன். எனது அரசு முதியோர் ஓய்வூதியத் திட்டங்களுக்கு மட்டும் வருடத்திற்கு சுமார் ₹ 360 கோடி செலவிடுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் 1,50,000 முதியவர்கள் பயனடைகிறார்கள். இந்த நிதி ஆண்டில் மேலும் 10,000 பயனாளிகளுக்கு முதியோர் மற்றும் விதவைகள் உதவித் தொகை வழங்கப்படும்.

**184.** கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் இளம் பெண்களிடையே இரத்த சோகை நோயை கண்காணிப்பதற்கு அனைத்து சமுதாய நலக்கூடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பொது மருத்துவமனைகளுக்கு ஹீமோகுளோபின் மீட்டர்கள் வழங்கப்படும். தேசிய ஊட்டச்சத்து திட்டத்தின் “போஷான் அபியான்” மூலம் மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் (Jan Andolan), ஊட்டச்சத்து பற்றிய தகவல், கல்வி, தகவல்தொடர்பு (IEC) நடவடிக்கைகள் மூலம், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் வளரும் இளம் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இளம் பெண்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த அனைத்து அரசுப் பெண்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நாப்கின் எரிக்கும் இயந்திரங்கள் இந்த ஆண்டில் பொருத்தப்படும்.

**185.** மத்திய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த மையம் மூலமாக வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தேவையான உதவி மற்றும் ஆதரவினை அரசு வழங்கி வருகிறது. இது தற்போது புதுச்சேரி ராஜீவ் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் ஒரு தனி வார்டில் இயங்குகிறது. இதற்கு பிரத்யேகமாக சாரம் வெங்கடேஸ்வரா நகரில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

**186.** மக்களிடையே வறுமையைக் குறைத்திடவும் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. மேலும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரங்களைச் சீரமைக்க எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கோவிட்-19 நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட ஏழை மக்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுக்கவும், புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**187.** 2020-21ஆம் ஆண்டில் கிராமப்புற ஏழை மக்களின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு "தந்தை பெரியார் கிராமப்புற மகளிர் மறுமலர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டம் சுமார் ₹ 100 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சித் துறையில் பதிவு செய்துள்ள சுய உதவிக்குழுக்களுக்கு புதுச்சேரி அரசு, மத்திய அரசு மற்றும் வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படும். இதன் விவரங்கள் பின்வருமாறு :

(i) 7,000 பயனாளிகளுக்கு பசுமாடு, கன்றுகள் வாங்கவும், கால்நடைத் தீவனம் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள், விவசாய மகளிரால் அமைக்க உதவி வழங்கப்படும்.

இந்தத் திட்டம் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள 86 பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக மொத்த ₹ 31.33 கோடி செலவிடப்படும்.

(ii) காய்கறி சாகுபடி, சிறுதானிய உற்பத்தி மற்றும் விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், மற்றும் சுய உதவி குழுக்களின் நிறுவனங்களை ஊக்குவிப்பதன் மூலம் 3,000 பெண் விவசாயிகள் பயனடைவார்கள். நெல், பருப்பு வகைகள் மற்றும் பருத்தி பதப்படுத்துதல் சார்ந்த தொழிற்சாலைகள், பெண் உற்பத்தியாளர்கள் மூலம் நிறுவப்படும். இத்திட்டம் 35 பஞ்சாயத்துகளில் ₹ 26 கோடியில் வங்கிக் கடன் உதவி மூலம் செயல்படுத்தப்படும்.

(iii) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மூலம் வழங்கப்படும் உலக வங்கி நிதியினால் செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் 2,000 மீனவப் பெண்கள் பயனடைவார்கள். இத்திட்டம் 18 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதாரமான முறையில் மீன்களை விற்பனை செய்தல், மீன்களை உயர்தரத்துடன் உலர்த்துவதற்காக 12 கிராமங்களில் சூரிய சக்தி

நிலையங்கள் அமைத்தல், கடலோரக் கிளிஞ்சல்கள், ஆபரணங்கள், மீன்குடில்கள், தேங்காய்நார் அடிப்படையிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், புறக்கடை கோழி வளர்ப்பு, காடை வளர்ப்பு, சிறுதானியம் மற்றும் காய்கறி சாகுபடி ஊக்குவிப்பு போன்றவற்றின் மீது தனிக்கவனம் செலுத்தப்படும். இதற்காக ₹ 2.60 கோடி ஒதுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(iv) 500 உற்பத்திக் குழுக்களுக்கும், 4 உற்பத்திக் குழு கூட்டமைப்பிற்கும் ₹ 2.50 கோடி தொடக்க நிதி வழங்கப்படும். வருமானத்தை உருவாக்கும் உற்பத்தி பிரிவுகளை நிறுவுவதற்கு தேவையான நிதிகளை வங்கிக் கடன் மூலம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்பொழுது உள்ள அமைப்புகளின் முகக்கவசம் உற்பத்தி அளவு, கிருமி நாசினி மற்றும் சோப்பு உற்பத்தியின் அளவு விரிவுபடுத்தப்படும். சோப்புத் தூள், ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் நிறுவனங்கள் புதியதாக அமைக்கப்படும். இயற்கை பொருட்கள் அதாவது உணவுதானியம், தேன், சிறுதானியம் மற்றும் பருப்பு

வகைகள் கொள்முதல் செய்வதற்காக தனி பிரிவுகள் ஏற்படுத்தப்படும். இவை அனைத்தும் மகளிர் விவசாய உற்பத்தி குழுக்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

(v) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் ஊக்குவிக்கப்படும் சுய உதவிக் குழுவில் உள்ள ஒவ்வொரு பெண்களுக்கும் ₹ 10,000 வீதம் சிறப்பு நுகர்வுக் கடன் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் திட்ட மதிப்பு ₹ 34 கோடி ஆகும். கிராமப்புற ஏழை மக்களின் இடர் களைவதற்காக 3 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படும். சுமார் 37,000 ஏழை கிராமப்புற குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு இத்திட்டத்தினால் பயனடையவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

(vi) 108 கிராமப் பஞ்சாயத்துகளில், சுகாதார, தகவல் தொழில்நுட்பம், வங்கி நிதி மற்றும் காப்பீட்டு துறை, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல். மின் மற்றும் மின்னணுத் துறை எனப் பல்வேறு துறைகளில் 2020-21ஆம் ஆண்டில் 1,100 கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

அளித்து அதன் மூலம் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும். இதற்காக ₹ 7.92 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். ஒரு தேர்வாளருக்கு சராசரியாக ₹ 72,000 செலவிடப்படும்.

(vii) மூன்று கிராமப்புற வாழ்வாதார மையங்கள் (Rural Livelihood Center) முறையே காரைக்கால், வில்லியனூர், மற்றும் அரியாங்குப்பம் ஆகிய பகுதிகளில் நிறுவப்படும். இதன் மூலம் மகளிர் தொழில் முனைவோர் தொழில் செய்யத் தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டு, குறைந்த கட்டணத்தில் அதனைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் கிராமப்புற பகுதிகளில் தொழில் தொடங்க விரும்பும் பெண்களின் மூலதனச் செலவுகள் குறைக்கப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க ஊக்குவிக்கப் படுவார்கள்.

(viii) ₹ 5.36 கோடி செலவில், 745 இளைஞர்களுக்கு, பசுமைப் பணிகள் சூப்பர்வைசர், சரக்கு முன்பதிவு சூப்பர்வைசர் போன்ற பிரிவுகளில், புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இரண்டு கடற்கரை மாவட்டங்களிலும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

(ix) மகளிர் தலைமையிலான குடும்பங்களுக்கு, குறிப்பாக வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பங்களுக்கு, கோவிட்-19ஆல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிப்பு குறைப்பு நிதி (Vulnerable Redemption Fund) வழங்க தனிகவனம் செலுத்தப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புக்கு தலா ₹ 1.50 இலட்சம் என 108 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுக்கு மொத்தமாக ₹ 1.62 கோடி வழங்கப்படும்.

**188.** புதுச்சேரி மாநிலத்தில் 100 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிராமப்புற சாலைகள் அமைத்திட மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது. அடுத்த கட்டமாக கிராமப்புறங்களிலுள்ள வேளாண் சந்தைகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றை இணைக்கும் பொருட்டு கிராமப்புறச் சாலை அமைப்பதற்கு மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ள திட்டத்தின் மூலம் 400 கிலோ மீட்டர் கிராமப்புற சாலைகளை மேம்படுத்திட (GIS) தொழில்நுட்பத்தில் தேவையான பணிகள் புதுச்சேரி மாநிலத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**189.** திரவக் கழிவுகளை பயனுள்ள வகையில் நிர்வகிக்க, நமது அரசு இந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து இரண்டாம் கட்ட தூய்மை பாரத இயக்கம்-2ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

மகாத்மா காந்தி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 20,000 கிராமப்புறத் தொழிலாளர்களுக்குக் கொரோனா காலத்தில் வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்காக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. புதுச்சேரி பகுதியில் உள்ள பெண்கள் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிகள் மூலம் தலா ₹ 50,000 சிறு தொழில் துவங்குவதற்காக வட்டி மானியத்துடன் கடன் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 54.14 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திட்டம் மற்றும் ஆராய்ச்சி**

**190.** புதுச்சேரி அரசில் உள்ள பல்வேறு துறைகளும் அரசு நிறுவனங்களும், அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டங்களின் முழு விவரங்கள், திட்டங்களின் நோக்கங்கள், திட்டத்தின் பயனை பெற தகுதிகள் போன்ற பல்வேறு விவரங்களைப் பொது மக்களுக்கு அதிக அளவில் தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. எனவே அனைத்துப் பொது மக்களும் பயன் பெறும் விதத்தில், புதுச்சேரி அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அனைத்து திட்டங்களும் விவரங்களும் உள்ளடக்கிய “மக்கள் கையேடு” ஒன்றை அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைந்து, திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறையால் வெளியிடப்படும்.

இதன் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு அரசு திட்டங்கள் குறித்து ஏதேனும் சந்தேகம் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்ய 24 மணி நேரமும் செயல்படும் “உதவி மையங்கள்” புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் நிறுவப்படும். இதன் மூலம் மக்கள் எந்நேரமும் அரசுத் திட்டங்களை குறித்த விவரங்களைப் பெற்றுக் கொள்வதுடன் அரசின் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் முறைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

**நிர்வாகச் சீர்திருத்தம்**

**191.** சாதாரண மனிதனின் சேவைகள் குறிப்பிட்ட காலக்கெடுவோடு முடிப்பதற்காக அல்லது அரசின் சேவையை குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுவதற்காக எனது அரசு தகவல் அறியும் உரிமை சட்டம் போன்று “பொதுச் சேவையை வழங்குதல் சட்டம்” (Public Services Delivery Act) ஒன்றை இவ்வாட்சிப்பரப்பில் நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசுத் துறையில் காலியாக உள்ள பதவிகள் நேரடி மற்றும் பதவி உயர்வு மூலம் நிரப்ப உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு நான்கு மாத காலத்திற்குள் நிரப்பப்படும். அரசு பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பல துறைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு நிலுவையில் உள்ள சம்பளத்தை வழங்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவுரை

**192.** நிறைவாக, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நிதி மேலாண்மையை எனது அரசு இதுவரை திறம்படக் கையாண்டு வருவது மட்டுமல்லாமல், மத்திய அரசின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது என்பதை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எதிர்பாராதவிதமாக கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பணப்புழக்கத்தை அதிகரித்தல் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி அதன் மூலம் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வறுமையைக் போக்குதல் போன்ற பணிகள் தொடர்புடைய கடினமான சவால்களை இவ்வரசு எதிர்நோக்கியுள்ளது. நிதி மேலாண்மையில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளாமல், அதே சமயத்தில் இச்சவால்களுக்கு தீர்வுகண்டு, மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையொற்றி பல மக்கள் நலத்திட்டங்களை நான் இந்த வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளேன்.

**193.** சுகாதாரம் மற்றும் கல்வித் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை மற்றும் கல்வி வழங்குவதற்கு எனது அரசு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கும். சாலை உட்கட்டமைப்பு வசதிகளை


மேம்படுத்த இந்த வரவு-செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொலிவுறு நகரத் திட்டம் (SMART CITY) மூலம் நகர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் எனது அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மேலும், வேளாண்மை, மின்சாரம், குடிநீர், ஊரக வளர்ச்சி, சமூகநலம் ஆகியவற்றிற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே தொடக்க உரையில் கூறியதுபோல், பொது மக்களின் ஒத்துழைப்போடு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை கொரோனா நோய் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு எனது அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

**194.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிர்வாக இடர்களுக்கு இடையே 2020-21ஆம் ஆண்டுக்கான இந்த மக்கள் நலன் சார்ந்த வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாண்புமிகு அவையின்முன் சமர்ப்பித்துள்ளேன். இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு மதிப்புமிகு பேரவை உறுப்பினர்களின் மேலான ஆதரவை நான் கோருகின்றேன்.

**வாழ்க ! பாரதம் !!**

**வெல்க ! புதுச்சேரி !!**

**நன்றி ! வணக்கம் !!**




*வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் :* **அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009**